
KALKI 4.9.94 ரூ. 3.00

கல்கி




யானைமேல் ஏறிப் படிக்க வர்றாங்க!

பல்லாயிரவர் வேண்டுகோளுக்கு இணங்கி
6ஆம் பதிப்பிற்கும் இலவச நூல்கள் உண்டு.

Dictionary 6ஆம் பதிப்பு அச்சாகிறது. தேவைக்கு செப்டம்பர் 20க்குள் பணம் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளலாம். புத்தகங்கள் அக்டோபர் 1ஆம் தேதி முதல், பணம் வந்த வரிசைப்படி அனுப்பி வைக்கப்படும்.


ரூ. 330.00க்குரிய 5 நூல்களை ரூ. 200.00 அனுப்பிப் பெறலாம்.

ரூ195க்குரிய 3 நூல்களை ரூ120க்கே தருகிறோம். ரூ. 120 மட்டுமே அனுப்புக. அதாவது Dictionary ரூ 120. கொடுத்து வாங்குவோர்க்கு மேலும் இரு நூல்கள் (ரூ 50 + 25 = 75) இலவசமாகத் தருகிறோம்.



English - English - Tamil DICTIONARY

பக்கம் 1718; ஓர் இலட்சம் விளக்கச் சொற்கள்; சரியான உச்சரிப்பு; மிகக் குறைந்த விலை ரூ120 இரண்டு ஆண்டில் ஐந்து பதிப்புக் கண்ட நூல் இது! இலவச நூல். (i) **Check up your English in a week.** பக்கம் 457 விலை ரூ 50. (ஓரளவு ஆங்கிலம் கற்றவர்கள் தங்கள் ஆங்கில அறிவைச் சரிபார்த்துக் கொள்ளலாம்.) இலவச நூல். (ii) **Letter writing for all Occassions** பக்கம் 208; விலை ரூ 25 (ஏராளமான கடிதங்கள் இதில் உண்டு).



ரூ135க்குரிய 2 நூல்களை ரூ. 80க்கே தருகிறோம்.

ஆங்கிலம் கற்க மிகச் சிறந்த நூல்.

ஆங்கிலப் பேராசான்

முன்னரே வந்த ஏழு நூல்களின் தொகுப்பு நூல் இது. இலக்கணக் கூறுபாடுகளைத் தமிழிலேயே விளக்குகிறது இது! இதற்கு 'வர்த்தமானன் இங்கிலீஷ் ஸ்பீகிங் கோர்ஸ்' (பக்கம் 606. விலை ரூ 55) என்னும் நூலினை இலவசமாகத் தருகிறோம். Dictionaryயும் ஆங்கிலப் பேராசானும் வேண்டுவோர் ரூ. 200 அனுப்பலாம். அவர்களுக்கு மொத்தம் 5 நூல்கள் கிடைக்கும்.


20.9.94க்குள் பணம் (M.O அல்லது D.D) அனுப்புவோர்க்கு மட்டுமே இந்தச் சலுகைகள்! புத்தகங்கள் 1.10.94 லிருந்து V.P.P. மூலம் அனுப்பப்படும். (முன்னரே பணம் அனுப்பியவர்களுக்கு இப்போது நூல்களை அனுப்பிக் கொண்டிருக்கிறோம்) தபால் செலவைத் தபால்காரரிடம் கொடுத்து நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



பணம் அனுப்ப வேண்டிய முகவரி
VARTHAMANAN PATHIPPAGAM
A.R.R. Complex, 141, Usman Road,
T. Nagar, Madras 600 017. (Near Panagal Park)

வாசகர்களுக்கு

மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம்!



அடுத்த இதழில்...

ஆயிரம் புத்தகங்கள் படித்தாலும்
ஒரு கீதைக்கு ஈடாகுமா?
இன்றைய இளைஞர்களுக்காகவும்
இதயத்தால்
இளைஞர்களுக்காகவும் கீதையைச்
சாறு பிழிந்து தருகிறார் -



சுகி சிவம்


எழுதும்

கனவு மெய்ப்படும்

எழுச்சித் தொடர் ஆரம்பம்!

மற்றும் :

கல்யாணத்துக்குப் பிறகு
♥காதல்♥
காணாமல் போகுமா?
— *கவர் ஸ்டோரி*





• தேசிய எழுத்தறிவு இயக்க டைரக்டர் ஜெனரல் சுதிப் பானர்ஜி, கோவை கலெக்டர் சங்கர் : நேரடிப் பார்வை...

கி. பி. 2000க்குள் இந்தியாவில் அத்தனை பேருக்கும் கல்வி வழங்கி விட வேண்டும் என்று சில வருஷங்களுக்கு முன் ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள்; ஞாபகமிருக்கலாம். அந்த ஜோரில் உருவானது அறிவொளி இயக்கம்.

இந்தியாவில் மொத்தமாக ஐநூறு மாவட்டங்களில் வெகு தீவிரமாகத் தொடங்கப்பட்ட இவ்வியக்கம், தமிழகத்தில் குறிப்பிடும்படியான ரிசல்ட் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நிஜமா என்று அறிய, லாம்பிளுக்கு இரண்டு மாவட்டங்களுக்கு விஸிட் செய்தோம். வடாற்காடு மற்றும் கோவை. முதலில் வடஆற்காடு. அதற்கு முன் அறிவொளிக்கு ஒரு சின்ன அறிமுகம்.

அறிவொளி என்பது முழுதும் அரசு சார்ந்த இயக்கமல்ல. பொருளுதவியைப் பொறுத்தமட்டில் முறையே 2:1 விகிதத்தில் மத்திய, மாநில அரசுகள் அளித்தாலும் வழி நடத்திச் சென்று வெற்றிகாணச் செய்பவர்கள் தன்னார்வலர்கள் என்று சொல்லப்படுகிற ஆர்வமுள்ள பொதுஜனங்கள்தாம்.

அதாவது படித்தவர்கள் (எட்டாவது, பத்தாவது..) படிப்பறியாத ஆண், பெண், சிறுவர்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தரும் திட்டம் அறிவொளி.

இனி, வட ஆற்காடு.

யானைமேல் ஏறிப் படிக்க வர்றாங்க!



ஏற்கெனவே முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி என்றெல்லாம் பள்ளிக் கல்வி தவிர இதர கல்வி முறை இயக்கங்கள் இருக்க, அவற்றால் சாதிக்க முடியாத எதை அறிவொளி சாதித்திருக்க முடியும் என்று கேட்டால், அடுத்த பேராவில் அதற்கான விளக்கம்.

கவர் ஸ்டோரி



• காசிநாதன்



• வடாற்காடு கலெக்டர் விஜயகுமார்

"குறைந்தபட்சம் பஸ் நம்பர் பார்ப்பதற்கு, ரேஷன்கார்டில் கையெழுத்துப் போடுவதற்கு, சினிமா போஸ்டர் பார்த்து, படிப்பதற்காவது எழுத்தறிவு. படிப்பறிவு வேண்டாமா? இந்த அடிப்படை அறிவை போதிப்பதுதான் அறிவொளியின் நோக்கம்" என்கிறார் கலெக்டர் விஜயகுமார். அது கூடத் தெரியாதவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் இங்கே என்றால் -

• அறிவொளி வருவதற்கு முன் - மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள் - 5.3 லட்சம் பேர்! இந்த மாவட்டத்தில் மட்டும்!

இப்போது?

"இந்த 5.3 லட்சத்தில் 3 லட்சம் பேருக்கு மேல் இப்போது முழுதுமாக எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டு விட்டார்கள். மீதிப் பேர் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் இன்னும் சில நாளில் முடிந்து விடும்" என்கிறார், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் கு. செந்தமிழ்ச் செல்வன்.

"கலெக்டர் இது விஷயத்தில் மிகத் தீவிரமாக இருக்கிறார். தானே பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து, கல்வியின் அவசியத்தை, எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியத்தை வலியுறுத்துகிறார். இது தொடர்பான கலைப் பயணங்கள் நடத்த, நாடகம், இசை, நடனம் மூலம் பிரசாரம் செய்ய வெகுவாக ஊக்குவிக்கிறார். சேவை மனப்பான்மையுள்ள 50,000 தன்னார்வலர்களைத் தேடிப் பிடித்து, எழுத்து சொல்லிக் கொடுக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்"



• காளியம்மாள்



• சுமதி • கன்னியம்மாள்



• குணசேகரன்

என்கிறார் பிறிதொரு அறிவொளி திட்ட ஒருங்கிணைப்பாளர் குணசேகரன்.

இப்படியான தன்னார்வலர்களைச் சந்திக்கக் கிளம்பிய போது, "ஆம்பூர் திட்ட ஒருங்கிணைப்பாளர் காசிநாதனை முதலில் பாருங்கள்" என்றார் குணசேகரன்.

காசிநாதன் ஒரு ஆட்டோ டிரைவர். எம்.ஏ. பட்டதாரி!

"படித்து, வேலை கிடைக்காமல் ஆட்டோ டிரைவரானேன். டிரைவர் சங்கத் தலைவரானேன். பின்னோடு பிரச்னைகளும் வந்து சேர்ந்தன. போலீஸ்காரர்கள், மாமூல், கடத்தல், சாராயம் என்று இந்தத் துறைக்கே உரிய சாபக்கேடுகளுக்கு நானும் ஆளானேன். என் நல்ல நேரம்... அறிவொளியில் தன்னார்வலனாகச் சேர்ந்து அமைப்பாளனாகி... அன்று ரிக்ஷாக்காரர்களும், தொழிற் சங்கக்காரர்களும், சாராய வியாபாரிகளும் "தலைவரே வணக்கம்" என்னும் போது கிடைக்காத சந்தோஷம் இன்று பிஞ்சுக் குழந்தைகள், "ஐயா, அறிவொளி வணக்கம்!" என்னும் போது கிடைக்கிறது. வாழ்க்கைக்கே இப்போதுதான் ஒரு அர்த்தம் கிடைத்திருக்கிறது!" என்று நெகிழ்ச்சியோடு கூறுகிறார் இவர்.

ஆண்களை விட, பெண்கள் இப்பணியில் வெகு தீவிரமாக இருக்கிறார்கள். பேரணாம்பட்டில் நாம் சந்தித்த செல்வி தேவகி, கல்வி கற்பிப்பதுடன் நில்லாது, கராத்தே, நீச்சல், சைக்கிள் விடுதல் என்று அத்தியாவசியங்களையும் போதிக்கிறார், குறிப்பாகப் பெண்களுக்கு!



• ஷர்ஜீனாஸ்

"படிப்பா சோறு போடுகிறது? என்று கிராமத்து ஆண்கள் கேட்பார்களே, அவர்களையும் வரவழைக்க என்ன உபாயம் செய்கிறீர்கள்?"

"அண்ணாமலை படம் பார்த்தீங்க இல்லை? பால்காரர் ரஜினி கையெழுத்துப் போடக் கூடத் தெரியாம, கைநாட்டு வெச்சி சொத்தையெல்லாம் இழக்கறாரு பாருங்க. இந்த நிலை உங்களுக்கு வரணுமா - இப்படியெல்லாம் கேட்டு, கான்வாஸ் பண்ணுவோம்!" என்று சிரிக்கிறார்.

வடஆற்காட்டில் ஆம்பூர், வாணியம்பாடி, பேர்ணாம்பட்டு போன்ற இடங்கள்



• அறிவொளிப் புயல் : கற்கிறார்கள்; கற்பிக்கிறார்கள் (வ. ஆற்காடு)

பெரும்பாலும் முஸ்லிம்கள் ஏரியா.பீடி சுற்றுவதும், தோல் கம்பெனி உத்யோகமும் பிரதான வருவாய் வழிகள்.

இந்தப் பகுதிகளிலும் அறிவொளி பரவியிருப்பது நிஜ ஆச்சர்யம். காரணம் அந்நிய மனிதர்களை வீட்டுக்குள் நுழையக் கூட விட மாட்டார்கள்! (கோஷா உண்டு) அப்புறம் கேன்வாஸிங் ஏது? வகுப்புகள் ஏது?

ஆனால் சாதித்திருக்கிறார்கள்! இக்பால் அகமது என்கிற திட்ட அமைப்பாளர் சொல்கிறார் :

"நான் ஒரு முஸ்லிமாக இருப்பதால் இவர்கள் மொழியிலேயே (உருது, அரபி) பேசி கொஞ்சம் கொஞ்சமாக எழுத்தறிவின் அவசியத்தை எடுத்துச் சொன்னேன். தினம் ஒரு மணி நேரம் படிப்புக்கு ஒதுக்கச் சொல்லி வற்புறுத்தினேன். கலெக்டரையே அழைத்து வந்து பேச வைத்தோம். (வாசலோட நின்று பேசினார்!) பிறகுதான் சம்மதித்தார்கள்...."

இப்பகுதிப் பெண்கள், தன்னார்வலர்களாக ஆளுக்குப் பத்துப் பேருக்குப் பாடம் போதிக்கிறார்கள்!

பன்னிரண்டு வயது ஷர்ஜீனாஸிடம்

பேசிக் கொண்டிருந்த போது, "எட்டாங் கிளாஸ் படிக்கும் எனக்கு, அறிவொளி திட்டத்தில் சேர்ந்த பிறகு விளையாட்டு, பொழுதுபோக்கு எல்லாமே பாடம் சொல்லிக் கொடுப்பதுதான்!" என்றாள்.

"இதனால் உனக்கென்ன லாபம்?"

"சந்தோஷம்தான்!"

எப்படிச் சொல்லிக் கொடுப்பது, எப்படி அணுகுவது என்றெல்லாம் இத் தன்னார்வலர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்துகிறார்கள்!

'ஆனைமேடு' என்ற மலையடிவார கிராமத்தில் இரவு 8 மணியிலிருந்து அறிவொளி வகுப்பு நடக்கிறது, தினமும்!

மூன்று மாதங்களாக இத் திட்டத்தில் சேர்ந்து படித்து வரும் அயிஷம்மா (40) அதற்குள், பாண்டிச்சேரியில் வேலை பார்க்கும் தன் கணவருக்குத் தானே முதன்முறையாக ஒரு கடிதம் எழுதி விட்டதாகப் பெருமையோடு சொன்னார். மழைக்குக் கூட பள்ளிப் பக்கம் ஒதுங்காதவர் இவர்!

குறிஞ்சி மலைத்தேனே
கொண்டாடும் சந்தனமே
கண்ணான ராசாவே நீ
கால் முளைத்த பின்னாலே
ஒண்ணு, ரெண்டு கத்துக்கணும்
இப்ப நீ கண்ணுறங்கு

என்று அழகாகப் பாடுகிறார்!

அறிவொளிப் பாடல்களை இப் பகுதியில், பாடிப் பாடிப் பரப்பி வரும் மணிவேல் என்கிற இளைஞர் சொன்னார் : "நாலு பாடம் புரியவைக்க முயற்சிக்கற விஷயத்தை ஒரு பாட்டு புரிய வெச்சிடும் சார்! என்னால முடிஞ்சது... எந்த சென்டருக்குப் போனாலும் முதலில் ஒரு பாட்டுப் பாடிட்டுத்தான் மறுவேலை."

இதேபோன்ற உற்சாக நிலைதான் கோவை மாவட்டத்திலும். அடுத்த ஆண்டுக்குள் எழுதப் படிக்கத் தெரியாத ஆறேகால் லட்சம் பேரையும் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றி விட வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக இருக்கிறார், கோவை மாவட்ட கலெக்டர் சி.வி. சங்கர். இவர், அறிவொளி இயக்கத்தில் காட்டும் அதி தீவிரம் காரணமாக, கலெக்டர் சங்கர் என்று மக்களால் அழைக்கப்படுவதில்லை; 'அறிவொளி சங்கர்' என்கிற காரணப் பெயரால் தான் அழைக்கப்படுகிறார்.

"அறிவொளி இயக்கத்தில் சேர்ந்து படிக்கிற காரணத்தால், ஒரே மாதத்தில் எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொண்டேன்!" என்கிறார், ஆனைமலைப் பகுதியிலுள்ள

திருப்பூர் வாசகர்களே! செப்டம்பர் நாலாம் தேதியை டைரியில் குறித்துக் கொள்ளுங்கள்!

திருப்பூர் கல்கி வாசகர்கள் சந்திப்பு: 4.9.94

இடம் : மகாகவி வித்யாலயா (AEPC எதிரில்) இந்திரா நகர், முருங்கபாளையம், திருப்பூர்.

நேரம் : மாலை நான்கு மணி

போட்டிகள் உண்டு! பேனாவுடன் வாருங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள்!

கோழிகமுத்தி என்னும் மலைக் கிராமத்திலுள்ள கன்னியம்மாள்.

"நாள் பூரா வேலை செஞ்சிட்டு, ராத்திரி வந்து சோறாக்கி முடிச்சா.... அலுப்பாயிடுது. அப்புறம் எங்க படிக்கிறது?" என்கிறார் அதே பகுதியைச் சேர்ந்த காளியம்மாள். ஆயினும் அந்தப் பகுதியின் அறிவொளி ஆசிரியராக (தன்னார்வலர்) இருந்து சொல்லித் தரும் சுமதி அவரை விடுவதாயில்லை. எப்படியும் காளியம்மாளையும் படிக்க வரவழைத்து விடுவது என்பதில் தீவிரமாக இருக்கிறார்!

கோழிகமுத்தியிலுள்ள அனைத்து ஆண்களும் வனத்துறையின் யானைகள் பராமரிப்பு மையத்தில் மாவுத்தர்களாக வேலை செய்பவர்கள். யானைகள் வனத்துறைக்குச் சொந்தமானவை என்றாலும் அவை இந்த மாவுத்தர்களின் குடும்ப உறுப்பினர்கள் போல்தான் வளர்கின்றன. அதனால் மாவுத்தர்கள் படிக்க வரும் போது யானை மீதேறித்தான் வருகிறார்கள். மாவுத்தர்கள் படிக்க, யானைகள் குழந்தைகளை அழைத்துச் செல்லும் ஆயாக்களைப் போல வெளியே காத்திருப்பது ஓர் ஆச்சரியம்!

இன்னும் மின்வசதி கூட ஏற்படாத பகவத்துறை என்கிற மலைஜாதியினர் வசிக்கும் கிராமத்திலுள்ள கண்ணம்மா பாட்டிக்கு

இந்த வயதிலும் தம்மூர் மக்கள் படிப்பறிவு பெற வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம். அனைவரும் வந்து ஒழுங்காகப் படிக்கிறார் களா என்பதை மிகவும் கூர்மையாகக் கண்கா ணிக்கிறார். வராதவர்களை உரிமையோடு கண்டித்து வரச் சொல்லுகிறார்.

"இந்த அறிவொளி இயக்கத்தின் வெற் றியே கிராமங்கள் தோறும் செயல்படும் தன் னார்வலர்களைப் பொறுத்துத்தான் இருக் கிறது. நல்லவேளையாக எங்களுக்குக் கிடைத் திருக்கும் தன்னார்வலர்களும் திட்ட ஒருங் கிணைப்பாளர்களும் மிகச் சிறந்த சேவை மனப்பான்மையுள்ளவர்களாகக் கிடைத் திருக்கிறார்கள்!" என்கிறார் கலெக்டர்.


எங்கோ மலைப் பிரதேசத்திலுள்ள மக்கள்தான் எழுத்தறிவில்லாமல் இருந்து, இந்த அறிவொளி இயக்கத்தின் மூலம் எழுத் தறிவு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதில்லை. கோவை நகரையொட்டி உள்ள பீளமேடு பகுதியிலிருக்கும் சி.எம்.சி. காலனியைச் சேர்ந்த துப்புரவுப் பணியாளர் களும் இதுவரை 'கைநாட்டு'த்தான் வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த இயக்கம் வந்த பிறகுதான் கைநாட்டுக்கு டாட்டா சொல்லி விட்டுக் கையெழுத்துப் போட ஆரம்பித் திருக்கிறார்கள்.

அறிவொளி இயக்கம் கிராமங்கள் தோறும் வேர் விட்டுப் படர்ந்திருப்பதில் இன்னொரு பயனும் பெறுகிறார்கள் மக்கள். உதாரணத்திற்கு ரேஷன் கார்டு. தங்கள் கிராமத்தில் இத்தனை பேருக்கு இன்னமும் ரேஷன் கார்டே கொடுக்கப்படவில்லை என்று தன்னார்வலர்களிடம் சொல்லப்படு கிற போது, அவர்கள் உடனடியாக மேலதி காரிகளிடம் தொடர்பு கொண்டு, ரேஷன் கார்டுகள் வழங்க ஏற்பாடு செய்கிறார்கள். சில இடங்களில் ரேஷன் கிடைக்கவில்லை என்கிற புகார்களைக் கூட இந்த இயக்கத் தினர் கவனித்து ஆவன செய்கிறார்கள். இதன் காரணமாக, எழுத்தறிவு இயக்கம் மக்களிடம் இன்னமும் நம்பிக்கையளித்துப் பரவுகிறது.

ஆக, எந்தவொரு திட்டமும் யாருடைய கருணையாலோ அல்லது உத்தரவுகளாலோ நிறைவேற முடியாது; கிராம அளவிலுள்ள சாதாரண மக்களும் ஒரு திட்டத்தில் முழு மையாகப் பங்குபெறும்போதுதான் அது நிறை வேற முடியும் என்பதற்கு இந்த அறிவொளி இயக்கமே சாட்சி!

- பா. ராகவன், சார்ல்ஸ்

அட்டை வண்ணப்படமும்
கோவை மாவட்டப் படங்களும் : **யோகா**
வடாற்காடு மாவட்டம் தொடர்பான
படங்கள் : **கேமரா திருஞானம்**



ஊக்கப் பரிசுகள் மழை!

S.I.C. பாண்ட்

திட்டம் 'A'	திட்டம் 'B'
ஒரே தவணையில் ரூ.8,250 கட்டலாம்	ரூ.500X20 மாதங்கள் = ரூ.10,000/-

20-ம் மாதத்தின் முடிவில், உங்கள் சேமிப்பிற்கு 'S.I.C. பாண்ட்' வழங்கப்படும். அதற்கடுத்த 60-ம் மாதத்தின் முடிவில், நீங்கள் ரூ. 25,000/- பெறலாம்

ஊக்கப் பரிசுகள்

பரிசுப் பொருட்கள்	மொத்தப் பரிசுகள்
800 சி.சி. மாருதி வேன்	2
பஜாஜ் ஆட்டோ	1
பஜாஜ் 'சேதக்' ஸ்கூட்டர்	3
தங்கச்சங்கிலி (40 கிராம்)	11
பஜாஜ் எம்-80	2
தங்கச்சங்கிலி (32 கிராம்)	3
வெள்ளி கல்யாண செட் (1 கிலோ)	3
தங்கச் சங்கிலி (16கிராம்)	17
ஒனிடா கலர் டி.வி	17
காட்ரேஜ் ரிப்ரிஜிரேட்டர் (165 லிட்டர்)	17
வீடியோ கான் சலவை இயந்திரம்	17
பட்டுப்புடவைகள் (ரூ.2000/-பரிசுக் கூப்பன்)	30
'டைட்டன்' கைக்கடிகாரங்கள் (தலா, ரூ.1000/-)	30
வெள்ளி காமாட்சியம்மன் விளக்கு	30
வெள்ளி தம்ளர்	60
'நிப்போ' ரைஸ் குக்கர்	85
பட்டுப் புடவை (ரூ.1000/- பரிசுக்கூப்பன்)	170
பிரட் டோஸ்ட்டர்	170
மொத்தம்	668

உங்கள் டெபாசிட்டுகளுக்கு

21% வட்டி + 1% ஊக்கத் தொகை

S.I.C. நிர்வாகிகள் குழு:

திரு. ரி.பாலசுப்ரமணியம் B.Sc.
- அறங்காவலர் குழுத் தலைவர், கந்த கோட்டம்,
- ஆலோசகர், பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிட்.

திரு.ஆர். விவேகானந்தன் B.Com.
- தலைவர், பார்க்டவுன் பெனிபிட் பண்ட் லிட்.

திரு.கே.சுந்தரம், B.sc., FC.A., A.I.C.W.A.B.L.
- இயக்குநர், பர்பெக்ட் பெனிபிட் பண்ட் லிட்.

திருமதி. ஆர் சூரியகுமாரி
- பார்ட்னர் சூர்யா இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்

திரு. ஆர். லட்சுமணஸ்வாமி B.A., (C.S)
- இயக்குநர், ஸ்ரீமுத்துக்குமார ஸ்வாமி பர்மனெண்ட் பண்ட் லிட்.

டாக்டர் எஸ்.பிரகாஷ் M.S.
- கன்சல்டன்ட்.


விபரங்களும், விண்ணப்பங்களும் பெற:

S.I.C. குரூப்

58, அருணாசலம் தெரு, 'கலைவாணர் அரங்கம்' எதிரில்
சேப்பாக்கம், சென்னை-600005. போன்: 84 27 06.

Kalki Shopping Page

Kalki Shopping Page


இன்னாள் காங்கிரஸ் தலைவர் செல்லக்குமார்
வாழ்க! வாழ்க!
இந்தாங்க எங்க வரவேற்பையும் ஏத்துக் -கோங்க!
உட்பூசல்
69%
தமிழக இட ஒதுக்கீடு சட்டத்தை அரசியல் சாசன பாதுகாப்பு
என்னமோ காகிதத்தை காட்றாங்களே... அதை கரைச்சு கூழாக்கி குடிக்கவா முடியும்...?
நான் பாஸாயிட்டேன்... பாஸாயிட்டேன்...



ஸ்ரீ

கல்கி



1994
செப்டம்பர் 4
பவ
ஆவணி 19
மலர் : 53
இதழ் : 5

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

பாக் அணுகுண்டு பம்பாயில் விழுமா?

‘கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்’ என்று வசனம் உண்டு. “அணுகுண்டா? அப்படின்னா என்ன?” என்ற பாகிஸ்தான் நாடகத்துக்கு ‘‘முற்றும்’’ போட்டாயிற்று. ரஷ்யாவிலிருந்து அணுகுண்டு தயாரிப்புத் தரத்தில் புளூடோனியம், ஜெர்மனி வழியே திருட்டுத்தனமாக ‘பாக்’ சென்றடைந்திருக்கிறது. இதை ஜெர்மனி கண்டுபிடித்து விட, ஜெர்மானிய அதிபரே கண்டனம் தெரிவித்ததுடன் ரஷ்யாவையும் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்ட சமாதான ஒப்பந்தங்களின் விளைவாக ருஷ்யாவில் ஏராள ஏவுகணைகள் தயார் நிலையிலிருந்து பார்ட் பார்ட்டாகக் கழற்றப்பட்ட நிலைக்கு வந்து விட்டன. இவற்றில் பொருத்தப்பட்டிருந்த அணுகுண்டுகளிலிருந்துதான் இந்தப் புளூடோனியம் கடத்தப்பட்டுப் பாக் சென்றிருக்கிறது. ஏற்கெனவே அணுமின் நிலையங்களில் சேகரமாகும் கதிரியக்கக் கழிவுப் பொருள்களால் விளையக்கூடிய ஆபத்துகள் தவிர, இந்தப் புதிய பிரச்னை வேறு! ஆபத்தைக் குறைக்க நடக்கும் ஆயுதக் குறைப்பே புதிய ஆபத்துக்கும் இடமளிக்கிறது!

முன்னாள் பாக் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் ‘பாகிஸ்தானிடம் அணுகுண்டு தயார் நிலையில் இருக்கிறது’ என்று பகிரங்கமாகவே கூறி விட்டார்! இப்படி ரகசியம் அம்பலத்துக்கு வந்து விட்ட பிறகும் அமெரிக்கா, ‘பாக் உடைத்தால் பொன் குடமல்ல, மண்குடம்தான்’ என்ற போக்கில் நடந்து கொள்வதுதான் வேதனை. பிறர் விஷயத்தில், ‘பிரஸ்லர் சட்டம், அது இது’ என்று ஆர்ப்பாட்டம் பண்ணும் கிளின்டன், பாக் விஷயத்தில் வழவழா.

இந்தியா என்ன செய்யப் போகிறது என்பதற்கு பிரதமரின் சுதந்திர தின உரை ஓர் உரைகல் எனில், பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியை நாம் மீட்கப் போவதாகக் கொள்ளலாம். பி.ஜே.பி. கூட பிரதமரை இதற்காக வாழ்த்தியாகி விட்டது! சுதந்திர தினத்தன்று பிரதமர் வீரமாகப் பேசுவதும் நெஞ்சைத் தட்டுவதும் சரிதான்; ஆனால் யதார்த்தத்தில் நாடு ஒரு யுத்தத்துக்குத் தயாராக இருக்கிறதா? நமது பொருளாதாரம் இதற்கு இடம் தருமா? சராசரி இந்தியன் யுத்தம் வேண்டுகிறானா? சிந்திப்பது அவசியம்.

ஒரு பக்கம் சீனா நமது நாட்டின் ஒரு கணிசமான பகுதியை நேரு காலத்திலேயே விழுங்கி இன்னும் ஏப்பம் விட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது! நாம் அதனுடன் போர்தொடுக்க எண்ணவில்லை. மாறாக, நேசக்கரம் நீட்டி வர்த்தக ஒப்பந்தங்களும் செய்து கொள்கிறோம். மறு பக்கம் பாகிஸ்தானிடம் கடுகடுப்புக் காட்டுகிறோம். ‘பாகிஸ்தான் பயங்கரவாதிகளை காஷ்மீரத்துக்குள் அனுப்பியும் பம்பாயில் தொடர் குண்டுகளை வெடிக்கச் செய்தும் தலைவலி தந்து கொண்டிருப்பதால் அதற்குத் தனி அணுகுமுறை தேவைதான்; தண்டோபாயம்தான் அதை அடக்கி வைக்கும்’ என்ற கூற்றில் ஒரு தார்மீக நியாயமும் உண்டு. ஆனால் இஸ்ரேலும் பாலஸ்தீனியரும் (அராஃபாத்) இலங்கையில் தமிழரும் சிங்கள அரசும் (சந்திரிகா) தொடர் யுத்தங்களால் ஏற்படும் சொல்லி மாளாத துயரங்களை உணர்ந்து, சமாதானத்துக்கே முதலிடம் தருவதையும் பார்க்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் நாமும் கூடுமானால் யுத்தத்தைத் தவிர்க்கப் பார்ப்பதே புத்திசாலித்தனமாகும். காஷ்மீர் பிரச்னை தீருமானால் அமைதி வாழ்க்கை மலர்வது மட்டுமல்ல, கோடானுகோடி ரூபாய் மிச்சமாகும். தேசத்தின் பொருளாதார முன்னேற்றம் துரிதமடையும். தன்மானத்தை விட்டுக் கொடுக்காமல் கௌரவமான முறையில் சமாதான உடன்படிக்கைக்கு வழியிருக்கிறதா, பார்க்க வேண்டும்.

எனவேதான் அண்மையில் புதுதில்லி வந்த ஈரானிய தேசிய பாதுகாப்பு சபையின் பிரதமச் செயலர் டாக்டர் ஹஸ்ஸான் ரௌஹானி கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. ‘இருதரப்பு பேச்சு வார்த்தைகளை விடவும் காஷ்மீர மக்களின் உண்மைப் பிரதிநிதிகளையும் சேர்த்து, முத்தரப்புப் பேச்சு வார்த்தைகளே பயன்தரும்; இந்தியா கோடி காட்டினால் ஈரான் இதற்காகப் பாடுபடும்’ என்று சொல்லியிருக்கிறார்.

முரட்டுப் பிடிவாதமின்றி இந்தியா பல்வேறு வழிகளையும் ஆராய்ந்து பார்க்கத் தயாராக உள்ளது என்பதை உணர்த்தவாவது, ஈரானிய யோசனையைப் புறக்கணிக்காமல் நாம் பரிசீலிக்க வேண்டும்.

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில்

ஆலங்குடி – 612 801. தஞ்சாவூர் மாவட்டம்.

குரு பரிகார ஸ்தலம்

இத்திருக்கோயில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஞானசம்பந்தரால் பாடல்பெற்ற ஸ்தலமாகும். இக்கோவிலை திருவாரூரை அரசாண்ட முசுகுந்த சக்கரவர்த்தியின் அமைச்சர் 'அமுதோகர் என்பவரால்' கட்டப்பட்டது.

இங்கு சித்திரை பிர்மோற்சவமும், வருடாந்தோறும் குருபகவான் ஒருராசியிலிருந்து மறு ராசிக்கு பிரவேசிக்கும் குருபெயர்ச்சி விழாவும் சிறப்பாக நடைபெறும்.

இத்திருக்கோயிலில் உலக நலன் கருதி, "நித்யபூஜா ஆராதனை கட்டளை" என்ற கட்டளை ஒன்று நிறுவி அதற்காக ரூ.750 கட்டணமாக பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு மேற்படி கட்டளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டளை கட்டணம் ரூ.750/– எழுநூற்று ஐம்பது கும்பகோணத்தில் மாற்றக்கூடியவாறு வரைவோலை எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

செயல் அலுவலர்
அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் ஆலயம்
73. ஆலங்குடி – வலங்கைமான் T.K
தஞ்சாவூர் மாவட்டம்.

நித்ய பூஜா கட்டளை வைப்பு நிதி ரூ.750/–

கட்டளைக்கு கட்டணம் அனுப்புவோர் தங்கள் திருமணநாள் பிறந்த நாள் அல்லது வியாபாரம் துவங்கிய நாள் தங்களுக்கு உகந்த நாள் எதுவோ அதற்கு ஆங்கில தேதியைக் குறிப்பிட்டு அன்றைய தினம் கட்டளை நடத்திட ஏற்பாடுகள் செய்யும் வகையில் எழுதி அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த குருபெயர்ச்சியில் கீழ்க்கண்ட ராசிநேயர்கள் குருப்ரீதி செய்து கொள்வது உத்தமம்.

ராசிகள் : ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம் மீனம்.

குருவருள் பெற்று வளமுடன் வாழ்க.



தமிழர்கள் என்ன கோமாளிகளா?

பாராளுமன்றத்தில் துணிவுடன் குரல் எழுப்பும் ஒருசில எம்.பிக்களில் ஒருவர் திருமதி. ஜெயந்தி நடராஜன். திரைப்படங்களிலும், டீ.வி. நிகழ்ச்சிகளிலும் தமிழர்களைத் தரக்குறைவாகவும் இழிவுபடுத்தும் வகையிலும் சித்திரிப்பதை எதிர்த்து அண்மையில் போர்க்கொடி உயர்த்தினார். அவரைச் சந்தித்த போது...

"திரைகளில் தமிழர்களை கேலிக் குரியவர்களாகச் சித்திரிப்பதை எதிர்த்து ராஜ்யசபாவில் நீங்கள் குரல் கொடுக்கத் தூண்டிய நிகழ்ச்சி எது?"

"பம்பாயிலிருந்து வெளிவரும் அனேக திரைப்படங்கள், டீவி. நிகழ்ச்சிகள் (Zee டீவி. உட்பட) ஒரு. தமிழனைச் சித்திரிக்கும் போது அவனை ஒரு கோமாளியைப் போலவும், கையாலாகாதவன் போலவும் காட்டுகிறார்கள். நெற்றியில் விபூதிப் பட்டையோடோ அன்றி நாமத்தோடோ, தலையில் குடுமியுடனும் பஞ்சகச்ச வேட்டியுடனும் சித்திரிக்கிறார்கள். அவர்களுக்கு சரிவர இந்தி பேச வராதது போல், ஒரு வேடிக்கையான உச்சரிப்பு வேறு! உண்மையில் தமிழர்கள் அப்படியா இருக்கிறார்கள்? Zee டீவி. நிகழ்ச்சியில் 'முத்துக் குளிக்க வாரீகளா' என்ற பாட்டைப் பாடிய இருவரை, கேரள உடையில் காட்டினர். தூத்துக்குடி பக்கங்களில் முத்துக் குளிக்கச் செல்லும் ஒரு சராசரித் தமிழனுக்கும் இவர்களுக்கும் துளியும் பொருத்தமில்லை! விளம்பரப் படங்களிலும் தமிழர்களைக் காட்டுவது என்றால் இதே நிலைதான். இதைத்தான் நான் கடுமையாக ஆட்சேபித்தேன். இதை நாம் எதிர்க்காவிட்டால் இவர்கள் நம் வாழ்க்கையை இன்னமும் கேலிக்கூத்தாகக் காட்டுவார்கள்."

"தமிழர்களை தரக்குறைவாக எடைபோடும் இந்தப் போக்கு நிஜ வாழ்க்கையிலும் காணப்படுகிறதா? உதாரணமாக, தமிழ்நாட்டு எம்பிக்களை வட இந்திய எம்பிக்கள் எப்படி நடத்துகிறார்கள்?"

"தனிப்பட்ட முறையில் எங்கள் நட்பு வலுவானதாகவே இருக்கிறது. வடக்கு, தெற்கு பாகுபாடு இல்லை."

"நீங்கள் ஒரு பெண் எம்.பி. என்பதில் குறிப்பாகப் பெண்கள் பிரச்னைகளுக்குத் தனி கவனத்தோடு குரல் கொடுக்கிறீர்களா?"

"ஆம். பெண் உடல்நலம் பேணுதல், தாய்-சேய் நலத் திட்டங்கள் போன்றவற்றிற்குப் போதிய முக்கியத்துவம் தரப்படவில்லை. சமீபத்தில் அமுலுக்கு வந்த அரசு உத்தரவுப்படி மூன்றாவது குழந்தை பெறும் தாய்மார்களுக்குப் பிரசவ விடுப்பு வசதிகள் கிடையாதாம். இது தாய்மார்களுக்கு இழைக்கப்படும் அநீதி. இத்தகைய ஊக்கக் குறைப்புகள் ஆண்களுக்கு இல்லை. குடும்பக் கட்டுப்பாட்டிற்கான பல திட்டங்களில் பெண்களே பாதிக்கப்படுகிறார்கள். இவற்றைச் சுட்டிக் காட்டி நான் குரல் கொடுத்த போது எல்லாப் பெண்களுமே என்னோடு சேர்ந்து கொண்டார்கள்!"

"சில மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் நடக்கவிருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் நிலை எப்படி இருக்கும்?"

"மூன்று ஆண்டுகளில், நம் பிரதமர் ஒரு பொருளாதாரப் புரட்சியையே நடத்தியிருக்கிறார். அவரது அணுகுமுறை நாட்டிற்கு ஒரு ஸ்திரமான ஆட்சியைக் கொடுத்திருக்கிறது. அகில இந்திய அளவில் வேறு ஒரு மாற்றுக் கட்சியும் கிடையாது. காங்கிரஸின் எதிர்காலம் ஒளிமயமானதாகவே இருக்கும்."

பேட்டி : **ராஜீவி நரசிம்மன்**

அகத்தின் 'அழகும்' முகத்தில் தெரியும்!

ஒருசிலருக்கு மட்டுமே முகத்தில் அதிகமாக எண்ணெய் வழியக் காரணம், கடவுள் செய்த manufacturing defect தான்! சருமத்துக்கு எண்ணெய்ப் பசையைக் கொடுக்கும் Sebaceous gland என்ற சுரப்பி நமது தோலில் உண்டு. இதன் செரிவு தேவைக்கு அதிகமாக அமையும் போது, அதிக எண்ணெய் சுரக்கிறது. முகத்தைக் 'சுரகர'வென்று 'சலவை' செய்து வந்தாலும் மறுகணமே எண்ணெய்க் கசிவினால் அது பளபளக்க ஆரம்பிக்கிறது.

இந்தப் பிரச்னை இருப்பவர்களுக்கு நாங்கள் தகுந்த சோப் (வழக்கமாக ஹமாம்) உபயோகிக்கும்படி சிபாரிசு செய்வோம். அடிக்கடி முகத்தைக் கழுவுவதும் எண்ணெய் தூக்கலாக உள்ள உணவு வகைகளைத் தவிர்ப்பதும் உதவும்.

தலையில் பொடுகு மற்றும் காளான் தொற்று இருந்தால் தலைமுடி அதிகமாய் உதிரும் என்று போன வாரம் சொன்னேன் அல்லவா? அந்த இரு நிலைகளும் தலையில் இருப்பதற்கு ஓர் அறிகுறியே முகத்தில் வெடிக்கும் பரு, கரும்புள்ளி போன்ற சருமத் தொந்தரவுகள். தலையில் உள்ள பொடுகின் துகளோ காளான் தொற்றின் சிறு பகுதியோ சுலபமாக முகத்தில் விழுந்து படிய வாய்ப்பு உண்டு. இவ்வாறு படியும் துகள்கள், சுரப்பிகள் வெளியேற்றும் எண்ணெயுடன் கலந்து, தோலின் மேல்பரப்பில் உள்ள துளைகளை சிமெண்ட் கலவை போல் அடைத்துக் கொள்ளும்! அந்த இடத்தில் சிறிதாக மேடு கட்டிக் கொண்டு பருவோ கரும்புள்ளியோ புறப்படும்.

பொடுகும் காளான் தொற்றும் செய்யும் வஞ்சனையை, சாதாரண தூசித் துகள் கூட செய்யும். எனவேதான் தலையைச் சுத்தமாக வைத்துக் கொள்வதுடன் முகத்தைப் பலமுறை கழுவவும் (குறிப்பாக வெளியே போய் வந்தால்) வேண்டும் என்கிறோம்.

'முகப் பருவைக் கிள்ளாதே; முகம் முழுக்க பரவும்....' என்று வீட்டில் பெரியவர்கள் எச்சரித்துக் கொண்டேயிருப்பார்கள். சில பெரியவர்களாலேயே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத பழக்கம் இது! ஆனால், அதைத் தடை செய்வதற்கு வலுவான காரணம் இருக்கிறது - வெறும் சரும அழகு பாதுகாப்பைக் கடந்த சீரியஸான ஒரு காரணம் :

நமது இதழ்க் கடைகளிலிருந்து காதுகளின் உள்மடல் நோக்கி ஒரு கற்பனைக் கோட்டை இழுத்தால், முகம் ஒரு மாதிரி 'V' வடிவில் இரண்டாக வகிரப்படும் :




இந்த மேல்பகுதி முகத்தின் ரத்த ஓட்டமும் மனித மூளையின் ரத்த ஓட்டமும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. எனவே, முகத்தின் மேல் பகுதியில் ஏற்படும் நோய்த் தொற்று ரத்தத்தில் கலக்குமானால் அது மூளையை பாதிக்கும் வாய்ப்பு உண்டு. பருவைக் கிள்ளும் போது நகத்தில் உள்ள அழுக்கும் நோய்த் தொற்றும் ரத்தத்தில் கலக்குமானால் அது இந்த ஆபத்தில்

முடியக்கூடும்!

வெறும் டீன் ஏஜ் பிரச்னை என்று எண்ணி வந்த முகப் பருவினால் இவ்வளவு பெரிய ஆபத்து கூட வர முடியுமா என்று ஆச்சரியமாய் இருக்கிறது அல்லவா? பரு நீக்கிகளைக் கொண்டு பிரச்னைக்கு முடிவு தேடிக் கொள்ளலாம் என்று சுலபமாகத் தோன்றும். ஆனால் ஒரே பருநீக்கி சிலருக்கு உதவுவது போல் வேறு சிலருக்கு உதவாமல் போகலாம். சருமப் பாதுகாப்பு கிரீம்களும் லோஷன்களும், முகத்தைப் புற அழுக்கிலிருந்து பாதுகாத்தாலும், இயல்பாய்த் திறந்திருக்க வேண்டிய சருமத் துளைகளை மூடி விடுவதால் அவை கூடவே கேடும் விளைவிக்கின்றன என்பது ஒரு கட்சி!





சருமத்தின் துளைகளை நன்றாகத் திறக்கச் செய்தால் அவற்றின் வாயில் அடைத்துக் கொண்டிருக்கும் அழுக்குகள் வெளியேறி விடும். ஒரு மூடி போட்ட பாத்திரத்தில் நீரைக் கொதிக்க வைத்து, நீராவியை முகத்தில் படர விடுவது உதவும். இதற்கு நேரமும் சிரமமும் அதிகம் பிடிக்கும் என்று தோன்றினால் இப்படிச் செய்யலாம் :

சுத்தமான ஒரு தேங்காய்ப் பூ துவாலையைக் கொதிக்கும் தண்ணீரில் நனைத்து, பிழிந்து எடுத்து முகத்துக்கு ஒத்தடம் கொடுக்கலாம். ஒரு கையால் வேறு வேலை செய்து கொண்டே மற்றொரு கையால் இந்த சிசுருஷையைச் செய்து கொள்ளலாம் இல்லையா!

'பூசணிக்காய்த் தோலையும் வெள்ளரிக்காய்த் தோலையும் முகத்தில் பரத்திக் கொண்டு படுக்கலாம்; வெள்ளைப் பூசணிக்காயைத் துருவி, சாறு பிழிந்து வெறும் வயிற்றில் குடிக்கலாம்' என்றெல்லாம் இயற்கை வைத்திய முறைகளைச் சொல்கிறார்கள். இவை பலன் தரக் கூடும். ஆனால் எத்தனை பேருக்கு இவற்றைச் செய்து கொள்ள நேரம் இருக்கிறது என்பது பெரிய கேள்விக்குறி.

நேரத்தைக் கொஞ்சம் கூடுதலாக எடுத்துக் கொண்டாலும், தினமும் கீரை சமைத்துச் சாப்பிடுவது முகப் பொலிவுக்கு நிச்சயம் உதவும். மலச் சிக்கலைத் தவிர்க்க உதவும் எளிய இயற்கை உணவு கீரை. என்ன தான் மாய்ந்து மாய்ந்து முகத்தைக் கழுவினாலும் க்ரீம் லோஷன் உபயோகித்தாலும், குடல் சுத்தமாக இல்லா விட்டால் முகத்தின் சருமம் துல்லியமாக இராது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று இந்த அர்த்தத்திலும் சொல்லப்பட்டிருக்கலாம்!

மலச் சிக்கலினால் வேறு பல நோய்களும் வருகின்றன. அத்தகைய நோய்களால் அவதிப்படுபவர்கள் சினிமா, டிராமா, சிறுகதை என்று ஒரு மீடியம் பாக்கியின்றி அனைத்திலும் ஈவிரக்கமின்றி கேலிக்கு உள்ளாகிறார்கள். உண்மையில் அவர்கள் ரொம்பவும் அனுதாபத்துக்குரியவர்கள்.

- டாக்டர் பி. ஆர். சுப்ரமண்யம்

(இந்தக் கட்டுரையையும் சேர்த்து நாலு வாரங்கள் டாக்டர் உங்களுடன் பேசியிருக்கிறார். இந்த நாலு வாரக் கட்டுரைகள் தொடர்பாக மட்டுமே உங்களுக்கு எழக் கூடிய சந்தேகங்கள் இருந்தால் பதிலளிக்கக் காத்திருக்கிறார். உங்கள் பிரச்னைகளை எழுதும் போது, "டாக்டருக்குக் கேள்வி" என்று உறைமீது குறிப்பிடவும். எல்லாக் கேள்விகளுக்குமே பதிலளிப்பதாக உறுதிகூற இயலாது. - ஆர்)

செவ்வந்தி

அரசியலிலிருந்து சினிமாவுக்கு இன்னொரு இறக்குமதி சார்! (அரங்க நாயகம் தயாரிப்பாளர்; அவர் மகன் ஹீரோ!)

மலைவாசிப் பெண் செவ்வந்தியைக் காதலிக்கும் ஹீரோ (டெஸிக்னேஷன் என்ன சார்?), இன்டர்வெலில் அவள் வேறொருவனைக் கைப்பிடிக்க (சந்தர்ப்பம் சார்!) அப்புறம் கைவிடப்பட்டவன் தன்னை மடித்து, தாடி வளர்த்து ஒரு முழு நீள சோக நாயகனாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டு... (கிளைமாக்ஸில் என்ன ஆச்சன்னு தெரியலை சார்! தூங்கிட்டேன்.)

ஒரு ஆர்ட் பிலிமுக்குரிய வேகத்தில் கமர்ஷியல் கதை என்கிற வகையில் இது ஒரு புது முயற்சி எனலாமா?

ஆனாலும் காதல் காட்சிகள் கூட 'எதிரொலி' பதில்கள் மாதிரி ஒருவித வாழைப்பழத் தனத்துடன் வழுக்கிப் போய், ஒரு-ஒரே ஒரு - ஒரே ஒரே ஒரு - ஷாட் கூட எடுத்துச் சொல்ல முடியாதபடி உடனே உடனே மறந்து விடுவது மகத்தான சோகம். (நிஜமாத்தான் சார்!)

இரண்டாவது ஹீரோவாக வருபவர் (பெயர் மறந்து போச்சு சார்! புதுநெல்லு புதுநாத்துல வந்தவர்.) கொஞ்சம் தேவலை. கல்யாணம் ஆனவுடனே மனைவியை ஒதுக்கி வைத்து விட்டு எப்போதும் அந்த 'உர்ர்' முகத்துடன் - ஓ.கே! (லாஜிக் இருக்கு சார்!)

அம்மன் கோவில் திமிதி, வெ.ஆ. மூர்த்தியின் குதிரைச் சிரிப்பு என்று சம்பிரதாயங்களுக்குப் பஞ்சமில்லை. இரண்டு பெரிய ஆறுதல் - இளையராஜா இசை அண்ட் திவாஸ் கேமரா.



திவாஸ் - பசுமைக் கண்காட்சி நடத்தியிருக்கிறார். (இவருக்கு ஏன் டைரக்ட் பண்ற ஆசை வந்துதுன்னு புரியலை சார்!)

படம் பார்க்க விரும்புபவர்களுக்கு ஒரு வார்த்தை. நரசிம்மராவை மனத்தில் ஒருதரம் தியானம் பண்ணிக் கொண்டு செல்வது உசிதம். (ரொம்ப பொறுமை வேணும் சார்!)

— ஆர்.பி.ஆர்.

EXPRESS FINANCIAL EXCHANGE LTD

வழங்குகிறது
பரபரப்பான டெபாசிட் திட்டங்கள்

எக்ஸ்பிரஸ் எர்னிங்ஸ் 1 (EXPRESS EARNINGS)	மணி பேக் 2 (MONEY BACK)
ஃபேமிலி டிரஸ்ட் 3 (FAMILY TRUST)	சைல்ட் கேர் 4 (CHILD CARE)

விண்ணப்பபடிவங்களும் மேற்கொண்டு மற்ற விவரங்களும் Integrated Enterprises (India) Ltd ன் எல்லா கிளைகளிலும் மற்ற முக்கியமான முகவர்/ஆலோசகர்களிடமும் கிடைக்கின்றன

எல்லாத் திட்டங்களுமே உடனடியாக ரொக்கம் பெறும் வசதியும் உங்கள் டெபாசிட்டுகளை எளிதில் கையாளும் வசதியையும் அளிக்கின்றன. மேலும்...

1. டெபாசிட்டுகளின் பேரில் கடன் வழங்கும் வசதி.
2. டெபாசிட்டுகளை குறித்த காலத்திற்கு முன்பே திரும்பி எடுத்துக்கொள்ளுதல்.
3. ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பின்தேதியிடப்பட்ட மாதாந்திர/காலாண்டு வட்டி வாரண்டுகள் முன்கூட்டியே அனுப்பப்படும்.

வழங்குகிறது எளிதான கடன் உதவி	
	ரூ.10,000/- (பத்தாயிரம் வரை) குறைந்த வட்டியில் பணியில் இருக்கும் மகளிருக்காக.
	25 வயது வரையிலுள்ள மாணவர்களின் கல்விக்காக - பணியில் இருக்கும் மகளிருக்காக.

எங்களுடன் தொலைபேசியில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்

எக்ஸ்பிரஸ் ஃபைனான்ஷியல் எக்ஸ்சேஞ்ச் லிட்.
கார்ப்பரேட் அலுவலகம்: அட்வேல் டவர்ஸ்,
9, தெற்கு போக் சாலை, சென்னை - 600 017.
போன் : 4340325/4340329/4341403. ஃபேக்ஸ்: 4341518

18.6.94 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் பத்திரிக்கையில் எங்களது சட்டபூர்வமான விளம்பரத்தைப் பார்க்கவும்.

Trinity EFE2012.5

நினைவலைகள்

GIVE ME ANY COUPLE OF PAGES OF THE BIBLE AND I WILL GIVE YOU A GOOD FILM

- CECIL-B-DEMILLE



எனக்கும் அரசியலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்றாலும், அதற்கும் அப்பாற்பட்டு நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்திய அரசியல் அரங்கிலும் உலக அரசியல் அரங்கிலும் அவ்வப்பொழுது நிகழும் சிற்சில நிகழ்ச்சிகள், வேடிக்கை, வினோதங்கள், அவலங்கள், சூதாட்டங்கள் முதலியன என்னை உணர்வுபூர்வமாகத் தாக்குகின்றன. உதாரணமாக இன்றைக்கு பங்களாதேஷைச் சேர்ந்த தஸ்லீமா நஸ்ரீன் என்கிற எழுத்தாளப் பெண்மணியைப் பற்றிய செய்திகள்.

மத்தியதர வகுப்புக் குடும்பங்களில் தோன்றும் பிரச்னைகளையும், பொதுவாக பெண்களின் பிரச்னைகளையும் மட்டுமே எடுத்துக் கொண்டு நான் திரைப்படங்களில் கையாண்டு கொண்டிருந்த காலங்களில் அரசியல் அவலங்களை எடுத்துத் திரைப்படங்களிலே வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டுமென்கிற ஒரு உந்துதல் எனக்கு ஏற்பட்டதுண்டு! அதனுடைய வெளிப்பாடுதான் கோமல் சாமிநாதன் எழுதிய 'தண்ணீர் தண்ணீர்' நாடகத்தை நான் திரைப்படமாகத் தயாரித்து இயக்கியது. சொல்லப் போனால் தமிழ்த் திரையுலகிலே எடுக்கப்பட்ட முதல் அரசியல் படம் இது தான்... விருதும் கிடைத்தது; வியாபார ரீதியிலும் வெற்றி கண்டது.

அதே காலக் கட்டத்திலே அண்டை மாநிலம் ஒன்றில் நடந்த அரசியல் சூதாட்டம், HORSE TRADING என்னை ரொம்பவும் பாதித்தது. M.L.A.க்களை விலைக்கு வாங்கித் தனது கட்சிக்குச் சேர்த்து அரசு அமைக்கின்ற சூதாட்டம் தலைதூக்க ஆரம்பித்து 'ஜனநாயகம்' மெல்ல மெல்ல 'சோரம்' போகத் தொடங்கிய நேரம். இன்னும் ஒரே ஒரு எம்.எல்.ஏ.வை மட்டும் விலைக்கு வாங்கி விட்டால் ஆட்சி அமைத்து விட முடியும் என்று 'குதிரை வியாபாரம்' மும்முரமாக நடந்த அந்தச் சம்பவம்தான் எனது 'அச்சமில்லை அச்சமில்லை' திரைப்படத்தின் பிரதான கருவாயிற்று. 'கட்சித் தாவல் சட்டம்' அப்பொழுது உருவாக்கப்படவில்லை...

"பைபிள் புத்தகத்திலிருந்து இரண்டு பக்கங்களை எடுத்து என்னிடம் கொடு; அற்புதமான திரைப்படம் ஒன்று எடுத்துக் காட்டுகிறேன்" என்று CECIL B. DEMILLE சொன்னாரே அதே போல் இன்றைய செய்தித்தாள்களிலிருந்து ஒரு பக்கத்தைக் கிழித்து என்னிடம் கொடுங்கள்; நான் ஒரு நல்ல திரைப்படம் எடுத்துக் கொடுக்கிறேன் என்று சொல்லத் தோன்றுகிறது.



• கோமல்

டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி பத்திரிகை வாசகர்களுக்கு மிகவும் பழக்கமானவர். அவர் எழுதிய "நம்மால் முடியும் தம்பி! நம்பு!" என்கிற தொடர் கட்டுரைதான் எனது இன்னொரு படத்திற்கே விதையானது. அவரைப் பற்றி நான் இந்த இடத்திலே குறிப்பிட்டேயாக வேண்டும். அவரை நான் சந்தித்து அளாவளாவும்போதெல்லாம் ஊர் வம்பு எதையும் பேச மாட்டார்; மனித மேம்பாடு சமூக மேம்பாடு! இவைகளைத் தவிர அவர் வேறு எதையுமே சிந்திப்பதில்லை; பேசுவதில்லை. அரசியல் என்கிற மீடியத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமலே, மனிதனை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்; இளைஞர்களிடம் ஊக்கத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டுமென்கிற ஒரே சிந்தனையிலேயே ஊர் ஊராகச் சென்று இளைஞர்களுடன் உரையாடுகிறார்; மக்களுடன் பேசுகிறார்; உபயோகமான முறையில் மாநாடு நடத்துகிறார். அவருடன்

கே.பாலசந்தர்



• மர்லின் மன்ரோ



• ஹிட்ச்காக்

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாலே இளம் சிந்தனைகள் நமக்குத் தோன்றுகின்றன. இருபது வயது குறைந்த மாதிரி எண்ணம் உண்டாகிறது.

இவரை நான் எங்கு சந்தித்தேன்?

எப்படிச் சந்தித்தேன்?

'நீர்க்குமிழி' திரைப்படத்தில் எனக்கு ஒளிப்பதிவாளராகப் பணிபுரிந்தவர் திரு நிமாய் கோஷ் அவர்கள்.

கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் இவரை மாஸ்கோவில் சந்திக்க, திரும்பி வரும் போது கலைவாணர் இவரை சென்னைக்கு அழைத்து வந்து தமிழ்ப் படங்களுக்கு ஒளிப்பதிவாளர் ஆக்கினார்.

இதைப் பற்றி நிமாய் கோஷ் அவர்கள் குறிப்பிடும் போது,

"I CAME TO MADRAS FROM CALCUTTA VIA MOSCOW"

என்று ஹாஸ்யமாகச் சொல்வார்.

இதே போல்தான் எனது சின்ன வயது சிதம்பரத்து நண்பனை அவர் அமெரிக்கா வழியாகச் சென்னை வந்த போது சந்தித்தேன் என்று சொன்னால் பொருத்தமாகும்.

பத்திரிகைகளில் எழுதும் கட்டுரைகள் வாயிலாக நான் தெரிந்து கொண்டிருந்த டாக்டர் உதயமூர்த்திதான், அண்ணாமலை சர்வகால சாலையில் எனது பக்கத்து சீட் உதயமூர்த்தி என்று நீண்ட நாட்களுக்குப் பிறகுதான் புரிந்து கொண்டேன்.

OH! WHAT A GIANT LEAP BY MY FRIEND!

சமீபத்தில் ஒரு நாள் சந்தித்த போது இப்பொழுது திரைப்படங்களிலே பரவலாகக் காணப்படுகின்ற அதிகப்படியான செக்ஸ் காட்சிகள் பற்றியும், வன் முறைக் காட்சிகள் பற்றியும் கவலை தெரிவித்து என்னிடம் வாதாடினார்.



• உதயமூர்த்தி

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எனது திரைப் படங்களிலே இடம் பெறுவதில்லை யென்று நான் வாதாடிய போதும் அந்தத் துறையைச் சார்ந்தவன் என்கிற முறையிலே நீங்கள் ஏதாவது செய்ய வேண்டாமா என்று கேட்டார்.

நான் சொன்னேன் :

இப்பொழுது பெரும் கெடுபிடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் CENSOR பிரச்னைக்குக் கூட இரண்டு பக்கங்கள் உண்டு, நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல!

வன்முறையைப் பொறுத்தமட்டில் Alfred Hitchcock சொன்னார் :

"THERE IS NO TERROR IN KILLING; ONLY IN THE ANTICIPATION OF IT."

"ஒரு கொலை நடக்கப் போகிறது என்கிற எதிர்பார்ப்பிலேதான் பயங்கரம் இருக்கிறதே தவிர, நிஜமாகக் காட்டப் படுகிற கொலையிலே இல்லை!"

எவ்வளவு அனுபவபூர்வமான அறிவுரை இது! திரையுலக இயக்குனர்கள் இந்த உண்மையை மட்டும் புரிந்து கொண்டால்... வன்முறை விஷயத்தில் கத்தரிக்கோல் கெடுபிடி இருக்கவே சந்தர்ப்பமில்லை.

THE OTHER SIDE OF THE COIN :

மர்லின் மன்ரோ என்கிற ஹாலிவுட் நடிகை ஒருமுறை சொன்னார். அவர் நகைச்சுவையாகக் குறிப்பிட்டாலும் அதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

"THE TROUBLE WITH CENSORS IS THEY WORRY IF A GIRL HAS CLEVAGE; THEY OUGHT TO WORRY IF SHE HAS NOT ANY"

இதை நான் தமிழ்ப்படுத்த விரும்பவில்லை!

(நினைவலைகள் தொடரும்)

வேலி

காலை எட்டு மணிக்கு மேல் ஆகிவிட்ட போதிலும் லேசான இருட்டு இன்னமும் மிச்சமிருந்தது. காற்று சிலு சிலுப்போடு உடலுக்குள் ஊடுருவிற்று. சென்ற பத்து நாட்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் இந்தப் பிரதேசம் ரொம்பவும் குளிர்ந்து போய் விட்டது. இன்றும் கொட்டப் போகிறேன் என்று பயமுறுத்தும் வானத்தைப் பார்த்துக் கொண்டே தெருவில் இறங்கினார் கவுடர்.

இந்த சீதோஷ்ண நிலை காரணமாக இன்னும் டீச் செடிகளில் நிறையத் துளிர் விட்டிருக்கும். அவற்றை இன்றே பறித்து விட ஏற்பாடு செய்ய வேண்டும். ஒன்பது மணிக்குள் தோட்டத்துக்குப் போனால்தான் இலைபறிக்க ஆட்கள் கிடைப்பார்கள். இல்லாவிட்டால் வேறெங்கேனும் வேலைக்குச் சென்று விடுவார்கள்.

அவர் மூச்சு வாங்க மேலே ஏறுகையில், "சாமி! நல்லா இருக்கீங்களா?" - என்ற குரல் கேட்டுத் திரும்பினார். வெண்புகையாய் படர்ந்திருக்கும் பனிப்படலத்தின் ஊடே எதிரே நிற்பவனைக் கூர்ந்து நோக்கினார். ஓ... மாடசாமி. இப்போது இவன் எங்கே வந்தான்.

"என்ன கவுடரே, நல்லா இருக்கீங்களா, மிஸ்ட்டுல ஆளை அடையாளம் தெரியல் லீங்களா?" -அசட்டுச் சிரிப்புடன் நிற்கும் மாடசாமியைக் காண்கையில் வழக்கமாய்த் தோன்றும் எரிச்சல் அவரைப் பற்றியது.

"ம்... ம்..." - என்றவாறே அவர் மேலே நடந்தார்.

"தோட்டத்துப் பக்கம் போறீங்களா கவுடரே?"

"ம்... ம்..." - என்று மறுபடியும் ஓசையை மட்டும் எழுப்பினார் கவுடர், இவன் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும் என்பது போல.

"தோட்டத்திலே இலை பறிக்கிற வேலை இருக்குதுன்னா ஆளுங்ககிட்டே கொஞ்சம் சொல்லி வையுங்க சாமி. என் தோட்டத்து இலையையும் தெரியாம பறிச்சுரப் போறாங்க. நீங்க கூடவே இருந்து கொஞ்சம் சொல்லுங்க சாமி, தயவு செஞ்சு."

அவர் எதுவும் பேசாது மௌனமாக நடப்பதைப் பார்த்து விட்டு அவனே தொடர்ந்தான்.

"நான் எப்படியாவது வேலி போட்டுட ஏற்பாடு செய்யறேன் சாமி. கொஞ்சம் பணப் பிரச்னை. அதான் வேலி போட முடியாம திண்டாடறேன்."

வேலி போட்டு விட்டால் மட்டும் இவனுக்குத் தோட்டத்தை நிர்வகிக்கத் தெரிந்து விடுமா? செடியில் எந்த இலையைக் கிள்ள வேண்டும் என்ற ஞானம் கூட இல்லாத இவனெல்லாம்...

மாடசாமி இவரது மனத்தில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொண்டவன் போலப் பதில் சொன்னான். "தேயிலை பத்தின விஷயங்களெல்லாம் கத்துக்கிறதுக்காக உபாஸிலே வகுப்பிலே சேர்ந்திருக்கேன் சாமி. ப்ரீயாவே சொல்லித் தராங்களாம். அடுத்த வாரத்திலேயிருந்து வரச் சொல்லியிருக்காங்க. எல்லா விவரமும் தெரிஞ்சிக்கிட்டேன்னா அப்புறமா நானே இலை பறிச்சிக்கிட்டுப் போய் பாக்டரியிலே கொடுத்துடுவேன். அதுவரைக்கும் தயவு பண்ணுங்க சாமி. என் பூமியிலேயிருந்து இலை பறிக்கடாதீங்க."

அவர் அலட்சியமாக ஒரு பார்வையை அவன் மேல் வீசி விட்டு மேலே நடந்தார். கேவலம் ஐந்து சென்ட் தோட்டத்தில் இலையெடுக்கக் கூலி கூட கொடுக்க முடியாத வக்கற்ற பயலுக்கு, பேச்சு ஒரு கேடா என்று தோன்றிற்று. இந்தக் கூலிப் பயலுக்குப்



போய் தம் நிலத்தின் ஒரு பகுதியை விற்கப் படும்படி. ஆயிற்றே என்ற உணர்வு கிளம்பி, எரிச்சலைத் தோற்றுவித்தது.

சில மாதங்களுக்கு முன்னால் மகளின் கல்யாண விஷயமாக நிலத்தின் ஒரு பகுதியை விற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்ட போது, அவருக்கு உண்டான வருத்தம் கொஞ்ச நஞ்சமல்ல. தமது நிலம் இருக்கும் திசையில் ஒரு அந்நிய ஆளை நடக்க விடுவதைக் கூட சகிக்க முடியாத அவருக்கு, நிலத்தை மற்றவர்க்கு விற்க நேரிடும் விஷயத்தை ஜீரணிக்க வெகு நாட்களானது. ஆனால் வேறு வழியின்றி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு புரோக்கர் வழியாக நிலத்தை விற்க ஏற்பாடுகள் செய்தார். மேல்குன்னூரில் இருக்கும் ஒரு பணக்காரர் நிலத்தை வாங்க விருப்பம் தெரிவிப்பதாக அறிந்து, பேரம் பேசி முடித்து ரிஜிஸ்தர் செய்கையில்தான் அந்தப் பெரிய மனிதர் நிலத்தை மாடசாமிக்காக வாங்கப் போகும் விஷயம் தெரிய வந்தது. அவர் மெட்றாஸிற்குப் போய் செட்டில் ஆகப் போவதாகவும் அவரிடம் இத்தனை வருஷங்களாக விசுவாசமாக உழைத்த மாடசாமிக்கு அவனைப் பாராட்டும் அடையாளமாக இந்த நிலத்தை வாங்கிப் பரிசாக அளிக்கிறார் என்பதும் தெரியவந்தது.

மகளின் கல்யாண அமளியில் மும்முரமாயிருந்த அவர் சில தினங்கள் கழித்து தோட்டத்துப் பக்கம் போகையில் மாடசாமியைப் பார்க்க நேர்ந்தது. டீச் செடியைப் பற்றியும் இலையைப் பற்றியும் அவன் அசட்டு இளிப்புடன் விசாரித்த போது, அவருக்கு ஆத்திரம்தான் வந்தது. இந்தப் பயலுக்கு வந்த வாழ்வைப் பார் என்று மனம் குமுறியது. அவனுக்குத் தேயிலைச் செடி பற்றிய விவரம் ஒன்றும் தெரியாதது கூட ஒரு



விதத்தில் நல்லதாகப் போயிற்று. கொடுக்கப் பட்டிருக்கும் நிலத்துக்கு எல்லையாக எந்த வொரு வேலி அமைப்பும் அவனால் போட முடியாததால் இன்னும் கூடுதலாகவே சௌகரியமாகப் போயிற்று. முன்பு போலவே தோட்ட முழுவதிலும் உள்ள தேயிலைச் செடிகளிலிருந்து இலைகளை எடுத்து, அவரால் பயன்பெற முடிந்தது.

தேயிலை பறிக்கும் கூலியாட்கள் வசிக்கும் வரிசையில் போய் கவுடர் விசாரித்ததில், அனேகம் பேர் வெளியே வேலைக்குப் போய் விட்டதாகத் தெரிந்தது. நல்லவேளையாக இரண்டு பெண் கூலி யாட்கள் மட்டும் இருந்தனர். அவர்களை அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குப் போனார்.

அந்தப் பெண்களை இலை பறிக்கச் சொல்லி விட்டு அவர் மேட்டில் ஏறி உட் கார்ந்து கொண்டார்.

அவர்களில் ஒருத்தி இவர் இருக்கும் திசை நோக்கி ஓங்கிய குரலில் ஏதோ கேட்பது காதில் விழ அவர் திரும்பினார். "இந்தப் பக்கத்து நிலத்தை நீங்க யாருக்கோ வித்துப் போட்டீங்களாமே. எங்கேயிருந்து இலை பறிக்கணும்னு குறிப்பிட்டுச் சொன் னீங்கன்னா நல்லது சாமி."

அவருக்குச் சற்றுமுன் பார்த்த மாட சாமியின் நினைவு வந்தது. 'இந்தத் தடவை யாவது இலை எடுக்காதீங்க சாமி' என்று அவன் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

அவர் ஒரு நொடியில் சமாளித்துக் கொண்டார். மாடசாமியின் வார்த்தைக் கெல்லாம் போய் பெரிதாய் மதிப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறேனே, என்ன ஒரு மடையன் நான்.

அவர் அங்கிருந்தே கையை காட்டினார். 'எல்லாவற்றையும் பறித்து விடுங்கள். எல் லாம் நம்மதுதான்!'

அந்தப் பெண்கள் மெதுவாகப் பறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, அவர்களை விரட்டிக் கொண்டிருந்தார்.

வலதுபுறமாக இருந்த சீதாப்பழ மரத்தின் பின்னே ஒரு சாக்குப் பை நிறைய டீ இலை கள் வைத்திருப்பதைப் பார்த்தார். இதை இவர்கள் ஒளித்து வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுந்தது. போன மாதம் இப்படித்தான் காரி கவுடர் தோட்டத்தில் நடந்ததாம். இலை பறிப்பவர்கள் இரண்டு மூன்று மூட்டைகளை மறைத்து வைத் திருந்து, இருட்டிய பிறகு எடுத்துப் போய் பாக்டரியில் கிடைத்த விலைக்கு விற்றுக் கொண்டிருந்தார்களாம். அதே போல இந்தப் பெண் பிள்ளைகளும் செய்கிறார்கள். அதுதான் இந்தத் திருட்டு முழி முழிக் கிறார்கள்.

இந்த நினைவு எழுந்ததும் அவருக்கு உட லெங்கும் உஷ்ணம் பரவியது. கண்கள் ஜிவு ஜிவுத்துப் போய் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு அவர்களைப் பார்த்துச் சத்தம் போட்டார்.

அவர் சப்தம் போடுவதைக் கேட்டுச் சில நொடிகள் ஸ்தம்பித்துப் போய் நின்ற அவர் கள், தங்களுக்குள் சின்னதாக ஏதோ பேசிக் கொண்டார்கள். சட்டென்று இலை பறிப் பதை நிறுத்தி விட்டு சேலைத் தலைப்பை உதறிக் கட்டிக் கொண்டார்கள். அவர் எதிரே வந்து நின்று, "இந்தாங்க சாமி, வாய்க்கு வந்தபடி பேசாதீங்க. நீங்களும் ஆச்சு. உங்க வேலையும் ஆச்சு" என்று சொல்லி விட்டு செடிகளினூடே சரசர வென்று இறங்கி நடந்தார்கள். சில நொடி களுக்குப் பின் திரும்பி, "இனிமே உங்க தோட்டத்துலே யார் வந்து இலை பறிக் கிறாங்கங்கிறதையும் நாங்க பார்த்துடறோம்" என்ற வாக்கியத்தை வீசி விட்டு, ஓட்டமாய் ஓடி மறைந்தார்கள்.


அவர்கள் சென்றதையே பார்த்துக் கொண்டு நின்ற கவுடர் தன்னைச் சுற்றிலும் பார்த்தார். இலை எடுத்த பைகள் இங்கு மங்குமாகச் சிதறிக் கிடந்தன. எப்போதும் போலத்தானே இந்தக் கூலியாட்களை அதட்டினார். இவர் தரும் கூலியை நம்பி வாழ்பவர்களுக்கு இத்தனை திமிரா?

டீ இலைச் சாக்குகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு நிமிடம் திணறினார். பொழுது சாய்ந்து கொண்டு வருவதால் இனி வேறு கூலியாள் கிடைப்பதும் கஷ்டம். மேலும் அந்தப் பெண்கள் போகிற போக்கில் கத்தி விட்டுச் சென்றது வேறு நினைவுக்கு வந்தது. அவர்கள் உள்ளூர்க் கூலியாட்கள். ஆகவே அவர்களை மீறிக் கொண்டு வேறு யாரும் உடனடியாக இவரது தோட்டத்தில் வேலை செய்ய வர மாட்டார்கள் என்பது நிச்சயம்.


இந்த இலைப் பைகளை இங்கேயே வைத்து விட்டு நாளைக் காலை நம் வீட்டுப் பக்கத்திலிருந்து ஏதேனும் ஆட்களை அழைத்துக் கொண்டு வரலாம் என்றால் அதுவும் சாத்தியம் இல்லை. இலைப் பைகள் இரவோடிரவாகக் கண்டிப்பாகத் திருட்டுப் போய் விடும். என்ன செய்வது?

அவர் சிறிய சிறிய பைகளாக இருந்த வற்றை மொத்தமாக நான்கு கோணிப் பைக ளில் திணித்தார். கடவுளே, இந்தப் பைகளை எப்படி பாக்டரிக்கு எடுத்துப் போவது? கூலி

21 விதமான பலன்கள் பெற



21 பலவிதமான பத்ரங்களைக் கொண்டு
பிள்ளையார் சதுர்த்தி
அன்று பூஜை செய்ய வேண்டும்.



பத்ரங்கள்: 1. முல்லை இலை; 2. கரிசலாங்கண்ணி இலை; 3. வில்வம்; 4. வெள்ளருகம்புல் வேறோடு கூடியது; 5. இலந்தை இலை; 6. ஊமத்தை இலை; 7. துளஸி; 8. வன்னி இலை; 9. நாயுருவி இலை; 10. கண்டங்கத்திரி இலை; 11. அரளி இலை; 12. எருக்கிலை; 13. மருதை இலை; 14. விஷ்ணுக் கிராந்த இலை; 15. மாதுள இலை; 16. தேவதாரு இலை; 17. மருவு; 18. அரச இலை; 19. ஜாதி மல்லிகை இலை; 20. தாழை இலை; 21. அகத்திக் கீரை இலை;

பலன்கள்: 1. தர்மம்; 2. பொருள்; 3. இன்பம்; 4. ஸௌபாக்யம்; 5. கல்வி; 6. பெருந்தன்மை; 7. நலவாழ்வுடன் கூடிய மோக்ஷம்; 8. முகத்தில் பால் வடியும் தன்மை; 9. வீரலக்ஷ்மி கடாக்ஷம்; 10. விஜயலக்ஷ்மி கடாக்ஷம்; 11. எல்லோரும் தன்னிடம் அன்பாயிருக்கும் தன்மை; 12. குடும்பத்தில் கர்ப்பாக்ஷை; 13. மக்கட்பேறு; 14. நுண்ணறிவு; 15. நற்புகழ்; 16. சோகத்தினால் வாடாத்தன்மை; 17. அசுபங்களை அகற்றல்; 18. தன் வாக்கிற்கு எதிர் வாக்கு அடங்கிப் போதல்; 19. கோபம் கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் தன்மை; 20. பிறர் ஏவும் ஆபிசாரம் அடங்குதல்; 21. துயர் தீர்தல்.

பூரண பலன் பெற
எங்களது இனிப்பு மற்றும் கார வகைகளை வாங்கி
நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்

திருமண வைபவங்களுக்கு:
சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப்பால் முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள் செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையார்,
சென்னை - 20.
☎ 412557

யாட்கள் இருந்த போது வெகு சுலபமாக இருந்த வேலை இப்போது ஏன் இவ்வளவு மலைப்பைத் தருகிறது? ஒவ்வொரு பையாக நாம்தான் தூக்கி ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் பாக்டரிக்கு எடுத்துப் போக வேண்டுமா?

அவருக்கு அந்த வழி நெடுகிலும் 'கவுடரே கவுடரே' என்று மதிப்பும் மரியாதையு மாய்க் கூப்பிடும் ஜனங்களின் நினைவு வந்தது. அவர்களின் இடையே நாம் மூட்டையைச் சுமந்து சென்றால் நம் கௌரவம் என்ன ஆகும்!

அவர் வேறு வழியின்றி நன் றாக இருட்டட்டும் என்று காத்திருந்தார். இருட்டில் மூட் டையைத் தூக்கிப் போனால் யாரோ கூலியாள் போவதாகத் தான் நினைத்துக் கொள்வார்கள். வேகமாகத் திரும்பி வந்து ஒவ்வொரு மூட்டையாக எடுத்துப் போய் விடலாம் என்று தீர்மானித்தார்.

நன்கு இருட்டிய பிறகு ஒரு மூட்டையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார். பழக்கம் இல்லாததால் நடக்க முடியாமல் கால்கள் தள்ளாடின. சில நிமிட நடைக்குப் பிறகு எதிர்ப்பட்ட ஓர் உருவம் இவரைப் பார்த்து விட்டு நிற்பது தெரிந்தது. இவர் முகத்தைக் காண்பிக்காதவாறு நடக்க முயற்சிக்கையில்...

"கவுடரே, நீங்களா... என்ன இது. மூட்டையைத் தூக்கிக்கிட்டு..."

கடவுளே... மாடசாமி. இவன் ஏன் வந்து தொலைத்தான்.

அவன் திரும்பத் திரும்பக் கேட்டதால் அவர் வேறு வழியின்றி ஆனால் விவரம் எதுவும் சொல்லாமல் பாக்டரிக்கு இலை களைக் கொண்டு போவதாகச் சொன்னார்.

"பாக்டரிக்கா... இடத்தை மட்டும் காண்பியுங்க சாமி. நான் தூக்கிட்டு வரேன்", என்று சொல்லி விட்டு மூட்டையைப் பலவந்தமாக அவரிடமிருந்து பிடுங்கித் தன் தலையின் மேல் வைத்துக் கொண்டான் மாடசாமி.

அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அவன் அந்த நாலு மூட்டைகளையும் பாக்டரிக்கு வெகு சுலபமாகக் கடத்துகையில் கவுடரின் மனத்தில் ஒரு எண்ணம் மின்னல் போலப் பளிச்சிட்டது. இந்த மூட்டைகளில் இருப் பவற்றுள் பெரும்பாலான இலைகள் இவனது உடைமை நிலத்திலிருந்து எடுக் கப்பட்டதுதான். இதை இவன் அறிவானா?

பாக்டரியில் இலைகளை நிறுத்து, அதற்கான பணத்தை வாங்கிக் கவுடரிடம் கொடுத்து விட்டு வழக்கம் போல அசட்டுத் தனமாய்ச் சிரிக்கும் மாடசாமியைக் காண்கையில் கவுடருக்கு மனத்தின் ஒரு மூலையில் ஒரு சங்கட உணர்வு தோன்றி யது.


மாடசாமி நீட்டிய பணத்தை அவன் கரங்களுக்குள் அழுத்தினார். "இதை நீயே வெச்சுக்க மாடசாமி. இலையிலே நெறைய உன் பூமியிலிருந்து எடுத்ததுதான். வழக்கம் போல கூலியாளுங்க எல்லை தெரியாம எடுத்துட்டாங்க."

அவன் அந்தப் பணத்தைத் திரும்ப அவரிடம் கொடுத்தான். "அப்போ உங்க தோட்டத்து இலையும் கலந்துதானே இருக்கு. எவ்வளவு என்னுதுன்னு தெரியா தப்போ நான் இந்தப் பணத்தை எப்படி வாங்கிக்கிறது. அது சரியில்லீங்க."

சிறிது நேரம் கழித்து அவன் அவரிட மிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

"நான் கௌம்பறேங்க. நேரமாயிடுச்சு" என்று சொல்லி விட்டு நடந்தவன் சில நொடிகள் நிதானித்துத் திரும்பி, "சீக்கிரமே வேலி போட்டுருவேங்க. அதுவரைக்கும் இலை பறிக்காம பார்த்துக்குங்க சாமி!" என் றான்.

பன்னிரண்டாவது ஆசிய விளையாட்டு




பன்னிரண்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஹிரோஷிமாவில் நடக்கவிருக்கிறது. (அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து அக்டோபர் 16-ம் தேதி வரை)

மிக்கி மவுஸ் போன்ற அமைப்புள்ள இரண்டு சின்னங்கள் - poppu (ஆண்புறா) cuccu (பெண்புறா)- தயாரிக்கப்பட்டு விட்டன. ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலேயே இதுவரை இல்லாத அளவில் பலதரப்பட்ட விளையாட்டுகளும், கலந்து கொள்ளும் நாடுகளும், விளையாட்டு வீரர்களும் அதிகம்.

சுமார் 7,300 விளையாட்டு வீரர்கள் இந்த ஆசிய போட்டியில் கலந்து கொள்ளப் போகிறார்கள். 337 வகைப் போட்டிகளுக்கு 43 நாடுகள் பங்கேற்க உள்ளன.

'ஹிரோசீமா பிக் ஆர்ச்' என்ற ஸ்டேடியத்தில்தான் இந்த ஆசியவிளையாட்டுப் போட்டிகள் தொடங்கி, அந்த ஸ்டேடியத்திலேயே முடிவு பெறும். பத்தாயிரம் பேர் அமர்ந்து பார்க்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 3.5மீட்டர் உயரம், 4.6 மீட்டர் அகலம் உள்ள நூறு பெரிய டீவி திரைகளில் அவ்வப்போது வீடியோ காட்சிகளும் தெரியும்.

நன்றி: ஜப்பான் காலிங்
- கா.ரா.குமார்



மணிக்கொடி

11

ராஜாராமன் திறந்த கதவுக்கு அப்பால் இரண்டு இளைஞர்கள் நின்றிருந்தார்கள். இருவரில் மூத்தவனாய்த் தெரிந்த மனிதனின் முகத்தில் தம்மை அடையாளம் கண்டு கொண்டதற்கான அறிகுறியும், வியப்பும் தெரிந்ததை அவர் கவனித்தார்.

"மிஸ்டர் ராஜாராமனைப் பார்க்கணும். நீங்கதானே?"

"ஆமா. நானேதான். என்ன விஷயமாய்ப் பார்க்கணும்?"

"உள்ளே வந்துதான் பேசணுங்க."

"சரி, வாங்க."

அஞ்சனா, அமராவதி, நரேந்திரநாத் ஆகியோர் அமர்ந்திருந்த கூடத்துக்கு முன்னால் இருந்த தமது அறைக்குள் அவர் அவர்களை அழைத்துச் சென்றார்.

"உக்காருங்க."

"நாங்க சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்ஸ். உங்க வீட்டைச் சோதனை போடச் சொல்லி எங்களுக்கு உத்தரவு."

"ஒரு நிமிஷம்... அஞ்சனா, அஞ்சனா..."

"என்னப்பா?" என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்த அவளிடம், "இவா சி.ஐ.டி.லாம். நம்மாத்தைச் சோதனை போடறதுக்காக வந்திருக்கா. அம்மாகிட்டே சொல்லி சீக்கிரம் சாப்பிட்டு முடிக்கச் சொல்லு. ஏன்னா சமையக்கட்டுலயும் சோதனை போடுவா..." என்றார் ராஜாராமன் சிரிப்புடன்.

அவர் தன்னையழைத்துச் சொன்னதன் உட்கிடையைப் புரிந்து கொண்ட அஞ்சனா, "சரிப்பா, சொல்றேன்," என்று உள்ளே விரைந்து 'ஆவன' செய்ய முற்பட்டாள்.

"சொல்லுங்க."

"என்னை உங்களுக்கு அடையாளம் தெரியல்லேன்னு தோணுது. தினசரி எத்தனையோ கட்சிக்காரங்க உங்களைத் தேடிக்கிட்டு வர்றாங்க. எத்தனை பேரைன்னு நினைப்பு வச்சுப்பீங்க?"

ராஜாராமன் அவனைக் கூர்ந்து பார்த்து அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது தோற்றுப் போனார்.

"என் பேரு சிவப்பிரகாசம். இவன் என் சொந்தத் தம்பி. இவன் பேரு ஞானப்பிரகாசம். இவனும் சி.ஐ.டி.தான். ஆறு வருஷத்துக்கு முந்தி எங்கிட்ட ஒரு சல்லிக்காசு கூட வாங்காம எனக்காக ஒரு கேஸ்ல வாதாடி ஜெயிச்சுக் குடுத்தீங்க. ஞாபகம் வருதா?"

"அட.. அந்த சிவப்பிரகாசமா? இப்ப ஞாபகம் வந்துடுத்துப்பா."

"அப்ப நீங்க புரசைவாக்கத்துல இருந்தீங்க."

"ஆமா. நீங்க காலேஸ் டபிளா இருந்தீங்க."

"இப்ப சி.ஐ.டி.– தம்பி! இவரு மட்டும் நமக்காகப் பணம் வாங்காம வாதாடி சித்தி ஏமாத்தப் பார்த்த அப்பாவுடைய வீடு வித்த பணத்துல நமக்கான பங்கை வாங்கிக் குடுத்திருக்கலைன்னா நாம இந்த நெலமைக்கு உயர்ந்திருக்க முடியாது."

அதுவரை உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்த ஞானப்பிரகாசம் முதன் முறையாகக் கீற்றுப் போல் சின்னதாய் ஒரு புன்னகை காட்டினான்.

"அப்பப்ப சில ஏழைகளுக்காகவும் காசு வாங்காம வாதாடி, அவங்க கேஸ்களை ஜெயிச்சுக் கொடுக்கணும்கிறது என்னோட கொள்கை. அது தெரிஞ்சோ தெரியாமலோ நீங்க எங்கிட்ட வந்தீங்க."

"கேள்விப்பட்டுத்தான் சார் வந்தேன். நீங்களும் என்னோட நெலமையைப் புரிஞ்சுக்கிட்டு காலணாக்கூட வாங்காம வாதாடி ஜெயிச்சுக் குடுத்தீங்க. உங்களுக்கு அதுக்குப் பிரதி உபகாரமா ஏதுஞ்செய்யாட்டியும், இப்ப உங்க வீட்டைச் சோதனை போட வந்திருக்கேன்..."

ஜோதிர்லதா கிரிஜா

ராஜாராமன் உதடுகள் பிரியாமல் புன்சிரிப்புக் காட்டினார்.

"அது சரி. 'எதுக்காக எங்க வீட்டைச் சோதனை போட வந்திருக்கீங்க'ன்னு நீங்க கேக்கவே இல்லியே, சார்?" - 'அப்படியானால் வெள்ளைக்கார அரசின் சந்தேகம் சரியானதுதானா? அதனால்தான் உங்களையும் அறியாது ஒரு சின்ன ஆச்சரியம் கூடக் காட்டாமல் உட்கார்ந்திருக்கிறீர்களா?"

கணத்துக்கும் குறைவான பொழுதுக்குள் ராஜாராமன் சுதாரித்துக் கொண்டு சிரித்தார். "இப்பத்தான் எல்லார் வீடுகள்ளயும் திடீர் திடீர்னு பூந்து போலீஸ்காரங்க சோதனை போடறாங்களே. அதனாலதான் என்ன விஷயமாச் சோதனை போடப் போறீங்கன்னு கேக்கல்லே..."

"சார், உங்க விஷயத்துல நாங்க ரொம்பவும் கடுமையா செர்ச் பண்ணப் போறதில்லே. செர்ச் பண்ணினதாப் பேர் பண்ணிட்டு எதுவும் கிடைக்கல்லேன்னு ரிப்போர்ட் எழுதிடறதாத்தான் இருக்கோம்."

"உங்க இஷ்டப்படி செய்யுங்க... ஆனா... இங்லிஷ்காரங்க சந்தேகப்படற மாதிரி ஏதாவது தடயம் இந்த வீட்டில உங்களுக்குக் கிடைச்சா என்ன பண்றதா இருக்கீங்க?" - ராஜாராமன் சிரித்தபடி வினவினார்.

சிவப்பிரகாசமும் ஞானப்பிரகாசமும் பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டார்கள். சிவப்பிரகாசம் சொன்னான் : "அப்படி ஏதாச்சும் கிடைச்சாலும் நாங்க எதுவும் கிடைக்கலைன்னு ரிப்போர்ட் எழுதறதாத் தான் இருக்கோம்."


"எனக்கு உதவி செய்யணும்கிறதுக்காக உங்களுக்கு நீங்களே ஆபத்தைத் தேடிக் காதீங்க, சிவப்பிரகாசம். நாளைக்கு வேற சி.ஐ.டியை அனுப்பி வைச்சாலும் வைப்பாங்க..."

"அவங்க வந்தப்ப தடயம் கிடைச்சிச்சு. நாங்க வந்து தேடினப்ப கிடைக்கல்லே. அம்புட்டுத்தேன்..."

"அப்ப இங்க தடயம் இருக்குன்னு சொல்றீங்களா?" என்று ராஜாராமன் சிரிக்க, "அது உங்களுக்குத்தானே சார் தெரியும்? தேடிப் பார்த்தாத்தான் எங்களுக்குத் தெரியும்" என்ற சிவப்பிரகாசமும் சிரித்தான்.

"சரி, பாருங்க."

ஞானப்பிரகாசம் உட்கார்ந்திருக்க, சிவப்பிரகாசமே சாவி செருகி இருந்த அலமாரி, மேசை, அதன் இழுப்பறை என்று





"ஆஸ்பத்திரி திறப்பு விழாவுக்குத் தலைவரை அழைச்சது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"என்னென்ன டெஸ்ட் உண்டோ அத்தனையையும் தனக்கு இலவசமா பாத்துட்டுப் போயிட்டார்!"

— அம்பை தேவா

மேலெழுந்தவாரியாக ஆராய்ந்தான். தேடியதாகப் பேர் பண்ணிய பிறகு, திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்தான்.

"ஐ'ஆம் சாரி, சார். செர்ச் வாரன்டை... நீங்க கேட்டு வாங்கிப் பார்க்கல்லே. நாங்களும் காட்டல்லே..." என்று சிரித்த அவன் தனது கைப்பையைத் திறந்து ஓர் உறையை வெளியே இழுத்தான். உத்தரவை எடுத்து அவரிடம் காட்டினான்.

"எல்லாம் ஒரு நம்பிக்கைதான் சிவப்பிரகாசம்."

"அப்புறம் வீட்டுக்குள்ளயும் தேடினதா நாங்க பேர் பண்ணணுமே, சார்? போகலாமா?"

"பேஷா. வாங்கோ..."

கூடத்துக்கு வந்த இருவரும், அங்கு உட்கார்ந்து அமராவதியுடனும் அஞ்சனாவுடனும் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த நரேந்திரநாத் பானர்ஜியைப் பார்த்தார்கள். அவனது பார்வையும் அவர்கள் பார்வைகளும் கலந்தன. சிவப்பிரகாசத்தின் முகமும் ஞானப்பிரகாசத்தின் முகமும் மாற்றங் கொண்டன.

"கேட்ட உடனே, இன்னிக்கு பேப்பர் தர்றையே... பேப்பர்லே என்ன நியூஸ்?"

"ஓசி பேப்பர் தர மறுத்தவருக்குக் கத்தி குத்து'ன்னு செய்தி வந்திருக்கு!"

— வி.சி. கிருஷ்ணரத்தினம்



பக்கத்து அறையையடைந்ததும், கைப்பையிலிருந்து ஓர் உறையை எடுத்து அதனின்று ஒரு நிழற்படத்தை உருவிய சிவப்பிரகாசம், "சார், உங்க வீட்டில உக்காந்து பேசிட்டிருக்கிற ஆள் இவருதானான்னு கொஞ்சம் பாருங்க," என்றான்.

அதை வாங்கிப் பார்த்த ராஜாராமன், "ஆமா, அவன் மாதிரியேதான் இருக்கான். என்ன விஷயம்?" என்றார். அவருக்கு இதயம் தடதடக்கலாயிற்று.

"அந்தாளு பெங்காலிதானே?"

சட்டெனக் கிளர்ந்த யோசனையில், "இல்லியே. அவன் பக்கா தெக்கத்தியாளுன்னா? வெங்கட்ராமன்னு பேரு... நீங்களே வேணாப் பேசிப் பாருங்களேன்..." என்றார், இரைந்த குரலில்.

"அப்படியா? டிட்டோ அந்தக் கொலைகார நரேந்திரநாத் பானர்ஜி மாதிரியே இருக்கானே?" என்றான் சிவப்பிரகாசம்.

12

நரேந்திரநாத் பானர்ஜியைத் தெற்கத்தியான் என்றும் அவனது பெயரை வெங்கடராமன் என்றும் சொன்னது அவன் வாயைத் திறந்து ஒரே ஒரு தமிழ்ச் சொல்லை விடுவித்ததுமே பொய்த்துப் போகுமே என்று எண்ணிய ராஜாராமன், வாயில் வந்ததை உளறிய தமது அவசரக் குடுக்கைத்தனத்துக்காகத் தம்மையே நொந்து கொண்டார்.

புகைப்படத்தைத் திரும்பவும் தனது பையினுள் பத்திரப்படுத்திய சிவப்பிரகாசம் அந்த அறையிலும் ஓரிரு பொருட்களை நகர்த்தியும் கவிழ்த்தும் பார்த்த பிறகு, "அப்ப நாங்க கௌம்பட்டுமா, சார்?" என்றான்.

"செய்யுங்க. சிவப்பிரகாசம்..." என்ற ராஜாராமன் இருவரையும் முந்திக் கொண்டு அவ்வறையை விட்டு வெளியே வந்தார். கூடத்தில் நரேந்திரநாத் பானர்ஜி உட்கார்ந்திருந்த நாற்காலி காலியாக இருந்தது.

"என்ன அஞ்சனா, வெங்கட்ராமன் எங்கே? போயிட்டானா?" என்று இரைந்த குரலில் கேட்டபடி அவர்களை நெருங்கிய ராஜாராமன் கண்களை மலர்த்திச் சாடை செய்தார்.

அஞ்சனா, "ராம் போயிட்டு வர்றேன்னு உங்ககிட்ட சொல்லச் சொன்னாம்ப்பா...

மீண்டும் வந்துவிட்டது... உங்களுடைய செல்ல மகளுக்கு.

ராஜ் லக்ஷ்மி

யூனிட் ப்ளான்

அவளுடைய வளமான எதிர்காலத்திற்கு

இத்திட்டம்
ஜூலை 1, 1994
முதல்
அமலில் உள்ளது

சிறப்பம்சங்கள்:

- காலவரையறையற்ற ப்ளான்.
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 1500 மற்றும் அதற்குமேல் ரூ. 500-ன் மடங்கில். உச்ச வரம்பு கிடையாது.
- தனிநபர், மாநில, மத்திய அரசு, ட்ரஸ்ட், சங்கம், கார்ப்பொரேட் பாடி — 5 வயது வரையுள்ள பெண் குழந்தைக்காக முதலீடு செய்யலாம்.
- குழந்தை பிறந்ததும் செய்யும் ரூ. 1500 முதலீடு 20 ஆண்டுகளில் ரூ. 21,000 ஆகலாம். வளர்ச்சி நிலை ப்ளானில் சேர்ந்திடும் வயதைப் பொறுத்திருக்கும்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் பட்ட தேதியிலிருந்து முதிர்வுறும் தேதி கணக்கிடப்படும்.
- ஒவ்வொரு காலவரையிலும் அறிவிக்கப்படும் போனஸ் முதிர்வடைந்ததும் வழங்கப்படும்.

எல்லா மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க்குகளுக்கு உட்பட்டவையாகும். மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டை பாதிக்கும் அம்சங்கள் மற்றும் ஆட்சித்திறம் பொறுத்து திட்டங்களின் NAV ஏறிடவும் இறங்கிடவும் செய்யும். ராஜ் லக்ஷ்மி என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே மற்றும் திட்டத்தின் தரத்தையோ, அதன் எதிர்கால வளர்ச்சியையோ அல்லது வருமானத்தையோ எவ்விதத்திலும் சுட்டிக்காட்டுவது ஆகாது. தயவுசெய்து முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101

கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர். போன்: 214973 • சென்னை. போன்: 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060

UTI-59/94 TA B

உங்களைத் தொந்தரவு பண்ண வேண்டாம் இதுக்காக எங்ககிட்ட சொல்லிட்டுப் போனான்," என்றாள்.

அவருக்கு அப்பாடா என்று இருந்தது. நல்லவேளை வேங்கடராமனின் சுருக்கம் ராம் என்று சமாளிக்கலாம்.

இருவரையும் வாசல் வரை போய் வழி யனுப்பிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு திரும்பிய ராஜாராமன், அயர்வுடன் தொப் பென்று மகள்களுக்கு எதிரே ஒரு நாற்காலி யில் உட்கார்ந்தார்.

"அவனுக்கு எப்படியோ தோணி இருக்கு உடனே இங்கேருந்து கெளம்பிப் போயிட னும்னு" என்றார் ராஜாராமன் வியர்த் திருந்த முகத்தை மேல்துண்டால் ஒற்றிய வாறு.

"ஒருவேளை சி.ஐ.டி. காரா ரெண்டு பேரும் ஒரு மாதிரி சந்தேகமாத் தன்னை உத்துப் பார்த்ததை அவன் கவனிச்சுட் டான்னு தோணறது. இல்லேன்னா சட்னு எழுந்து ஓடிடணும்னு அவனுக்கு எப்படித் தோணி இருக்கும்?" என்றாள் அஞ்சனா.

"நீங்க பக்கத்து ரூம்லே அவங்ககிட்ட 'அவன் பக்கா தெக்கத்தி ஆளுன்னா? வெங் கட்ராமன்னு பேரு' அப்பமன்னு சத்தமாச் சொன்னதுமே எங்களுக்குப் புரிஞ்சு போயிடுத்துப்பா, அது எச்சரிக்கைன்னு. ஆனா அதுக்கு முன்னாடியே நரேந்திரநாத் கெளம்பிட்டான்" என்றாள் அமராவதி.

"போறதுக்கு முந்தி ஏதாவது சொன் னானா?"

"...'நான் உடனே புறப்பட்டாகணும். சி.ஐ.டிக்காரா ரெண்டு பேரும் என்னைப் பார்த்த பார்வை சரி இல்லே. அப்பாகிட்ட சொல்லிடுங்கோ' அப்படின்னு சொல்லிட்டு ஓட்டமும் நடையுமா வெளியேறிட் டாம்ப்பா!" எனறாள் அஞ்சனா.

"நல்ல வேலை பண்ணினான். புத்தி சாலிப் பையன்."

"ஏம்ப்பா, நீங்க பாட்டுக்கு யோசிக்காம அவனைத் தெக்கத்தியாளுன்னு சொல்லிட் டேளே! சி.ஐ.டிக்காரா ரெண்டு பேரும் அவ னோட பேச்சுக் கொடுத்திருந்தா என்ன கதி ஆகியிருக்கும்?" - அமராவதி.

"நன்னா ஆப்டுண்டிருப்பேன்..." என்று சிரித்தார் ராஜாராமன்.

அப்போது அங்கு வந்து தானும் அவர் களுக்கு எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்த பாமா, "என்ன சதி நடக்கிறது நம்மாத்துல? அந்தப் பிள்ளையாண்டான் எங்கே?" என் றாள். "சி.ஐ.டிக்காரா எதுக்கு வந்தா?"

"இத பாரு, பாமா. இது உனக்குத் துளிக் கூட சம்பந்தமே இல்லாத சமாசாரம். அத னால நீ என்ன பண்றே? எந்தக் கேள்வியும் கேக்காம கம்னு இருக்கே."

"ஆத்துப் பொம்மனாட்டிக்குத் தெரியாம எதையும் ஒளிக்கக்கூடாதுன்னா. இப்ப எதை யுமே நான் கவனிக்கல்லேன்னு வச்சுக் குங்கோ. நாளைக்கே எவனாவது சி.ஐ.டி. வந்து நரேந்திரநாத் பானர்ஜியைப் பத்தி எங் கிட்ட கேட்டா, 'ஓ. அந்த பெங்காலிப் பையன்தானே? தெரியுமே! எங்காத்துக் கெல்லாம் வந்திருக்கானே!' அப்படின்னு நான் பாட்டுக்கு விஷயம் புரியாம உளறிக் கொட்டிக் கிளறி மூடினேன்னா எப்படி இருக்கும்."

அங்கே இறுக்கமான மவுனம் விளைந் தது. மூவரும் 'இவன் சொல்லுவது சரி தானே?" என்ற கேள்வியைப் பார்வையால் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார் கள்.

"இத பாரு, பாமா. உனக்கு வீண் கவலை கள்ளாம் வேண்டாம்னுதான் உங்கிட் டேருந்து இதையெல்லாம் மறைச்சோமே ஒழிய, மத்தப்படி உனக்குத் தெரியப்படா துன்னு இல்லேடி."

"எதையெல்லாம் மறைச்சேங்கிறதை இன்னும் நீங்க சொல்லவே இல்லியே?"

"தீவிரவாதிகள் வாழற இண்டியா ஹவுஸ்ல நம்ம அருணும் இருக்கிறதால அவ னுக்குக் கொஞ்சம் இடைஞ்சல். நீ வீணாக் கவலைப்படப் போறியேன்னுதான்..."

"கடல் கடந்து அனுப்பாதீங்கோன்னு தலைதலையா அடிச்சண்டேன். கேட் டேளா? கரிச்சுக் கொட்டிண்டே, அவ

அருள்வாக்கு

யாரோ ப்ரபு லக்ஷப்ராம்மண போஜனம் செய்யப் போகிறார். அதற்காக மலை மலையாக சாப்பாட்டு வகைகள் கொட்டிக் கிடக்கிறது. ஆனாலும் உனக்கு வேண்டியது ஒரு இலைச் சாப்பாடுதானே? உனக்கு ப்ரபுவைத் தெரியாது. ஆனால் அவருக்கு வேண்டப்பட்ட ஒருவரைத் தெரியும். இவரிடம் கேட்டுக் கொண்டால் இவரே காரியரில் போட்டு எடுத்துக் கொண்டு வந்து நீ இருக்கிற இடத்திலேயே கொடுத்து விடுவார். அப்புறம் ப்ரபுவிடம் போய் நீ எதற்கு நிற்க வேண்டும்? சாப்பாடு அவருடையதாகவே இருக்கட்டும். அதற் காக, அவரைப் போய் நீ தொந்தரவு பண்ண வேண்டியதில்லை. அவர் அதை எதிர்பார்க் கவும் இல்லை. 'உன்னிடம் வருகிறவர்கள்

யாரானாலும் கொடுத்து விட்டுப் போ' என்று அந்த வேண்டப்பட்ட நபருக்கு அவரே தாராளமாக உரிமை கொடுத்திருக்கிறார். அவரும் (அந்த நபரும்) ப்ரபுவின் சாப்பாட்டைத்தான் தாம் போடுகிறோமே தவிர, தாமாகவே போடுவதாக பாத்யதை கொண்டாடிக் கொள்வதில்லை. ஈச்வரன் தான் ஞானத்தை அநுக்ரஹிக்கும் சக்தியை குருவுக்குக் கொடுத்திருக்கிறான். அவரும் தாமே ஞானம் அளிப்பதாகக் கொஞ்சம் கூட உரிமை பாராட்டுவதில்லை. ஆனாலும் ஈச்வரனே இப்படி ப்ரியப்பட்டு மற்றவர்களுக்கு ஞானம் வழங்கும்படியான சக்தியை இவருக்கு, குரு என்கிறவருக்கு, வழங்கியிருக்கிறானென்றால், தங்களைக் கடைத்தேற்றுவதான பரம லக்ஷ்யத்தை நிறைவேற்றி விடும் இந்த குருவையே சிஷ்யர்கள் ஸகலமுமாக நினைத்து அவரிடமே அநன்ய



பக்தி செலுத்துவதும் அவனுக்கு உவப்பாகத் தானே இருக்க வேண்டும்!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

னோட நாட்டுக்கு எதுக்கு அனுப்பிப் பிள்ளைகளைப் படிக்க வைக்கணும்?"

"நல்ல கேள்வி" என்று சிரித்தார் ராஜாராமன்.

"சிரிக்க வேண்டான்னா. அருண் படிச்சது போறும். கௌம்பி வந்துடச் சொல்லுங்கோ. நீங்க சம்பாதிச்சு வெச்சிருக்கிறது மூணு நாலு தலைமுறைக்குக் காணும். உங்க கிட்டயே ஜூனியரா வெச்சுண்டேன்னா கொஞ்ச நாளுக்குள்ளயே உங்க மாதிரி ஓகோன்னு வந்துடுவான். லண்டனும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்."

பாமா அழத் தொடங்கினாள்.

"சரி, பாமா. அழாதே. கூடிய சீக்கிரம் எப்படியாவது அவனைத் திரும்பி வரச் சொல்லி சேதியனுப்பிச்சுடலாம். கண்ணைத் தொடச்சுக்கோ."

பாமா கண்களைத் துடைத்துக் கொண்டே தாங்க முடியாத துயரம் முகத்தில் நிழலாய்த் தெரிய எழுந்து சென்றாள்.

''8 துப்பாக்கி, 3 கத்தி, 2 தொப்பி, 4 பூட்டுச் சாவின்னு லிஸ்ட் போட்டு வச்சிருக்கீங்களே என்ன சார் இதெல்லாம்?''

''நேத்து எங்க ஸ்டேஷன்ல காணாம போன பொருட்களோட லிஸ்ட்!''

— 'கச்சி' ஆர்.சி. மதிராஜ்



அன்றிரவு தூக்கம் வராமல் ராஜாராமன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். கூடத்துக் கெடியாரம் பன்னிரண்டு தடவை அடித்து ஓய்ந்ததும் அவர் படுத்துக் கொண்டிருந்த அவரது அறைச் சன்னலுக்கு வெளியே சன்னமான காலடியோசை கேட்டது. அது தெருவைப் பாராமல், பக்கவாட்டில், இடப்புறத்தில், தோட்டத்தைப் பார்த்த சன்னல்.

அமாவாசையாதலால் நல்ல இருட்டு. தலைமாட்டில் இருந்த டார்ச் லைட்டை ஏற்றலாமா என்று கணம் போல் நினைத்த அவர், தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். பக்கவாட்டில் திரும்பிப் படுத்தவாறு கண்களை மட்டும் கூர்மையாக்கிக் கொண்டு அசையாமல் இருந்தார்.

சன்னல் வழியே அந்த இருட்டிலும் ஒரு கை உள்ளே வந்தது தெரிந்தது. பக்கத்தில் திருடுகிறாப்போல் எந்தப் பொருளும் இல்லாததால் அவர் அப்படியே படுத்திருந்தார். சில நொடிகளுள் சொத்தென்று ஏதோ ஒரு பொருள் அவரது அறையினுள் கட்டிலருகே வந்து விழுந்தது. கையும் அகன்றது. யாரோ திரும்பிப் போகும் காலடியோசை கேட்டது. ராஜாராமன் படபடக்கும் நெஞ்சுடன் கட்டிலிலிருந்து இறங்கிச் சன்னல் பக்கம் சென்று வெளியே பார்த்தார். எந்த உருவமும் தென்படவில்லை. சிறிது நேரம் இருட்டைக் கூர்ந்து பார்த்தபடி நின்ற பின்னர் தம் கட்டிலுக்குத் திரும்பிக் குனிந்தார்.

(தொடரும்)

கொத்துக்

திராட்சை என்றதுமே ஹைதராபாத் தான் நினைவுக்கு வரும். கூடவே அங்குள்ள ஒருவரின் திராட்சைத் தோட்டமும் சிலரது நினைவில் வரும்! ஆனால், அதைவிட அற்புதமான திராட்சை வகைகளைக் கோயம்புத்தூர் அருகிலுள்ள காளம்பாளையம், மாதம்பட்டி போன்ற ஊர்களிலேயே விளைவிக்கிறார்கள்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தப் பகுதிகளிலுள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் திராட்சை பயிரிடப்படுகிறது. இவர்கள் வழக்கமாகப் பயிரிடுவது பன்னீர் திராட்சை வகை. இதற்குக் கேரளாவில் ஏக கிராக்கி என்பதால் அனைத்தும் அங்கேயே அனுப்பப்படுகிறது.


இப்போது நிலைமை மாறி வருகிறது. வழக்கமாகப் பயிரிடும் பன்னீர் திராட்சை வகையிலிருந்து சிறிது சிறிதாக மாறுபட்டு புதிய புதிய விதைகளில்லாத திராட்சை வகைகளைப் பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட 'கோவை மாவட்ட திராட்சை உற்பத்தியாளர் சங்கம்' தன்னிடமுள்ள 120 உறுப்பினர்களுக்கும் புதிய


• திராட்சைத் தோட்டம்...



ராத்தாய்



வகைகளைப் பயிரிடும் முறைகளை அச்சிட்டுத் தந்து உதவுகிறது. உற்பத்தியாகும் திராட்சையை விற்பனை செய்யும் பொறுப்பையும் சங்கமே ஏற்றுக் கொள்கிறது.



வேறெங்கையும் விட இந்தப் பகுதிதான் பன்னீர்த் திராட்சைப் பயிருக்கு உகந்தது என்றாலும் இப்போது புதிய ரகங்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் என்ன?

"காரணம், புதிய விதைகளில்லாத வகைகள் அதிக விலையைப் பெற்றுத் தருகின்றன; பன்னீர்த் திராட்சையை விடவும் தரமான வகைகள். ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் இவற்றில் அதிகம்; உலர் திராட்சைக்கு ஏற்றவை; பன்னீர் திராட்சை ஏழெட்டு ஆண்டுகளுக்குத்தான் விளைச்சல் தரும் என்கிற நிலையில், இவை, இருபதாண்டுகள் வரை விளைச்சல் தரக் கூடிய வாய்ப்பிருக்கிறது!" என்கிறார் சங்கத்தின் தலைவர் வேலுமயில்சாமி.

திராட்சை வகைகளுக்கான பயிரிடும் முறைகளைச் சங்கம் எங்கிருந்து பெறுகிறது? "நாங்கள் அவ்வப்போது மகாராஷ்டிரா போன்ற வெளிமாநிலங்களுக்குச் சென்று, அங்குள்ள திராட்சை உற்பத்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகிறோம்; அவர்களுடைய தோட்டங்களைப் பார்வையிடுகிறோம். அதனால் புதுப் புது வகைகளையும், வழிமுறைகளையும் நாங்கள் சுலபமாக அறிந்து கொள்ள முடிகிறது. இப்போது திராட்சைத் தோட்டங்களிலும், சொட்டு நீர்ப் பாசனத்தை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறோம்!" என்கிறார் வேலுமயில்சாமி.

• கனியாத பன்னீர்த் திராட்சை

தற்சமயம் பன்னீர்த் திராட்சையைப் பயிரிட்டிருக்கும் குமார வடிவேல், ஏன் இன்னும் புதிய வகைகளுக்குப் போகவில்லை? "போகக் கூடாது என்பதில்லை. இருக்கிற பயிரின் அறுவடைக் காலம் முடிந்த பிறகுதானே போக முடியும்!" என்கிறார்.

"சாதாரணமாக பன்னீர்த் திராட்சையின் மூலம் ஏக்கருக்கு ஆண்டொன்றுக்கு 20,000 ரூபாய் லாபம் கிடைத்தால்,



• வேலுமயில்சாமி



• குமார வடிவேல்

புதிய விதைகளில்லாத வகைகளில் 45,000 ரூபாய் வரை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால், நாங்கள் இப்போது புதிய வகைகளை அறிமுகப்படுத்திப் பார்ப்பது சோதனை முறையில்தான். அது வெற்றிகரமான விளைச்சலைத் தரும் போதுதான் பலரும் பயிரிட ஆரம்பிப்பார்கள்!" என்கிறார் வேலுமயில்சாமி.


வெற்றிகரமான விளைச்சல் என்பது என்ன? ஒரு திராட்சைக் குலையின் எடை சராசரியாக அரைக் கிலோ இருக்க வேண்டும். அதே போல், ஆண்டுக்கு ஓர் ஏக்கரில் இருபதாயிரம் ரூபாய்க்கும் குறைவாக லாபம் கிடைக்க ஆரம்பித்தால், உடனடியாக மாற்றுப் பயிர் செய்து விட வேண்டும். இல்லையெனில் கட்டுபடியாகாது.

சாதாரணமாக ஓர் ஏக்கரில் திராட்சை பயிரிட வேண்டுமானால் எவ்வளவு செலவாகும்? "கல்தூண்களை நட்டுப் பந்தல் போடுவது போன்ற வேலைகளையும் சேர்த்துச் சுமார் 94,000 ரூபாய் வரை செலவாகும். இதில் 75,000 ரூபாய் வரை வங்கியில் கடனாகப் பெற முடியும். பயிரிட்ட ஒன்றரை ஆண்டுகளிலேயே போட்ட முதலீட்டைச் சம்பாதித்து விட முடியும் என்பதால் வங்கிக் கடனையும் சுலபமாக அடைத்து விடலாம்!" என்கிறார் வேலுமயில்சாமி. "அப்புறம் வருஷா வருஷம் கொத்துக் கொத்தாய் லாபம்தான்!"

"ஆனாலும் எல்லா இடங்களிலும் திராட்சையைப் பயிரிட்டு லாபம் பெற்று விட முடியாது. அதற்கு ஏற்ற செம்மண் நிலம் வேண்டும்; உப்புச் சுவையில்லாத தண்ணீர் வசதி வேண்டும்; தட்ப வெப்ப நிலையும் உகந்ததாக இருக்க வேண்டும். இந்த மூன்றில் ஒன்று இல்லாவிட்டாலும் திராட்சையில் லாபம் சம்பாதிக்க முடியாது என்பதை விவசாயிகள் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியம்!" என்கிறார் அவர்.

— பிரின்ஸ்

வண்ணப்படங்கள் : யோகா



வேதபுரத்து வியாபாரிகள்

'வேதபுரத்து வீதி ஓரங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு குப்பைத் தொட்டிகள். ஒன்று, ஏழை எளியவர்க்கு; மற்றொன்று விலங்குகளுக்கு. எச்சில் இலைகளுக்காக முந்தைய ஆட்சிகளில் மனிதனுக்கும் நாய்க்குமிடையே நிகழ்ந்த போராட்டம், இனி இல்லை. இவ் வரலாறு காணாத அதிசயத்தை நடத்திக் காட்டியவர் நம் அரும்பெரும் தலைவர்!

(வேதபுரத்துத் திட்டக் கமிஷன் அறிக்கை - பக். 35)

வேதபுர மொழியிலும், அவள் நாட்டு மொழியிலும் வெளிவருகின்ற பத்திரிகைகளை அபூர்வா படிப்பதுண்டே தவிர, அவள் இதுவரை பத்திரிகைக்காரர்கள் யாரையும் சந்தித்தது கிடையாது.

முதல் தடவையாக அன்றுதான் சந்திக்கப் போகிறாள்.

பத்திரிகை நிருபர் கூட்டம். நஞ்சுண்டன் ஏற்பாடு செய்திருந்தான்.

அவளுக்குச் சிறிது அச்சமாக இருந்தது. அவளுக்குத் தன்னுடைய நாட்டுப் பத்திரிகைகளைப் பற்றி நன்றாகத் தெரியும். எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்கத் தயங்க மாட்டார்கள் அங்கே.

இங்கு வேதபுரத்தில் தலைவரின் நன்மதிப்பைப் பெற, பத்திரிகைகளுக்குள்ளே பலத்த போட்டி. 'துப்பறியும் பத்திரிகை தர்மம்' என்பதன் பேரில், தனிமனித, தனி இனத் தாக்குதல்கள் தொடர்ந்து பத்திரிகைகளில் நடந்து வந்தன. தலைவர் எல்லாவற்றையும் ரகசியமாக ரசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றுதான் அவளுக்குத் தோன்றியது. தொண்டர்களுக்கிடையே ஒற்றுமையும், நட்புறவும் ஏற்பட்டு விடக் கூடாது. தனி மனித சர்வாதிகாரத்துக்கு இது மிகவும் ஆபத்தான விஷயம்.

ஃபோன் ஒலித்தது. அவன் எடுத்தான்.

"நஞ்சுண்டன். நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். என்ன கேள்வி, என்ன பதில்ங்கிறதெல்லாம் உங்களுக்குத் தெரியும். நான் கொடுத்தனுப்பிய ஃபைலை மறுபடியும் பாத்துக்கங்க... கொஞ்சம் திறந்திருந்தாக் கூட போதும், உள்ளே புகுந்துக்கப் பாப்பாங்க பத்திரிகைக்காரங்க. ஏற்கெனவே பல பேருக்கு உங்களைக் கண்டு பொறாமை... ஜாக்கிரதை..." என்றான் நஞ்சுண்டன்.

"எதிர்பாராத கேள்விகள் வந்தா...?" என்றாள் அபூர்வா.

"வரலாம்... 'இன்டிபென்டட் ஜர்னலிஸ்ட்' இல்லாமெ இல்லே. அவங்க ரொம்பக் கொஞ்சம் பேர். பெரும்பாலும், அவங்க வர்றது கிடையாது... அப்படி வந்தாங்கன்னா, 'அட்ஜெஸ்ட்' பண்ணிக்கங்க... நீங்க 'ஸ்மார்ட்'னு எனக்குத் தெரியும். குட் லக்..."

அவன் ஃபோனைக் கீழே வைத்து விட்டான்.

அதிர்ஷ்டம் நிறையத் தேவை என்று அவளுக்குத் தெரியும். இதுவரை அதிர்ஷ்டக் காரியாகத்தான் அவள் இருந்து வந்திருக்கிறாள். நஞ்சுண்டனைப் பார்த்தது ஓர் அதிர்ஷ்டம். இருவருக்குமிடையே அலைவரிசை ஒத்துப் போனது இன்னொரு அதிர்ஷ்டம்.

வனிதாவுக்கு நஞ்சுண்டனைப் பற்றி எப்படித் தெரியும்? அவள் இந்தக் கேள்விக்குப் பதில் கூறாமல், சாமர்த்தியமாகச் சமாளிக்கிறாள் என்பது அபூர்வாவுக்குத் தெரிந்தது.

தலைவருக்குத் தன்னைப் பற்றித் தெரி

இந்திரா பார்த்தசாரதி



யும்; ஆனால் அவளால் தலைவரைப் பார்க்க முடியவில்லை.

பார்க்க முடியுமா?

சட்டசபைக்கு அவன் தேர்ந்தெடுக்கப் பட்டால் கூட, அவளுக்குத் தலைவரைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுமென்பது நிச்சயமில்லை.


சட்டசபையில் ஒரு ராட்சச டெலி விஷன் திரை உண்டு. தலைவர் உருவம் தெரியும். அவர் பேச விரும்பினால், எப்பொழுதாவது அவர் குரல் கேட்கும்.

அவை நடைபெறும் நாட்களில், அவைத் தலைவர் நாட்டின் தலைவரைப் பற்றிய வழிபாட்டு ஸ்தோத்திரங்களை அவருடைய கம்பீரமான குரலில் சொல்லி முடித்த பிறகு தான், அவை நிகழ்ச்சிகள் தொடங்கும்.

வனிதா, அப்பொழுது சொல்லிக் கொண்டே வந்தாள். "இன்னும் அரை மணி தான் இருக்குது... புறப்பட வேண்டாமா? 'ட்ரெஸ்' பண்ணிக்குங்க..."

" 'ட்ரெஸ்ஸா'? ஏன் இந்த 'ட்ரெஸ்' போதாதா? 'ஸிம்பிளா ட்ரெஸ்' பண்ணிக்கிட்டிருக்காங்கிறதும் ஒரு தகுதிதானே...?"

"எங்க நாட்டைப் பத்தி இன்னுமா நீங்க தெரிஞ்சுக்கலே? கவர்ச்சிதான் எங்க தாரக மந்திரம்... இல்லாட்டா, யாரும் சீண்ட மாட்டாங்க.. டீ.வி.காரங்க வேற வரப் போறாங்க.. நீங்க இயல்பாகவே நல்ல அழகு... 'ட்ரெஸ்' செய்துக்கிட்டா படுகவர்ச்சியா இருக்கும். ஏதாவது ஒரு சினிமாலே நடிச்சிருந்தீங்கன்னா அதுக்கே பாதி ஓட்டு கிடைச்சிருக்கும்.. அதுதான் இல்லே, டீ.வி.யிலேயாவது



"ஏம்ப்பா பிச்சை எடுத்துப் பிழைக்கிறேயே! உனக்கு வெட்கமாயில்லையா?"
"இதுக்கெல்லாம் வெட்கப்பட்டா பணக்காரனாக முடியுங்களா?"
— அரிசி ஸ்ரீராம்

ஒரு 'சினிமா ஸ்டார்' மாதிரி வர வேண்டாமா?"

"இது ஒரு பத்திரிகை நிருபர் கூட்டந்தானே?"

"இதை எத்தனை பேர் டீ.வி. யிலே பாக்கப் போறாங்க தெரியுமா? லட்சக்கணக்கான ஜனங்க... நீங்க வாயைத் திறக்க வேணாம், முகத்துக்கும் 'மேக்-அப்'புக்குமே அத்தனை வோட்டும் ஹூம்.. ட்ரெஸ் செய்துக்குங்க..."

வனிதாவை ஏற இறங்கப் பார்த்தான். அபூர்வா உடை மாற்றிக் கொண்டு, அவன் அழகை, குறிப்பாக உணர்த்துமளவுக்குச் சிறிது 'மேக்-அப்' போட்டுக் கொண்டு வந்தாள்.

"என் கண்ணே படும் போலிருக்குது. சரி சீக்கிரம் வாங்க... இன்னும் அஞ்சு நிமிஷந்தான் இருக்குது," என்று சொல்லிக் கொண்டே விரைந்தாள் வனிதா.

பத்திரிகை நிருபர் கூட்டம் நகரத்துக்கு மத்தியிலிருந்த ஒரு 'ஹால்'ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டடம்.

சுற்றிலும் புகைப்படக் காமிராக்கள், டீ.வி. காமிராக்கள் 'ஹால்' மிகப் பிரகாசமாக இருந்தது. மேடையின் பின்னணியில் நாட்டுத் தலைவரின் ஒளிமயமான தோற்றம்.

மேடையில் இரண்டு நாற்காலிகள்.

"எனக்கு மேடையிலே இடமில்லே போலிருக்குது, நான் கீழே உக்காந்துக்கிறேன்," என்றாள் வனிதா.

"என்னோட வா, பேசாமெ" என்று கண்டிப்பான குரலில் சொன்னாள் அபூர்வா.

அவள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்ததும், அருகிலிருந்த நாற்காலியில் வனிதாவை உட்காரும்படி சைகை செய்தாள்.

அப்பொழுது ஒருவர் அவளருகில் வந்து, அவள் காதில், "இன்னொரு நாற்காலி, 'ப்ரெஸ் கில்ட்' தலைவருக்கு" என்றார்.

"அப்படியானால் இன்னொரு நாற்காலி கொண்டுவாங்க," என்றாள் அபூர்வா அவர் பக்கம் திரும்பாமலே.

அவர் சுற்று முற்றும் பார்த்தார்.

வனிதா உட்கார்ந்து விட்டாள்.

"நாற்காலியிலே உட்கார்ந்துட்டே, விடாதே. உங்க - மன்னிக்கவும் - நம்ம நாட்டு அரசியல் தர்மத்தைக் காப்பாத்து," என்றாள் அபூர்வா வனிதாவின் காதில்.

வனிதா புன்னகை செய்தாள்.

இன்னொரு நாற்காலி வந்தது. 'ப்ரெஸ் கில்ட்' தலைவர் உட்கார்ந்தார்.

அவருக்கு அறுபது வயதிருக்கும். அவருடைய நாற்காலி இப்படி அடிக்கடி பறி போய் விடுகின்றது என்பதைத் தெரிவிப்பது போன்ற வேதனை அவர் முகத்தில் தெரிந்தது.

அவர் அபூர்வாவைச் சுருக்கமாக அறிமுகம் செய்து வைத்தார்.

அபூர்வா எழுந்து கைகளைக் கூப்பினாள். கைத்தட்டல்.

அவள் உட்கார்ந்து 'மைக்'கில் சொன்னாள். "நான் என் தாய், தந்தையர் செய்த தவறுக்காகப் பரிகாரம் தேடி, வேதபுரம் நாடி வந்தேன். தவறு, இத் தாய்த்திருநாட்டை விட்டு நீங்கி அற்ப சுகத்துக்காக அயல்நாடு சென்றது. இங்கு வந்த பிறகுதான், என் முன்னோர் வாழ்ந்த இம் மண்ணின் மணம் என்னை ஈர்த்தது. நாற்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வேதபுரத்துத் தொன்மை மகளிர்க்கும் எனக்குமுள்ள நெருக்கத்தை இன்று என்னால் உணர முடிகிறது. இதைச் சாத்தியமாக்கியது, நம் இதய தெய்வம், நம் நாட்டின் தங்கத் தலைவர். அவர் கருணைக் கண்ணோட்டத்தினால் நான் குடி உரிமை பெற்றேன்."

"தலைவரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" கூட்டத்தில் ஒரு குரல். பதிவு செய்யப்பட்ட குரல். யாருடையது என்று தெரியவில்லை. எதிர்பாராத கேள்வி.

"பார்த்திருக்கிறேன். பார்க்கிறேன்."

"பார்க்கிறீர்களா?" இது இயல்பான குரல். கேட்டவர் வியப்புடன் எழுந்து நின்றார்.

"நீங்கள் பார்க்கவில்லையா?" என்றாள் அபூர்வா.

"எங்கே?"

"உங்கள் இதயத்தில். இதய தெய்வம் புறக் கண்ணுக்குத் தெரியுமா? அகக் கண்ணால் பார்க்க வேண்டும். தெரியாவிட்டால், இரண்டு சாத்தியப்பாடுகள். ஒன்று, உங்களுக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை, இரண்டு, இதயமில்லை."

சிரிப்பு, கைத்தட்டல்.

"உங்களுக்கு மிகச் சுலபமாகக் குடி உரிமையும், தேர்தலில் நிற்கும் வாய்ப்பும் கிடைத்திருக்கின்றன. எங்கள் நாட்டு வரலாற்றைப் பார்க்கும் போது...''

"மன்னிக்கவும், குறுக்கிடுவதற்கு. தலைவர் கண்ணோட்டம் கிடைப்பது மிகவும் ஒரு சுலபமான விஷயம் என்கிறீர்களா?''

"இல்லை, இல்லை... தலைவர் கண்ணோட்டத்தைப் பற்றி நான் எதுவும் சொல்லவேயில்லை.''

"ஏன் சொல்லவில்லை? தலைவரின் கருணைக் கண்ணோட்டத்தினால் குடி உரிமை பெற்றதாக நான் சொன்னேன். நீங்கள் அதைச் 'சுலபம்' என்கிறீர்கள்.''

"துரோகி, வாயை மூடு...'' என்ற ஒரு கூக்குரல் எழுந்தது. ஏதோ கூற வந்தவர், சுற்றுமுற்றும் பார்த்து விட்டு அச்சத்துடன் உட்கார்ந்து விட்டார்.

"சரி... அடுத்த கேள்வி'' என்றான் அபூர்வா.


"எங்கள் மொழியை உங்களால் எப்படி இவ்வளவு சிறப்பாகப் பேச முடிகிறது?''

"இது என் மொழி. என் பாட்டன் மொழி. முப்பாட்டன் மொழி. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி. மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பது யார்? பிறந்த கன்றுக்குத் தாயின் முலைக் காம்பை நாடச் சொல்லிக் கொடுப்பது யார்? வேதபுரத்தில் என் காலடி பட்டதுமே, ஒரு நினைவு மின்னல் என் மூளையில் ஒளிர்ந்தது. அது என் நாக்குக்கு விளக்கேற்றி வைத்தது. விளைவு, என் வாயில் புரண்ட வேதபுரத்து நாத மொழி. என் பாட்டன் மொழி. முப்பாட்டன் மொழி. உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி...''

கைத்தட்டல்.

"நம் அரும்பெரும் தலைவர், ஏழை பங்காளர், கருணையின் உறைவிடம், எவ்வளவோ முயன்றும், மாற்றானின் சதியினால் ஏற்பட்ட வறுமை இன்னும் ஒழிந்தபாடில்லை. இது குறித்து, உங்களுக்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?''

"என் திட்டமென்று சொல்வதற்கில்லை; நம் அரும்பெரும் தலைவரின் திட்டந்தான். விரைவில் இதனை அறிவிப்பாரென்று அறிகிறேன். இதன்படி, முதல் நாள் ஓர் ஏழைக்கு ஒரு தலைவாழை உணவு, இரண்டாம் நாள், நாலு ஏழைகளுக்கு நூறு தலைவாழை. மூன்றாம் நாள், இருபத்தேழு. நான்காம் நாள் இருநூற்றியம்பத்தாறு. ஆண்டு முடிவில், முன்னூற்றி அறுபத்தைந்தை முன்னூற்றி அறுபத்தைந்து தடவை பெருக்கிக் கொள்ளுங்கள். அத்தனை தலை வாழை உணவு!''



"எப்படி இந்த வட்டாரத்திலே இந்த ஓட்டல்ல கூட்டம் ரொம்பி வழியுது?''
"இங்கே மாவாட்டற இடத்திலே ஸ்டார் டீ.வி, ஜெயின் டீ.வி வசதி உண்டாம்!''
— ஜெ. சாரதா

"அத்தனை மக்கள் நம் நாட்டில் இருக்கின்றார்களா?''

"இல்லாவிட்டால் என்ன, உலகத்துக்கே சோறு போடும் காமதேனு நம் நாட்டுத் தலைவர்... அள்ள அள்ளக் குறையாது... வின்ள வின்ள வாடாது...''

"வேதபுரத்தில் காணும் வறுமையைப் போல் நீங்கள் பிறந்த நாட்டில் உண்டா?''

"பசிப் பிரச்னை இல்லாத நாடுகளே இல்லை. பசியில் பலவகை உண்டு. அறிவுப் பசி, ஆன்மீகப் பசி, வயிற்றுப் பசி... வேதபுரத்தில் நாம் பட்டினி கிடந்தாலும் தலைவருக்கு விழா எடுத்து வழிபட்டு வருகிறோம். இது நம் ஆன்மீக நிறைவைக் காட்டுகிறது. நம் நாட்டுப்பற்றைக் காட்டுகிறது. மொழிப் பற்றைக் காட்டுகிறது. நாடு, மொழி, இறைவன் எல்லாவற்றின் மொத்த குறியீடாக நம் தலைவர் இருக்கிறார்.''

'ப்ரெஸ் கில்ட்' தலைவர் திடீரென்று கூறினார் : "கூட்டம் முடிந்து விட்டது என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.''

அன்றிரவு வீட்டுக்குத் திரும்பியதும், வனிதா அபூர்வாவிடம் சொன்னாள். "நான் நீங்க இப்படிப் பேசுவீங்கன்னு எதிர்பார்க்கலே...''

"மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பது யார்...?''

"போதும்... இது வீடு. இதையெல்லாம் மேடையிலே வச்சுக்கங்க...'' என்றாள் வனிதா.

அப்பொழுது டெலிஃபோன் ஒலித்தது. நஞ்சுண்டனாக இருக்குமென்று அபூர்வா எடுத்தான்.

ஆணா பெண்ணா என்று நிர்ணயிக்கப் பட முடியாத பால் பகா குரலொன்று பேசியது. "நாடகம் நன்றாக இருந்தது. விரைவில் சந்திப்போம்.''

(தொடரும்)



''சின்னப் பையனா இருந்தவன் வளர்ந்து பெரியவனாயிடறான். இந்த ஸீனை வித்தியாசமா எப்படி எடுக்கலாம்?''

''பையனைக் காட்டிட்டு 'காப்பி 25 **NP**'ங்கற ஓட்டல் போர்டைக் காட்டறோம். அடுத்த ஷாட்டில 'காப்பி ரூ. 3.50'ன்னு காட்டறோம்!


காப்பியடிக்காத

''ஐம்பெருங்காப்பியங்கள் யாவை'ன்னு கேட்டா, உங்க பையன் என்ன சொல்றான் தெரியுமா?''

''என்னங்க சொல்றான்?''

''பில்டர் காப்பி, கூர்க் காப்பி, சன் ரைஸ் காப்பி, ப்ரு காப்பி, நெஸ்கபே காப்பி ஆகியவைன்னு சொல்றான்!''





''வேணும்னா பையன் டிரஸ்ஸுக்கு ஐயாயிரத்துக்குப் பதில் பத்தாயிரமா கொடுத்துடறோம். ஆனா கல்யாணத்துக்கு வர்றவங்க எல்லோருக்கும் காப்பி கொடுன்னு மட்டும் சொல்லாதீங்க. டீதான் தர முடியும்!''

"ஏன் சார், நாலு நாள் முன்னாடி நான் பார்த்து வச்சிட்டுப் போன புடைவையை இன்னிக்கு வாங்க வந்தா மூணு மடங்கு விலை சொல் றீங்களே, நியாயமா?"

"என்ன பண்றது மேடம், அது காப்பிக் கொட்டை கலர் புடைவை யாச்சே!"



ஜோக்ஸ்!



"காலைல எழுந்ததும் உங் கம்மா பக்திசிரத்தையா எல் லோருக்கும் ஒவ்வொரு ஸ்பூன் பூஜா தீர்த்தம் தர்றாங்க போலி ருக்கே?"

"அது தீர்த்தமில்லைப்பா, காப்பி!"

—ரகோத்தமன்

"பொண்ணு வீட்டுக்காரங்க ரொம்ப வசதியானவங்க!"

"எப்படிச் சொல்றீங்க தரகரே?"

"தினம் ரெண்டு வேளை காப்பி சாப்பிடறாங்களாம்!"



"சினிமாவுக்கு மட்டும் ஒரு மாசத்துக்கு முன்னாலேயே ரிசர்வ் பண்ணத் தெரியும். மாசம் பதினஞ்சாம் தேதிக்கு முன்னாடியே கரெண்ட் பில் கட்ட முடியாது. போய் க்யூவிலே நின்னு வாம்மா. உங்க அவசரத்துக்கு நாங்க வேலை பார்க்க முடியாது."

கவுண்ட்டருக்குள் இருந்தவர் வழக்கம் போல சிடுசிடுத்துக் கொண்டிருந்தார். நான் எதேச்சையாய்த் திரும்பிப் பார்த்தேன்.

அட! வசந்தி!

செமத்தியாய்த் திட்டு வாங்கிக் கொண்டு, 'க்யூ'வில் நிற்கும் போது, "இங்க வாங்க" என்றேன். நாய்க் குட்டி போல வந்தாள்.

"என்ன மேடம் ப்ராப்ளம்?"

"ஃப்யூஸ் பிடுங்கிட்டாங்க. பதினைஞ்சு தேதிக்கு முன்னேயே கட்ட நெனைச்சேன். மறந்துட்டேன். வேலைக்குப் போகணும்."

"வேலை எங்கே? சென்ட்ரல் ஸ்டேஷன் தானே?"

அப்போதுதான் உற்றுப் பார்த்தாள். அவள் முகத்தில் ஆச்சர்யம்! லேசாய் சந்தேகம்.

"ஆமா. உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"மை போட்டுப் பார்த்தேன். உங்க பேர் வசந்தி. மூணு அண்ணன். ரெண்டு தங்கை."

"மை காட்! புட்டுப் புட்டு வைக்கிறீங்க."

"என்னை ஞாபகமில்லையா? என் பெயர் வித்யேஷ்வர்."

விழித்தாள். ஒரு முறைதான் சந்தித்தோம். நிச்சயம் மறந்திருப்பாள். "எனக்கு அடையாளம் தெரியலை."

"உட்காருங்க."

வசந்தி மாறவில்லை. அதே கரிய முகம். அதே உயரம். லேசாய் இளைத்த மாதிரியிருந்தாள். திருமணம் முடித்ததற்கு நிறைய சாட்சிகள் இருந்தன. பணத்தைக் கட்டி, ரசீதைக் கொடுத்தேன்.

"தாங்க்ஸ். நீங்க இல்லேன்னா டயத்துக்கு வேலைக்குப் போயிருக்க முடியாது."

"இதையெல்லாம் நீங்கதான் செய்யணுமா? உங்க ஹஸ்பெண்ட்?"

"இரண்டு பேரும் வேலைக்குப் போறோம். எல்லாத்தையும் பங்கு போட்டுக் கறதுதான் நியாயம்."



"இன்னும் என்னை ஞாபகப்படுத்திக்க முடியலையா?"

"சாரி."

"பரவாயில்லை. அப்புறமா மீட் பண்ணிப் பேசலாம்" என்றதும், அவள் கிளம்பினாள். அவள் கண்ணில் சந்தேகம் தங்கியிருந்தது. அவள் சென்றதும் என் வேலையில் ஆழ்ந்தேன்.

அடுத்த நாள்.

"சார், உங்களைப் பார்க்க வசந்தின்னு ஒரு அம்மா வந்திருக்காங்க."

"அனுப்பு."

வசந்தி உள்ளே வந்தாள்.

"வாங்க. உட்காருங்க."

உட்கார்ந்தாள். "என்ன? கண்டுபிடிச்சிங்களா?"

"இல்லை சார். நிஜமாவே நீங்க மை போட்டுத்தான் பார்த்திருக்கணும்."

சிரித்தேன். "என்ன விஷயம்?"

"எங்க பிளாட்லே, எலெக்ட்ரிக் மீட்டர் சரியா வேலை செய்யலை. தெரிஞ்சவரா இருக்கீங்க. அதான் வந்தேன்."

"லெட்டர் எழுதிக் கொடுங்க. நானே நேரா வர்றேன்."

அவள் முகம் விநாடியில் மாறி, சுதாரித்து... "நான் அந்நியரோடு பேசறதை என் கணவர் விரும்ப மாட்டார்."

"சென்ட்ரல் ஸ்டேஷன் கவுண்ட்டர்லே ஆயிரக்கணக்கான அந்நியர்கள் வருவாங்



சொர்க்கத்திலே முடிவானது

பார்கவி

களே?"

பதில் சொல்லாமல் சிரித்தான்.

"பயப்படாதீங்க. உங்க கூட மட்டும் பேச மாட்டேன்."

சமயம் பார்த்துக் குளிர்பானம் வந்தது. மவுனமாய் அவளே ஒரு பாட்டிலை எடுத்துக் கொண்டாள்.

"இன்னும் என்னை யாருன்னு கண்டு பிடிக்க முடியலை, இல்லை?"

"நீங்கதான் பிகு பண்ணாமல் சொல்லுங்களேன்."

"உங்களாலே கண்டுபிடிக்க முடியும். டைரி எழுதுவது உண்டா?"

"இல்லை."

"மூணு வருஷத்துக்கு முன்னாடி, செப்டெம்பர் ரெண்டாம் தேதி நாம சந்திச்சோம்."

"ஏதாவது கல்யாணத்திலே மீட் பண்ணியிருக்கலாம். உங்க தங்கை யாராவது எத்திராஜ்லே படிச்சாங்களா?"

"நான் ஒரே மகன். தவப்புதல்வன்."

"தூரத்து உறவு. சரிதானே?"

"இப்ப நாம குழப்பிக்க வேண்டாம். சமயம் வரும் போது சொல்றேன்."

அவன் கிளம்பினான். அவன் எழுதிக்

கொடுத்த கடிதத்தை 'சீல்' அடிக்க அனுப்பினேன்.

மறுதினமே, சரியாய் மதியம் இரண்டு மணிக்கு ஹைதராபாத்திலிருந்து தந்தி. 'சித்தப்பா மரணம். உடனே புறப்படு!', என்றிருந்தது.

எல்லா டிராவல் ஏஜென்சிகளும் கை விரித்தார்கள். சார்மினார் எக்ஸ்பிரசில் நாலு பக்கத்துக்கு வெயிட்டிங் லிஸ்ட். சென்ட்ரலில் வசந்தியை நாடினேன்.

“அட! நீங்களா? என்ன வேண்டும்?”

“இதுவரை நான் உதவி செய்தேன். இப்ப எனக்கு உங்க உதவி வேண்டும்.”

என் கையிலிருந்த நூறு ரூபாய்த் தாள்களைப் பார்த்து விட்டு, “சில்லறையா?” என்றான்.

“ஹைதராபாத் போறதுக்கு சார்மினார்லே எப்படியாவது ஏற்பாடு செய்யணும்.”

“எத்தனை டிக்கெட்?”

“ரெண்டுதான். என் வொய்ஃபும் வரா.”

“அஞ்சரைக்கு வாங்க. டிரை பண்றேன்.”

“இருங்க. காப்பி சாப்பிட்டுப் போகலாம். எங்களுக்காக அலையறதுக்கு தெம்பு வேண்டாமா?”

இருவரும் செல்ஃப் சர்வீஸ் காண்டீனில் நுழைந்தோம். காப்பியை ருசித்தபடி, “எப்படியிருக்கு கல்யாண லைஃப்?” என்றேன்.

“பெட்டர். நூறு சதவீதம் திருப்தியா யாருக்கும் வாழ்க்கை அமையறதில்லை.”

“எனக்கு அமைஞ்சிருக்கு மேடம். எனக்கும் என் மனைவிக்கும் நல்ல அண்டர்ஸ்டாண்டிங் இருக்கு. மேனகா மனைவியா அமையறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும்.”

“என் கணவரோட சில கொள்கைகள் எனக்குப் பிடிக்காது. மற்றபடி பரவாயில்லை.”

“இதைக் கேட்கறதுக்கு சந்தோஷமா இருக்கு. திருமணம் நடக்கறது பெரிசில்லை. திருப்தியான வாழ்க்கைதான் முக்கியம்.”

“சரி, கிளம்பலாமா?”

“உங்க தங்கைகளுக்குக் கல்யாணம் முடிஞ்சாச்சா?”

“இல்லை. கடைசித் தங்கைக்கு அக்டோபர்லே கல்யாணம். இப்ப சொல்லக் கூடாதா? நீங்க யாருன்னு.”

“இப்ப ராகு காலம். வேண்டாம். அப்புறம் சொல்றேன்.”

சரியாய் அஞ்சரை மணிக்கு வந்தோம். ஒரே ஒரு பெட்டி. மற்றபடி எதுவும் லக்கேஜ் இல்லை. வசந்தியைக் காணவில்லை. ஆறு பத்துக்கு சார்மினார் போய் விடும். மேனகா பொறுமையிழந்தாள்.

“யாரது வசந்தி? எப்படித் தெரியும் அவளை? எந்த அடிப்படையிலே நானூறு ரூபா கொடுத்தீங்க? உங்க சித்தப்பா சாவுக்கு என்னை எதுக்குக் கூப்பிடறீங்க? நீங்க மட்டும் போக வேண்டியதுதானே?”

“மேனகா! இது ரெயில்வே ஸ்டேஷன். நம்பர் முப்பத்திரெண்டு, பிள்ளையார் கோயில் தெரு இல்லை. கொஞ்சம் அடக்கமா நடந்துக்க.”

“நான் என்ன இதை ஹோட்டல்னா சொன்னேன்? இப்ப டிக்கெட் வராது. ரிசர்வ் பண்ணாம ஏறி ராத்திரி பூரா அவஸ்தை. நீங்க போங்க. நான் அம்மா வீட்டுக்கு...”

சட்டென்று நிறுத்தினாள். இந்தக் கூத்தை வசந்தி கைகளைக் கட்டிக் கொண்டு ரசித்துக் கொண்டிருந்தாள்.

“இந்தாங்க டிக்கெட். இதிலே மீதிச் சில்லறை இருக்கு” என்றாள்.

மேனகா தலையைத் திருப்பிக் கொண்டாள்.

“தாங்க்ஸ்” என்றேன். மேனகாவை அறிமுகப்படுத்தவில்லை.

உணவே மருந்து! புத்தக உலகில் ஒரு விடிவெள்ளி மருந்தே உணவு!

பச்சைக் காய், கனிகள் உண்போம்! பற்பல நோய்களையும் போக்குவோம்!

இயற்கை உணவே நோய் தீர்க்கும் மருந்து

விலை ரூ.100

ஆசிரியர்: இயற்கை உணவு நிபுணர்: மூ.ஆ.அப்பன்

(இவர் இயற்கை உணவுச் சித்தர், சிவகாசம் நல வாழ்வு ஆசிரம ஸ்தாபகர், தேங்காய் பழ சுவாமிகளின் பிரதம சீடரும் உடன்பிறந்த தம்பியும் ஆவார்)

மருந்து மாத்திரைகள் இல்லாமல், அறுவை சிகிச்சைகள் இல்லாமல் இயற்கை உணவுகளை அதாவது பச்சைக் காய், கனிகளை மட்டுமே உண்டு எப்படிப்பட்ட நோயாயினும், எவ்வளவு நாட்பட்ட நோயாயினும், மொத்தத்தில் டாக்டர்களால் கைவிடப்பட்ட தீராத நோய் எதுவாயினும் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு இந்தப் புத்தகம் ஓர் ஆதாரம்.

முடி உதிர்தல், தீராத தலைவலி, குடிப்பழக்கம், நாட்பட்ட மலச்சிக்கல், மூலம், அல்சர், அலர்ஜி, சைனஸ், ஈசனோபீலியா, அப்பெண்டிக்ஸ் போன்ற சிறிய நோய்களிலிருந்தும், தொழுநோய், இரத்த அழுத்தம், ஆஸ்துமா, நீரிழிவு, ஆர்த்தரைடிக் ரொமாட்டிஸம், வலிப்பு, காசம், புற்று, எய்ட்ஸ், இதய நோய், சிறுநீரக நோய், ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, மலடு, மனநோய், வெண்குஷ்டம் போன்ற பெரிய நோய்களிலிருந்தும் விடுதலை பெறலாம் என்றால் நீங்கள் நம்பத்தான் மாட்டீர்கள். ஆனால் அவ்வளவும் உண்மை, உண்மை, உண்மையேதான். அனைத்துக்கும் ஆதாரம் உண்டு! உண்டு! அனுபவக் கடிதங்கள் மூலமாக உண்மைகளை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

ஆசிரியரே ஒரு தொழு நோயாளியாக இருந்து பிணி நீங்கப் பெற்றவர் என்பதே இயற்கை உணவுக் கொள்கைக்கு ஒரு சிறந்த அத்தாட்சியாக அமைகிறது. அவர் தாம் நலமடைந்த விவரத்தையும் மேற்கொண்ட உணவு முறையையும் புத்தகத்தில் விளக்குகிறார்

எந்தெந்த நோய்க்கு எந்தெந்தக் காய், கனிகள் உண்ண வேண்டுமென்று இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும். எனவே உங்களுக்கு நீங்களே மருத்துவராகி உங்கள் நோய் எதுவாயினும் போக்கிக் கொள்ளலாம் என்பது உறுதி.

எனிமா, ஈரத் துணிப்பட்டி, ஈரமண் துணிப்பட்டி, இடுப்புக் குளியல், முதுகுத் தண்டுக்குளியல், மண் குளியல், வாழை இலைக் குளியல், சூரிய ஒளிக் குளியல், நீராவிக் குளியல், காந்த சிகிச்சை, கோதுமைப் புல்சாறு மருத்துவம், அருகம்புல் சாறு மருத்துவம், மூலிகைத் தூள் சாறு மருத்துவம், சிறுநீர் மருத்துவம் ஆகிய மருத்துவ வகைகள் யாவும் விளக்கப்பட்டுள்ளன. இயற்கை நலவாழ்வு வாழ விரும்புவோருக்கும் தீராத பிணிகளுக்கு ஆட்பட்டு திக்கு திசை தெரியாமல் அலைபாயும் பிணியாளர்க்கும் இந்நூல் வழிகாட்டும் ஒளிவிளக்காய் அமையும் என்பது திண்ணம்.

புத்தகத்தைப் படிக்கப் படிக்க உண்மைகளை நீங்களே உணருவீர்கள். இன்னும் என்ன யோசனை? எனக்குத்தான் நோய் ஒன்றும் இல்லாதபோது இந்தப் புத்தகத்தை ஏன் வாங்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? பிணியாளர்களுக்கு மட்டுமல்ல சார்! உங்களுக்காகவும்தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இயற்கை உணவுகளை - பச்சைக் காய், கனிகளை உண்டு உங்களது உங்கள் குடும்பத்தாரது ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளக் கூடாதா? நோய் வருமுன் காக்கக் கூடாதா? உங்கள் ஆரோக்கியம் கருதியும்தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இப்போது நீங்கள் சமாதானம் அடைந்திருப்பீர்கள் அல்லவா! பிறகு என்ன? ஒரு புத்தகத்தை வாங்குங்கள். இயற்கை உணவை உண்ண ஆரம்பியுங்கள். ஆரோக்கியம் பெறுங்கள். நூறாண்டு வாழ்ந்து காட்டுங்கள்.

தபாலில் பெற விரும்புவோர் ரூ.100 மட்டும் M.O. மூலம் அனுப்பவும். வி.பி.பி. செலவு தனி. எல்லா புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,
2, முத்துக்கிருஷ்ணன் தெரு,
த.பெ.எண். 1040,
பாண்டி பஜார், தி.நகர், சென்னை-17
தொலைபேசி: 8281902.

ADVT

கிடைக்குமிடங்கள் : ● **கோவை** : விஜயா பதிப்பகம் 20 ராஜவீதி, ராதாமணி ஸ்டோர்ஸ், 137 ராஜவீதி, வசந்தம் புக் ஹவுஸ், 53 கிராஸ்கட் ரோடு ● **சேலம்** : வள்ளலார் புத்தக நிலையம், 266-A செர்ரி ரோடு, சந்திரா புக் ஷாப், 110-A முதல் அக்ரகாரம் ● **மதுரை** : சர்வோதய இலக்கிய பண்ணை 32/1 மேல வெளி வீதி, மதர்லேண்டு புக் சென்டர், 11, மேல வெளி வீதி, செந்தில் புக் சென்டர், காலேஜ் ஹவுஸ் ● **திருநெல்வேலி** : எம். ஆறுமுகம் பிள்ளை சன்ஸ், ஹைரோடு ● **தஞ்சாவூர்** : முரசு புத்தக நிலையம், கோல்டன் கபே, அண்ணா சாலை ● **திருச்சி** : இளங்கோ புத்தக நிலையம், 32, மேல புலிவார்ட் ரோடு, நியூ பாலஸ் புத்தக நிலையம் 31, மேல புலிவார்ட் ரோடு.

"நான் வரேன்."

"காப்பி?" என்றதும், எனக்கு மட்டும் கேட்கும்படி, "நீங்க பேசிட்டிருந்ததே காப்பி குடிச்ச மாதிரி சூடா இருக்கு. நூறு சதவீதம் திருப்தியில்லை?"

நான் வெட்கமாய்த் தலைகுனிந்தேன். நிஜத்தை எப்படிச் சொல்வது? அடங்காப் பிடாரியாய் வந்து அமைந்திருக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? நான் வேதனையோடு சார்மினாரில் ஏறினேன்.

ஊரிலிருந்து திரும்பி, காரியமெல்லாம் முடிந்து, வழக்கம் போல தூசி படிந்த மின்சார அலுவலகம். வசந்தியின் கடிதம் கண்ணில் பட்டது. பழைய மீட்டரை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். பெல் அடித்ததும் கதவு திறந்து, "யெஸ்" என்றான் அந்த இளைஞன்.

"நான் வித்யேஷ்வர். இ.பி.யிலிருந்து வரேன். மீட்டர் சரியில்லைன்னு, இங்கே யாரோ வசந்தின்னு..."

அவன் திரும்பி, "ஏய்! வசந்தி! இங்க வா" என்றான்.

ஓடி வந்தாள். என்னைப் பார்த்தாள். 'படு பாவி' என்றன கண்கள்.

"நீ என்ன அரிச்சந்திரன் பொண்ணா? ஊர்லே நேர்மைன்னு நெனைப்பா? உன்னை யாரு லெட்டர் எழுதிக் கொடுக்கச் சொன்னது? வர வர சம்பாதிக்கற திமிர் ஏறிட்டிருக்கு."

"என்ன இது? அவர் முன்னாடியே ஏதேதோ பேசறீங்க?"

"என்ன? அவமானமா? உன்னை அடிக்கணும்டி" என்று குலைத்து விட்டு, "சாரி பிரதர். மீட்டர்லே மிஸ்டேக் இல்லை."

"பரவாயில்லே. நான் செக் பண்ணிக்கறேன்."

"நான் வேண்டாமின்னு சொல்றேன். இதுக்கு ஏதாவது பணம் வேண்டுமா?"

"மிஸ்டர்! கொஞ்சம் நாகரிகமாப் பேசுங்க. எனக்கு ரைட்ஸ் இருக்கு. இந்த மீட்டர்லே ரீடிங் கம்மியா வருது. உங்க வொய்ஃப் நேர்மையாக் கொடுத்த லெட்டரை நீங்க அநியாயமா மறைக்கறீங்க."

"பாத்தியாடி. கண்டவங்க, கண்டபடி பேசறானுங்க. இதற்குள் பக்கத்து பிளாட்டிலிருந்து வயதானவர் வந்தார். "சார், இங்கே வாங்க" என்று தனியாய்க் கூப்பிட்டார்.

"அவன் சுத்த பயித்தியக்காரன். பாவம் அந்தப் பொண்ணு, பலி ஆடா அவஸ்தைப் படுது. ரொம்பவும் பேசினா, அதைப் போட்டு அடிப்பான்" என்றார்.

"தாங்க்யூ சார். நல்ல சமயத்திலே சாருஹாசன் மாதிரி புகுந்து, என் கோபத்தை தடுத்தீங்க. நான் வரேன்."

அன்றே வசந்தி என்னை என் அலுவலகத்தில் சந்தித்தாள். இருவரும் நீண்ட நேரம் எதுவும் பேச முடியாமல் அமர்ந்திருந்தோம்.

"சாரி சார்."

"பரவாயில்லை. உங்க கணவரோட கொள்கைகள் சிலது பிடிக்காதுன்னு சொன்னீங்க. உங்க கணவருக்கு உங்களையே பிடிக்கலை போலிருக்கே?"

"அதைப் பற்றிப் பேச வேண்டாம். அப்புறம் அந்த ரகசியம். நீங்க எனக்கு என்ன வேண்டுமின்னு கண்டுபிடிச்சிட்டேன்."

"எப்படி?"

"மிஸ்டர் வித்யேஷ்வர், உங்களைச் சந்தித்த முதல் நாளே, நீங்கதான் மூணு வருஷத்துக்கு முன்னே செப்டெம்பர் ரெண்டாம் தேதி என்னைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளைன்னு தெரியும்."

"ஆமா! நீங்க கறுப்புன்னு, என் வீட்லே எதிர்ப்பு. அதனாலே ஜாதகம் சரியில்லைன்னு சொல்லிட்டாங்க."

"உங்க குணம் நல்லாயில்லைன்னு எங் கண்ணன் சொன்னாரு."

"எப்படியோ, நாம திசை மாறிட்டோம்."


"சரி சார். நான் கிளம்பறேன். இனி நாம சந்திச்சுப் பேசறது நல்லதில்லை. அதைச் சொல்லத்தான் வந்தேன்."

நான் மவுனமாகத் தலைகுனிந்தேன். வசந்தி எழுந்து கொண்டாள்.

"வசந்தி" என்றதும் திரும்பிப் பார்த்தாள்.

"எனக்கு ஒரு பையன் இருக்கான். அவன் பெரிசாகிக் கல்யாணம் செய்யும் போது அவன் விருப்பப்படியேதான் செய்வேன். ஜாதகம், கலர், பர்சனாலிட்டி எல்லாம் ரெண்டாம்பட்சம்."


அவள் சிரித்தாள். கனமான சிரிப்பு. என் மனசிலும்தான்.



"பஸ்ஸிலே என்னங்க சண்டை?"

"ஒருத்தர் பேப்பர் படிச்சிக்கிட்டு இருந்தார். இன்னொருத்தர் அதை எட்டிப் பார்த்து படிச்சார்... இவர் படிச்சி முடிக்கறதுக்குள்ளே... அவர் பக்கத்தைத் திருப்பிட்டாராம்!"

– கார்த்திக் ராஜா



லம்பட்டி போன்ற இடங்களில் இருக்கும் பெண் குழந்தைகளைக் கொல்லும் கொடுமையான வழக்கத்தை மையமாகக் கொண்டு, ராஜ்கிரண் 'எல்லாமே என் ராசா தான்' படத்திற்குக் கதை அமைத்திருந்தார். அந்தப் படம் ஆரம்பிக்கத் தாமதம் ஆனதில் ஒரு முக்கிய பிரச்னை உண்டாகி விட்டது. 'உசிலம்பட்டி பெண் குட்டி', 'கருத்தம்மா' போன்ற படங்களிலும் 'பெண் சிசுக் கொலை', 'தொட்டில் குழந்தை', போன்ற அம்சங்கள் இருப்பதாகச் செய்திகள் வரவே, ராஜ்கிரண் இப்போது தம்முடைய கதையை வேறு விதமாக மாற்றியிருக்கிறாராம்!

●● 'காஷ்மீரம்' - மலையாளப் படம். தெலுங்கு, இந்தி மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டு, தங்க மழை பொழிந்திருப்பதால் சுரேஷ் கோபியின் மார்க்கெட் நிலவரம் சூடு பிடித்திருக்கிறது. அவர் நடித்த எல்லா மலையாளப் படங்களும் உடனடியாக மொழி மாற்றப்படுகிறது... 'கமிஷனர்' படம் இன்னொரு சூடான பணியாரம். கமிஷனராகப் பதவி ஏற்கும் ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரி, கள்ள நோட்டு ஆசாமிகளாலும், அதற்கு உடந்தையான அரசியல்வாதிகளாலும் அலைக்கழிக்கப் படுவதை விறுவிறுப் பாகச் சொல்லியிருக்கிறாராம் இயக்குனர் ஷாஜி கைலாஷ். 'கமிஷனர்' - மலையாளத்தில் அனைத்துப் பகுதிகளிலும் சக்கைப் போடு போடுவதால், ஷாஜி கைலாஷுக்கும் நட்சத்திர டைரக்டர் அந்தஸ்து கிடைத்திருக்கிறது.

●● சரத்குமார் தம்முடைய மானேஜருக்காக நடித்துக் கொண்டிருக்கும் படத்திற்கு 'இதயம் பேசுகிறது' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. 'தாமரை' படத்தை இயக்கியுள்ள கே. ராஜலக்ஷ்மி தமது அடுத்த படத்திற்கு வைத்திருக்கும் பெயர் 'கல்கி.'

- ஹர்ஷராஜ்

ரஜினி: பாசமிகு சித்தப்பா!

●● "பொங்கல் புதுநாளில் பூக்கும் குறிஞ்சி மலர்" என்று பூஜை போடப் பட்டாலும் இது ஏற்கெனவே இந்தியில் பூத்துவிட்ட குறிஞ்சிமலர்தான். அமிதாப் பச்சன் நடித்த 'அக்னிபாத்' படத்தை, சத்யா மூவீஸ் கதை இலாகா ஒரு சில மாற்றங்களுடன் எழுத, ரஜினியின் இமேஜுக்குத் தகுந்தவாறு இயக்க இருக்கிறார் சுரேஷ்கிருஷ்ணா. தம்முடைய அண்ணன் (விஜயகுமார்) பிள்ளைகளுக்காக மெழுகுவர்த்தியாகத் தம்மை உருக்கிக் கொண்ட பாசமிகு சித்தப்பாவாக ரஜினி நடிக்கிறார்.

●● சேலம், உசி



• சுரேஷ் கோபி : சூடான மார்க்கெட்

● கே. அருணாசலம், தென்காசி.

? அலுவலகங்களில் மீண்டும் ஆறுநாள் வேலைத் திட்டம் கொண்டு வந்தால்?

! இப்போதை விடவும் அதிகமாக யாரும் வேலை செய்து விடப் போவதில்லை!

● வெ. சாந்தா, மன்னார்குடி.

? ரூ. 15 கோடிக்கு முதலமைச்சருக்கு விமானம் வாங்கப் போவது பற்றி தங்கள் கருத்து?

! இதுபோன்ற உற்பத்திக்கு உதவாத அரசுச் செலவினங்கள்தாம் இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கின்றன.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? ஆர்.வி.க்கு கல்கி வக்காலத்து வாங்குவதாகக் கலைஞர் கூறுவது குறித்து?

! ஏன், அவருக்காகவும்தான் வக்காலத்து வாங்கி எழுதியிருக்கிறோம், அது கண்ணில் படவில்லையாமா?



• விமானம் வாங்கினார்

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? சுதந்திர தின விழா கொடியேற்றத்தின் போது சசிகலா மேடைக்கு வந்ததும் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினார்களாமே?

! கோட்டை கொடி மரத்தில் தேசியக் கொடி பறக்கலாம்; ஆனால் தமிழ்நாடு முழுவதும் யார் கொடி கட்டிப் பறக்கிறார்கள் என்பது அமைச்சர்களுக்குத் தெரியாதா!

● ஜி. நீலா, மன்னார்குடி.

? பல்கலைக் கழகத்துக்குத் தமது பெயர் சூட்டப்படுவதை முதல்வர் ஜெயலலிதா கண்டித்திருப்பது குறித்து?

! கண்துடைப்பான ஒரு கண்டிப்பு.

• கால்வாய் கடந்தார்



● ஆர். சங்கரநாராயணன், குணசீலம்.

? ''சபாஷ்!'' என்று நீங்கள் இன்று யாரைப் பாராட்டுவீர்கள்?

! வேறு யாரை? குட்டிப் பையன் குற்றாலீசுவரனைத்தான். சில வாரங்களுக்கு முன் இப் பகுதியில் நாம் வெளியிட்ட எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைத்து விட்டானே! சிங்கக்குட்டி!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? சுதந்திரம் வாங்கி 47 ஆண்டுகளில் நாம் சாதித்தது என்ன?

! 47 நாள் லீவு கிடைத்திருக்கிறதே, போதாதா!

● என். முருகேஷ், பெருஞ்சேரி.

? 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் புரட்சித் தலைவி என சங்கே முழங்கு' என்று எம்.எல்.ஏ. ஆரோக்கியசாமி தமது லெட்டர் பேடில் அச்சடித்துள்ளாராமே?

! பாரதிதாசன் உயிரோடு இருந்தால் கூட ஆட்சேபிக்க முடியாது! ஏனென்றால் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களைப் பொறுத்தமட்டில் உண்மை அதுவாகத்தான் இருக்கிறது!

கட்சிக்காக முதல்வர் ஆறு கோடிக்குச் சொத்து வாங்குகிறாரே?

● எஸ். ராதாகிருஷ்ணன், கச்சனம்.

? தாங்கள் சமீபத்தில் ரசித்துப் படித்த புத்தகம்?

! சக்கரவர்த்தித் திருமகனைக் கல்கியில் தொடர்ந்து மறுமுறையும் படித்து முடித்துள்ள அன்பர்களுக்கு ஒரு செய்தி: ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை முழுமையாக, எளிதில் புரிந்து கொள்ள வசதியாக வெளியிட்டிருக்கிறார்கள். வடமொழி சுலோகம் இருக்கிறது. பதவுரையும் கருத்துரையும் தமிழில் இருக்கிறது. சிறிதளவு வடமொழி எழுத்துத் தெரிந்தால், மூலம், உரை இரண்டையும் ரசித்து மகிழலாம். ஆன்மீக மேம்பாடும் உணரலாம். ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம் எட்டுத் தொகுதிகளாக கோவை, ஆனைகட்டி ஆர்ஷ வித்யா ஆசிரமம் வெளியிட, டி.டி.கே. குரூப் நிறுவனங்கள் பொருளுதவி செய்துள்ளன. ராமனை தரிசிக்கவும், வால்மீகியை ரசிக்கவும், வடமொழியை நேசிக்கவும் அருமையான வாய்ப்பு. விலாசம்: டி.டி.கே. நிறுவனம், 6, கதீட்ரல் சாலை, சென்னை - 86.

● வெண்ணிலவன், விழுப்புரம்.

? ''இன்றைய தலைவர்களுக்கு முட்டாள்

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் : நா. சுப்பிரமணியம், 52, சிட்லபாக்கம் ரோடு, நேரு நகர், சென்னை - 44.

களை மேய்க்கத் தெரியுமே தவிர, புத்திசாலிகளைப் பயன் படுத்திக் கொள்ளத் தெரியாது" என்கிறாரே பண்ருட்டி யார்?

! அது பெருமளவு உண்மைதான். புத்திசாலிகளை மேய்க்க புத்திசாலித்தனம் வேண்டும். எனவே தங்களின் கீழ் தங்களை விட புத்திசாலிகள் இருந்து விடக் கூடாது என்ற எண்ணத் தோடேயே செயல்படுகிறார்கள்! ஆனால் தொழிலோ, நாடோ, வியாபாரமோ முன்னேற இந்த மனப்பான்மை உதவாது.



• கொடிகட்டிப் பறக்கிறார்

● எஸ். குமார், காரைக்குடி.

? கர்நாடக சங்கீதத்துக்கும் சினிமா சங்கீதத்துக்கும் என்ன வித்தியாசம்?

! திருப்பதி லட்டுக்கும் கல்யாண லட்டுக்கும் என்ன வித்தியாசமோ, அதுதான்!

● நா. சுப்பிரமணியம், சென்னை - 44. ❑

? சன் டீவி. வார்த்தை விளையாட்டு நிகழ்ச்சியிலே தோற்றவர்களை கழுதை பொம்மை மேல் உட்கார வைத்து அனுப்பினார்கள். இப்படி தோற்றவர்களை அவமதிப்பது என்ன நியாயம்? (விசில் அடிக்கச் சொல்வது; குட்டிக்கரணம் போடச் சொல்வது...)

! ரொம்ப அநியாயம்தான்; பண்பாடற்ற செயல்தான். டெலிவிஷன் நடத்தும் மூளைச் சலவையானது இப்படி சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்கவும் மக்களைத் தயாராக்கி விடுகிறது என்பதே நாம் வரக்கூடிய முடிவு. மூளைச் சலவை செய்பவர்களோ வெற்றி மமதை தலைக்கேற, படிப்படியாகக் கொடூர சித்தம் கொண்டவர்களாகி விடுகிறார்கள். இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம், எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் என்றாகி விடுகிறது. சினிமா, டீவி, பத்திரிகைகள் இவற்றில் சுயகட்டுப்பாடு இல்லையென்றால் குட்டிச்சுவர்தான்.

● எஸ். சசிகுமார், சென்னை - 52.

? அண்ணாசாலையில் உள்ள தியேட்டரை முதல்வர், கட்சிக்காக ஆறு கோடியே பன்னிரண்டு லட்சம் ரூபாய்க்கு வாங்கியது பற்றி?

! சட்டபூர்வமாக எல்லாம் சரியாக இருக்கலாம். ஆனால் பணம் எப்படி வந்தது என்பதற்குக் கணக்குக் காட்ட முடியாத போது தர்மத்தைக் கொன்றவராகிறார்.

• கவனிக்க மாட்டார்



● நவவானதி, சென்னை.

? பத்திரிகைகளுக்குத் தணிக்கைக் குழு உண்டா?

! இல்லை. தணிக்கை என்று ஆரம்பித்தால் "பத்திரிகை சுதந்திரம் பறி போகிறது" எனறு கூச்சலிடுவதும் பூரண சுதந்திரம் என்றால் அதை பொறுப்பற்ற முறையில் துஷ்பிரயோகம் செய்வதும் தான் நமக்கு வாடிக்கையாகி விட்டதே! 'சினிமா பாடல்களையும் வசனங்களையும் முன்கூட்டியே காண்பித்து அனுமதி பெற்று விட்டால் பின்னால் படத் தணிக்கையின் போது படத் தயாரிப்பாளர்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும் இல்லாதிருக்கும்' என்ற உருப்படியான யோசனைக்குக் கூட பயங்கர எதிர்ப்பு இருக்கிறது, இங்கே!


● எல். முரளி, குறிஞ்சிப்பாடி.

? பாராளுமன்ற புறக்கணிப்பை எதிர்க்கட்சிகள் வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டனவே?

! புறக்கணிப்பால் எந்த லாபமும் இல்லை. சரியானபடி விவாதங்கள் நடக்காததால் மக்களுக்கு அரசின் குறைபாடுகள் தெரிய வராமல் போனது தான் மிச்சம். அரசின் நிலையில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.



• உண்மை பேசினார்



92. மங்களம்

ராமச்சந்திரனுடைய ஏவலின்படி விபீஷணனுக்கு லங்காபுரியில் ராஜ்யாபிஷேகம் உடனே விமரிசையாக நடத்தப்பட்டது. லங்கேசனாகப் பட்டம் சூட்டப்பட்டு, விபீஷணன் நகரத்துக்கு வெளியில் பாசறையிலிருந்த ராமனிடம் வந்து வணங்கினான்.

"அரசனுடைய உத்தரவு பெற்று லங்கைக்குள் சென்று சீதைக்குச் செய்தியைத் தெரிவிப்பாய்" என்று ராமன் ஹனுமானிடம் சொல்ல, அவனும் அவ்வாறே விபீஷணன் ஆணையைப் பெற்று அசோக வனம் சென்றான்.

ஹனுமான் சீதையைக் கண்டான். பிராட்டியின் ஆனந்தம் பேச்சுக்கு இடம் தரவில்லை.

"ஏன் அம்மணி பேசவில்லை?" என்றான் ஹனுமான்.

"பேச முடியவில்லை, என் அப்பனே! உனக்கு நான் என்ன செய்து நான் பட்ட கடனைத் தீர்ப்பேன்? உன் விவேகம், உன் வீரம், உன் மனோபலம், உன் பொறுமை, உன் வினயம் உலகத்தில் வேறு யாருக்கு உண்டு? உனக்குச் சமானம் இந்தப் பூவுலகில் ஒருவர் இல்லை" என்றாள். கண்களில் ஆனந்தவெள்ளம் பெருக இவ்வாறு சீதை சொன்னாள். அப்போது ஹனுமான் சிறை காத்த அரக்கிகளைப் பார்த்தான். அவர்களைக் கண்டதும் அவனுடைய பழைய கோபம் மறுபடியும் பொங்கிற்று.

சீதையைப் பார்த்து "உம்மை வேதனை செய்த இந்தப் பாபிகளை வதம் செய்வேன். உத்தரவு அளிப்பீராக!" என்றான் ஹனுமான்.

"வேண்டாம் அப்பனே! தவறு செய்யாதவர்கள் உலகத்தில் யாரே உளர்?" என்றாள் சீதை.

ந கஸ்சித் ந அபராத்யதி.

பிராட்டியின் இந்தச் சொற்களை வைஷ்ணவ பக்தர்கள் அமிருதமாக பாவிக்கிறார்கள். தேவியின் அருள் இருக்க பயம் என்பது கிடையாது. எந்தப் பாபியும் பிராட்டியின் பொன்னடியை அடைந்து உய்யப் பெறலாம் என்பது சாஸ்திரம்.

"அரசனுடைய உத்தரவை அவர்கள் நடத்தினார்கள். அவர்கள் பேரில் என்ன குற்றம்? அரசன் மாண்டான். இவர்களை இப்போது தண்டிப்பது நியாயமல்ல" என்றாள் சீதை.

"ராமனுக்கு என்ன செய்தி கொண்டு போக உத்தரவு?" என்று ஹனுமான் கேட்டான்.

"அவனைக் காண ஆசைப்படுகிறேன். அவ்வளவே!" என்றாள்.

ராமனிடம் ஹனுமான் திரும்பிச் சென்று சீதையைத் தரிசித்து வந்ததாகச்

சொன்னான். என்ன காரணமோ ராமனுடைய முகம் கறுத்தது. கண் கலங்கிற்று. பெரும் யோசனையில் ஆழ்ந்தான். கொஞ்ச நேரங்கழித்து, "விபீஷணா! சீதையை நீராட்டிச் சகல பூஷணங்களும் தரிக்கச் செய்து அழைத்து வருவீர்!" என்றான்.



செய்தியை அசோக வனத்துக்குக் கொண்டு போனதும் சீதை, "நான் இருக்கும் இந்த நிலையிலேயே போக விரும்புகிறேன்" என்றாள்.

"அப்படியல்ல தேவி! சக்கரவர்த்தித் திருமகன் உத்தரவுப்படி செய்ய வேண்டும்!" என்று விபீஷணன் சமாதானப் படுத்தினான்.

சகல பூஷணங்களும் தரித்துப் பல்லக்கில் சென்றாள் சீதை.

'சீதை வருகிறாள்' என்று தெரிந்ததும் ராமன் தன் தியானத்தினின்று விழித்தான். நடந்து போன நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் மனத்தில் சமுத்திர அலைகளைப் போல் மோதின. ரோஷம், துயரம், சந்தோஷம் எல்லாம் கலந்த நிலையில் இருந்தான்.

வானரப் படையின் அபார கூட்டத்துக்கு நடுவில் சீதையைப் பல்லக்கில் எடுத்து வரும்பொழுது வானரர்கள் தேவியைப் பார்க்க ஆசைப்பட்டார்கள். வானரத் தலைவர்கள் அவர்களைத் தள்ளி அப்புறப்படுத்தவும் பெரும் குழப்பம் உண்டாயிற்று.

"யாரையும் தடை செய்ய வேண்டாம். எனக்கு உதவிய இந்த வானரர்கள் என் ஆப்த நண்பர்கள் ஆவார்கள். என்னைச் சுற்றி



இவர்கள் இருப்பதே அவளுக்கு மகிழ்ச்சி தரும். யாரையும் விலகச் சொல்ல வேண்டாம்" என்றான் ராமன்.

ராமனுடைய மன நிலையானது பக்கத்திலிருந்த நண்பர்கள் யாருக்கும் விளங்கவில்லை. லக்ஷ்மணனுக்குங்கூட விளங்கவில்லை.

பல்லக்கிலிருந்து இறங்கித் தரையைப் பார்த்த வண்ணமாக சீதாதேவி ராமனை நோக்கி நடந்தாள். "ஆரிய புத்திரனே!" என்று ஒரே ஒரு சொல்லைச் சொல்லிவிட்டு விம்மி அழுதாள்.

"சத்துருவை வதம் செய்தேன். உன்னை மீட்டேன். என் க்ஷத்திரியக் கடமையைச் செய்து முடித்தேன். என் சபதம் முடிந்தது" என்றான் ராமன்.

இவ்வாறு பொருள் விளங்காத, கொஞ்சமும் எதிர்பாராத சொற்கள் வெளிவந்ததும் அல்லாமல், சக்கரவர்த்தித் திருமகனுடைய முகம் ஏனோ கறுத்தது. பிறகு இன்னும் கடுஞ்சொற்களைச் சொன்னான்.

"உனக்காக அல்ல இந்தக் கோர யுத்தத்தை நான் நடத்தியது. என் கடமையைத் தீர்க்கத்தான் செய்தேன். உன்னை அடைந்தது எனக்கு இப்போது மகிழ்ச்சி தரவில்லை. அபவாதம் என்கிற புகை உன்னை மூடி மறைக்கிறது. இப்போது என்ன செய்யப் பிரியப்படுகிறாய்? நீ என்னை விட்டுத் தனியாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய பந்துக்கள், நண்பர்கள் இவர்களில்



பெண்ணின் அப்பா : மாப்பிள்ளைக்கு வாக்காளர் அடையாள அட்டை இருக்குதா...?
தரகர் : ஓ... இருக்குதே... மூணு விதமான மேக்கப்புல வாங்கி வச்சிருக்கார், பார்க்கிறீங்களா...?
- சுரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

எவருடைய பாதுகாப்பிலாவது நீ இருக்கலாம். க்ஷத்திரியனான ஒருவன், அயலான் இல்லத்தில் வெகுகாலம் இருந்த தன் மனைவியை எப்படித் திரும்ப அழைத்துக் கொள்வான்? உன் யோசனை என்ன?" என்றான்.

சீதை ராமனை நோக்கினாள். அவள் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. "தகாத மொழிகளைப் பேசினீர். இதயத்தைப் பிளக்கும் சொற்களைக் காதால் கேட்டேன். பாமரர்கள் சொல்லக் கூடிய சொல் ஆரிய புத்திரனுடைய வாயினின்று வந்தது. அரக்கன் என்னைப் பலாத்காரமாகத் தூக்கி வந்தான். உம்முடைய ரோஷம் உம்முடைய விவேகத்தைக் கலைத்துவிட்டது. நாதனே! நான் எந்தக் குலத்தில் பிறந்தவள் என்பதை மறந்தீர். ஜனக ராஜன் என் தகப்பனார் ஆவார். அவரால் வளர்த்துப் பண்பட்டவள் நான். லக்ஷ்மணா, கட்டைகளைக் கொண்டு வருவாய். தீயை வளர்ப்பாய்!" என்றாள்.

அப்போது, ராமன் செய்து வந்ததையெல்லாம் பார்த்து மகா கோபம் பொங்கிப் பொறுக்க மாட்டாமலிருந்த லக்ஷ்மணன் சீதையின் உத்தரவைக் கேட்டதும் ராமன் முகத்தைப் பார்த்தான்.

ராமன் "வேண்டாம்" என்று சொல்லவுமில்லை. மனம் இளகினதாக யாதொரு சின்னமும் காணப்படவுமில்லை.

சீதை சொன்னபடியே லக்ஷ்மணன் தீ மூட்டிவிட்டான். பிராட்டியானவள் தரையைப் பார்த்த வண்ணமாகக் கணவனை வலம் செய்துவிட்டு, "தெய்வங்காள்! உங்களை வணங்குகிறேன்! மகரிஷி கணங்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். அக்கினியே! என் பரிசுத்தத்தை நீ அறிவாய். இதோ உனக்குள் பிரவேசிக்கிறேன்" என்று சொல்லிக் கொழுந்துவிட்டு எரியும் தீயில் குதித்து விழுந்தாள்.

தேவர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டார்கள். பிரமன் பேசினான்.

"நாராயண, ராவணனைச் சம்ஹாரம் செய்ய அவதரித்த சர்வேச்வரனே! இவள் உம்முடைய பிராட்டி லக்ஷ்மியன்றோ!" என்றான் பிரமன். எல்லோரும் திகைத்த வண்ணம் நின்றார்கள். அச்சமயம் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

சாக்ஷாத் அக்கினி தேவன் எரியும் நெருப்பிலிருந்து கிளம்பி சீதையை அப்படியே வஸ்திர பூஷணதாரியாக எடுத்து ராமனிடம் தந்தான்!

பிரமனைப் பார்த்து ராமன் சொன்னான் :

"நான் தசரதன் மகன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் யார்? எங்கிருந்து வந்தேன் என்பது உங்களுக்குத்தான் தெரியும். நீங்கள்தான் சொல்ல வேண்டும்."

இவ்வாறு ராமன் பிரமனுக்குச் சொல்லி விட்டு தேவியை அழைத்துக் கொண்டான்.

"சீதையே! உன் பழியற்ற புனித நிலை எனக்குத் தெரியாதா? இந்தப் பரீட்சை நான் செய்தது மக்களின் திருப்திக்காகவே, ஜனங்கள் சொல்லுவார்கள் அல்லவா - ராமன் 'காமத்தால் மதியிழந்தான், உலக வழக்கத்துக்கு மாறுபட்டு நடந்து கொண்டான்' - இவ்வாறு அவர்கள் எண்ணுவார்களே என்று இப்படி உன்னைச் சோதனை செய்தேன்" என்று சொல்லி ராமன் அவளை இரு கையும் நீட்டி அழைத்துக் கொண்டான்.

அப்போது தசரதனும் வந்து இறங்கி, சக்கரவர்த்தித் திருமகனைத் தன் மடியில் வைத்து ஆசீர்வதித்தான்.

"குழந்தாய்!" என்று தசரதன் சீதையை நோக்கி, "என் மகனை மன்னிப்பாய்! உலக தருமத்தைக் காப்பதற்காக அவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்வாய். உனக்கு மங்களம்!" என்றான்.

இந்திரனும் வரம் தந்தான். யுத்தத்தில் ராமனுக்காக மாண்டு பிரேதங்களாகக் கிடந்த வானரர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தார்கள்.

வனத்தில் ஆசிரமத்திலே தனியாக விட்டுப் போன தேவியை இழந்து துயரத்தில் மூழ்கி, பிறகு ராமன் தடையும் தடங்கலும் தாண்டி மகா பல பராக்கிரமம் பெற்ற அரக்கனாகிய திருடனை வதம்



"11 மணிக்கு ஆபீஸ் கிளம்பிட்டிருந்த நீங்க இப்பல்லாம் ஏன் 10 மணிக்கே கிளம்பிடறீங்க!"
"10 மணிக்கு ஆரம்பமாயிட்டிருந்த ஆபீஸ் இப்பல்லாம் 9 மணிக்கே ஆரம்பமாயிடுதே!"
- சீர்காழி வி. ரேவதி

செய்துவிட்டு மறுபடியும் அடைந்தான். சீதையும் நாதனை அடைந்து விட்டாள். இருவரும் விமானத்தில் அயோத்திக்குத் திரும்பிச் சென்றார்கள். கூட நண்பர்களாகிய வானர வீரர்களும் விபீஷணன் முதலியவர்களும் சென்றார்கள். ராவணனுடைய புஷ்பக விமானத்தில் மேலே வாயு மார்க்கமாகப் போய்க் கொண்டிருந்தபோது, சக்கரவர்த்தித் திருமகன் தானும் லக்ஷ்மணனும் நடந்த காட்டையும், என்றும் மறக்க முடியாத எல்லா இடங்களையும் சீதைக்குக் காட்டி விளக்கிக் கொண்டே சென்றான். "அதோ பார்! உன்னை நான் அடைவதற்காக நளன் கட்டித் தந்த சேது, அதோ பார்! கிஷ்கிந்தை! ஹனுமானையும் சுக்ரீவனையும் நான் நண்பர்களாக அடைந்த இடம் இதுவே!" என்றெல்லாம் சொல்லிக் காட்டிக் கொண்டே சென்றான்.

பரத்துவாஜ ஆசிரமத்தில் தங்கி அங்கிருந்து குகனுக்கும் பரதனுக்கும் முன்னதாகச் செய்தி அனுப்பினார்கள்.

அயோத்தி நகரம் ஆனந்த வெள்ளத்தில் தெப்பமாக மிதந்தது. பரதனைச் சேர்ந்து விட்டான் ராமன். கூனியும் கைகேசியும் இவனுக்காகப் பதவியை விரும்பினார்கள். விரும்பி ஏதேதோ செய்தார்கள். அவர்கள் கோரிய பயனைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய மகிழ்ச்சியையல்லவோ இப்போது அடைந்தான் பரதன், ராமனடியில் பணிந்து? எந்தக் கிரீடம் தரும், ராமன் பாதங்கள் அளிக்கும் மகிழ்ச்சியை? எந்த ராஜ்ய பதவி தரும் பரதன் அடைந்த பல்லாண்டுப் புகழை? 'பரிசுத்தத்தில் பரதாழ்வானுக்கு ஒப்பாகார் பெருமாள்; யோக்யதையில் பரதாழ்வானுக்கு ஒப்பாகார் பெருமாள்' இவ்வாறு அல்லவோ திவ்யப் பிரபந்தங்களில் ஸ்ரீராமனுக்கும் மேலே தைரியமாக பரதாழ்வானை வைத்துச் சொல்லப்படுகிறது!

ராமன் திரும்பி வரும் வரை பதினான்கு வருஷங்கள், அண்ணன் பாதுகைகளைச் சிம்மாசனத்தில் வைத்து ராஜ்யத்தைத் தொட்டுக் கொண்டு தவம் கிடந்தான் பரதன். இப்போது தந்தை தசரதன் முதலில் விரும்பிய வண்ணம் ராமன் ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்றதைக் கண்டு, இவ்வளவு நாள் தவம் கிடந்த பரதன், உள்ளம் பூரித்து மகிழ்ந்தான்.

ஆஞ்சனேயனைப் பற்றிச்சொல்ல வேண்டியதில்லை. ராமன் கையிலிருந்து பிராட்டி முத்து மாலையை வாங்கி ஹனுமான் கழுத்தில் போட்டாள். போடும் சமயம் தேவியின் அன்பு, முகத்தில் முறுவலாகப் பூத்தது! ஹனுமனுக்கு வேறு என்ன வேண்டும்?

வால்மீகியால் பாடப்பட்ட சக்கரவர்த்தித் திருமகன் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். கணக்குப் பார்க்காமல் எழுதிக் கொண்டு போனது எப்படியோ விஜயதசமியன்று' சரியாக முற்றுப் பெற்றது. படித்தோரும் கேட்டோரும் எல்லா பாபத்தினின்றும் கஷ்டத்தினின்றும் மீள்வார்களாக.

ஞான சாகரமான ஸ்ரீ சங்கரர் சொன்னார். தசரதன் திருமகனை நாம் துதித்து ஆராதித்து தியானித்து உள்ளத்தில் நிறுத்தி வைத்தோமானால் செய்த பாபங்களனைத்தும் அற்றுப் போகும். ராமாவதாரத்துக்குப் பிறகு மகா செளலப்ய மூர்த்தியாக மீண்டும் அவதரித்தான் பகவான். கோவிந்தனாக இடையர்களுடன் வாசம் செய்து வளர்ந்து பிறகு அர்ஜுனனுக்கு வார்பிடித்துக் கோல் எடுத்துத் தேர் ஓட்டினான். பார்த்தனுக்கு ஞானம் உபதேசித்து விட்டு முடிவில் பகவான் சொன்னான் : "நான் ஒருவனே புகலிடம் என்று அறிந்து ஐயம் தீர்ந்த உள்ளத்துடன் என்னை அடைவாய். எல்லா பாபங்களினின்றும் உன்னைத் தவிர்ப்பேன். இது சத்தியம் அன்பனே, கவலைப்படாதே!" கண்ணபிரான் செய்த இந்தச் சூளுரை நம் எல்லோருக்குமாகச் செய்த சூளுரையாகும். நம் அனைவருக்காக அர்ஜுனன் அந்த வாக்கை பகவானிடம் பெற்றான்.

மங்களம்.

• அக்டோபர் 30, 1955, கல்கி

பட்டம் சூட்டுங்கள்: போட்டி முடிவு

ஒவ்வொன்றும் ரூ. 25/- பரிசு பெறும் பட்டங்கள் :



1. "தொங்கல் திலகம்" எஸ்.டி.எஸ்.




2. "புன்னகை மன்னன்" நரசிம்மராவ்.




3. "கள்ளத் தோணி கலிங்கப்பட்டிச் சிங்கம்" வை.கோ.



4. "வசூல் சக்கரவர்த்தி" கண்ணப்பன்.



5. "பசுமைக் காவலர்" டாக்டர் ராமதாஸ்



6. "தாவல் தளபதி" காளிமுத்து.



7. "விளம்பர வித்தகி" ஜெயலலிதா.



8. "புஸ்வாணம்" சு. சுவாமி



9. "பின்னணித் திலகம்" மூப்பனார்



10. "சர்க்கரைத் தேவன்" கல்பனாத் ராய்

பரிசு பெறுபவர்கள் முறையே 1. பி. கார்த்திகேயன், மாதனூர்; 2. என். எஸ். முகம், சேங்காலிபுரம்; 3. ம. மாரிமுத்து, மதுரை -3; 4. பி. கண்ணன், புதுக்கோட்டை; 5. வி. எல். வெங்கடேஸ்வரன், கள்ளிக்கோட்டை; 6. உஷா கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 93; 7. பானுமதி, வாளாடி; 8. மீனா முருகேசன், மதுரை-12; 9. நர. சீனிவாசன், தஞ்சாவூர்-7; 10. எஸ். கோபாலகிருஷ்ணன், கோவை-38.

பரிசு ரூ. 250/-

அசத்தலான டயலாக்!

அழுக்க அழுக்க டீவியைக் குறைசொன்னது போதும். தூர்தர்ஷன், சன் டீவி, ஸ்டார் டீவி எதுவானாலும் சரி, நீங்கள் பார்த்த ஒரு நாடகத்தில் அசத்தலான ஒரு டயலாக் இடம்பெற்றதா? ''கொன்னுட்டான்!'' என்றோ ''சூப்பர்'' என்றோ வாய் விட்டுச் சொல்ல வைத்ததா? அந்த வசனத்தை அதன் 'சுருக்' பின்னணி, ஸீரியலின் பெயர் ஆகியவற்றுடன் எழுதி அனுப்புங்கள். ஆங்கிலம், ஹிந்தி வசனமெனில் தமிழாக்கி எழுதுங்கள். ஸாரி, சினிமாக்களை நிச்சயம் ஒதுக்கவும்.

உறைமீது ''அசத்தலான டயலாக்''; முடிவு தேதி : 10.9.94 ஆ.தீ.மு.! பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் டயலாக்குகளுக்கு ரூ. 250/- பகிர்ந்து அளிக்கப் பெறும்.

என் பெயர் :..

விலாசம் :..

வட்டமேஜை

◆ இப்போது வரும் தமிழ்ப் படங்கள், விமர்சனம் செய்கின்ற அளவுக்குத் தகுதி இல்லாதவை என்று ஹிந்தி பட விமர்சனத்திற்கு மாறிவிட்டீரோ! (1942 A Love Story பற்றித்தான் சொல்கிறேன்.)
விருத்தாசலம், ஆர். ரமேஷ்பாபு.

◆ 'ஆஸ்பத்திரியில் விஜயன்' செய்தி, மனத்தை நோகச் செய்தது. ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்துத் தெரிவித்த ஒருவருக்கு நாம் அளிக்கும் பரிசு மருத்துவமனைக் கட்டில்! ஆனால் நம்மை முறுக்கி ரத்தம் குடிக்கும் அரசியல் பிசாசுகளுக்கு அரியணைக் கட்டில். இட ஒதுக்கீட்டுப் பிரச்னையில் அரசியல் வாதிகளின் உப்புச் சப்பற்ற அறிக்கைகளையே வெளியிட்டு வரும் பத்திரிகைகள் மத்தியில், கல்கியின் மாறுபட்ட மனித நேயம் என் கண்களைக் கலங்க வைத்தது. விஜயன் பூரண குணமடைய கல்கி வாசகர்கள் சார்பில் பிரார்த்தனை செய்தேன்.
மருங்கூர், பாலு. கிருஷ்ணமூர்த்தி.

◆ பாரதியின் நினைவு நாளான செப்டம்பர் 11 ம் தேதி இதழில் கவிசிவம் அவர்களின் எழுச்சித் தொடர் வெளி வருவது மிகப் பொருத்தமே.
மதுரை - 11, திருமதி சுகந்தி நாராயண்.

◆ உண்மைக்கும் நேர்மைக்கும் பத்திரிகை தர்மத்திற்கும் உடன்பட்டுச் செயலாற்றி வரும் பத்திரிகைகளில் கல்கியும் ஒன்று. இது யாவரும் அறிந்ததே. எந்த ஒரு தனி நபரின் மீதும் களங்கம் கற்பித்துக் கட்டுரை எழுத வேண்டுவதன் நோக்கம் கல்கிக்கு என்றுமே நேர்ந்ததில்லை. அப்படியிருக்க, வக்கீலின் மறுப்பு வேடிக்கையாக இருக்கிறது. இருப்பினும், மறுப்பை வெளியிட்ட கல்கி மனத்தில் செம்மாந்து நிற்கிறது. சபாஷ்.
திருச்சி - 8, தி.மா. தமிழழகன்.

◆ தொழில் அதிபர்களிடம் மக்களின் நலத்திற்கான வழிமுறைகளைத்தான் காண வேண்டுமே ஒழிய, தங்கள் பைகளை நிரப்புவதற்கான வழிமுறைகளை அல்ல என்பதைத் தென்ன தெளிவாகத் தலையங்கத்தின் மூலம் நம் அரசியல் வாதிகளுக்குக் கூறிய அறிவுரைகள் அருமை.
கும்பகோணம், அ. கௌசிகன்.

◆ 'மொய்லி' போன்ற முதல்வர்களின் நடவடிக்கைகள், மக்களுக்கு மட்டுமல்ல, வருங்கால சந்ததியினருக்கும், எதிர்கால வரலாற்றுக்கும் இழைக்கப்படும் அநீதியாகும்!
மதுரை - 16, வி. பரமசிவம்.

◆ 'இன்னுமா இந்தப்படலம்!' கவர் ஸ்டோரி அருமை. அட்டைப்படமும் அசத்தல். பெரியவர்கள் மாறித்தான் ஆகணும். இல்லை என்றால் மாற்றிவிடுவார்கள், இன்றைய இளைஞர்கள்.
தூத்துக்குடி,
சிவராமசுப்பிரமணியன்.

◆ பெண் பார்க்க வருகிறோம் என ஒரு பட்டாளமே வருகை தந்து, ரகளை செய்துவிட்டுப் போகும் அநியாயத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். நீங்கள் பேட்டி கண்ட அனைவருமே பெண் பார்க்கும் படலத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது, நிஜத்தின் பிரதிபலிப்பு.
மொரட்டுப்பாளையம்,
சுதா. இராஜேஸ்வரன்.

வரலாற்றுக்கு இழைக்கும் அநீதி!

◆ போலீஸ்காரர் என்றாலே லஞ்ச, ஊழல்களுக்குத் துணை செல்பவர் என்ற எண்ணத்தை மாற்றியமைக்கும் விதத்தில் லஞ்சம் வாங்குபவரைப் பிடிக்க உதவும் ஒரு போலீஸ்காரரைத் தம் கதையில் அறிமுகப்படுத்தியிருக்கும் ராஜ்கோகுல் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர். அவருக்குப் பரிசு கிடைத்ததில் ஆச்சர்யமே இல்லை.
நாகப்பட்டினம், நாகை சந்திரா.


◆ நடுத்தரக் குடும்பங்களில் கணவன், மனைவிக்கிடையே நிகழும் சிறுசிறு சண்டை, சச்சரவுகளை உணர்ச்சி பூர்வமாகச் சித்திரித்தது 'வீடு மனைவி மல்யுத்தம்' சிறுகதை.
போடிநாயக்கனூர், ரா. நாச்சிமுத்து.

◆ குழாயடிச் சண்டையை அப்பட்டமாகப் படம் பிடித்து விட்டீர்களே, சபாஷ்! புரியவில்லையா? மூப்பனார்-வாழப்பாடியார் கோஷ்டி மோதல் கார்ட்டூனைத்தான் சொல்கிறேன்.
பவித்தரமாணிக்கம், ஆர். பாஸ்கரன்.

◆ கவி சிவத்தின் புதிய தொடர் குறித்த அறிவிப்பில் "இளைஞன்" அர்ஜுனனுக்குக் கண்ணன் கீதை உபதேசித்ததாகக் குறிப்பிட்டுள்ளது. பதினாறு வயதான அபிமன்யுவுக்குத் தந்தையாக இருந்தவன் எப்படி இளைஞனாக இருக்க முடியும்?
சென்னை - 81, ரா. கணபதி.

(தோற்றத்தாலும் உள்ளத்தாலும் கண்ணனும் அர்ஜுனனும் இளைஞர்கள் என்ற கருத்தில்தான் அறிவிப்பு அமைந்துள்ளது. எந்த கீதோபதேசக் காட்சியும் அவர்களை வயதானவர்களாகச் சித்திரிப்பதில்லையே. மேலும் மகாபாரதக் காலத்தில் ஆயுட்காலமே மிக அதிகமல்லவா?
- ஆர்.)





• மணக்கால் பெருமாள் கோயில்

மங்காப்புகழ் பெற்ற மணக்கால்

• வீரமிகு நங்கை


நதிக்கரைகளில் அமைந்த கிராமங்களுக்குத் 'துறை' என்று முடியும் பெயர்கள் வழங்கும். காடுகளுக்கருகே இருந்த கிராமங்கள் 'சோலை' என்ற விகுதியுடைய பெயர்களைக் கொண்டு அமையும். 'கால்' என முடியும் பெயர்களுடைய ஊர்கள் வாய்க்கால்களின் அருகே அமைந்தனவாய் இருக்கும். அப்படியொரு சிற்றூர்தான் மணக்கால். திருச்சி மாவட்டத்தில் லால்குடி அருகே உள்ள இந்த ஊரின் பெயர்க் காரணம் குறித்து வேறொரு கதையும் சொல்லப்படுகிறது:

நாத முனிகள் என்ற வைணவ ஆசாரியரின் சீடர் உய்ய கொண்டார். தொண்டனுக்குத் தொண்டனாய் உய்ய கொண்டாருக்குப் பணிவிடைகள் செய்து வந்தார் ராமமிச்ரர். உய்ய கொண்டாரின் தாயில்லாத இரு பெண் குழந்தைகளையும் தாங்கிக் காத்தார் அவர். ஒரு முறை இக் குழந்தைகளை நீராட அழைத்துச் சென்று திரும்புகையில் ஒரு கால்வாய் எதிர்ப்பட்டது. கடும் கோடைக் காலம். கால்வாய் மணலில் கால் சுடுமே என்று குழந்தைகள் தயங்கி நின்றனர். ராமமிச்ரர் கால்வாய்க்குக் குறுக்காகத் தமது உடலைக் கிடத்தினார். குழந்தைகள் அவர் முதுகைப் பாலமாக பாவித்து மணலைக் கடந்தனர்.

ராமமிச்ரரின் அதி தீவிர குரு பக்தியைத் தெரிவிக்கும் இக் கதைதான் ஊருக்கு மணல்கால் (மணக்கால்) என்று பெயர் பெற்றுத் தந்ததாம். ராமமிச்ரர், மணக்கால் நம்பி என்று போற்றப்பட்டு வைணவ ஆசாரியராக அங்கீகாரம் பெற்றார். ஸ்ரீ ராமானுஜர் தமது குருவாகக் கொண்டு வணங்கிய ஆளவந்தார், மணக்கால் நம்பியின் சீடராக இருந்தவர்தான். நம்பியின் சிலை மணக்கால் பெருமாள் கோயிலின் மண்டப முகப்பில் இன்னமும் இருக்கிறது.

கோவிலில் இருக்கும் பெருமாளுக்கு 'வரத ராஜர்' என்ற திருநாமம். சிறிய கோவில் என்றாலும் களையாக இருக்கிறது. ஸ்ரீதேவி, பூதேவியுடன் அமர்ந்த திருக்கோலத்தில் காட்சி தருகிறார் வரதராஜ பெருமாள். ருக்மிணி கல்யாண உத்ஸவம் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்





• நதிக்கரை முருகன் கோயிலையொட்டி பாடசாலை



• ஸ்ரீதேவி - பூதேவியுடன் வரதராஜ பெருமாள்

படுவதாகக் கூறுகிறார், பட்டர் வரதராஜ ஐயங்கார். "தங்கள் பெண்களுக்குக் கல்யாணமாக வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டு, பெற்றோர்கள் இந்த கல்யாண உத்ஸவத்துக்குப் பருப்புத் தேங்காய் பிடித்து வைப்பார்கள்" என்கிறார்.

உத்ஸவ மூர்த்தங்களிடையே மணக்கால் நம்பியின் கம்பீரமான வெண்கலச் சிலையும் இருக்கிறது. சாந்தம் ததும்பும் முகம். கூப்பிய கரங்கள்; பக்தியில் லயித்த கண்கள்....

காஞ்சியில் ஒரு வரதராஜரும் ஒரு கைலாசநாதரும் இருப்பது போலவே மணக்காலிலும் இருக்கிறார்கள்! திரிபுரசுந்தரியுடன் உறை கைலாசநாதர் கோயில் சற்று ஒதுக்குப்புறமாய் அமைந்திருக்கிறது.

பாட்டன் கூட்டம், தீக்ஷிதர் கூட்டம் என்ற இரு வம்சத்தினரிடம் இக் கோயில் பராமரிப்புப் பொறுப்பு இருந்தது. இப்போது அக் கூட்டத்தினர் வெகுவாகக் குறைந்து போய் விட, அறநிலையத் துறை வசம் கோவில் விடப்பட்டுள்ளது. விரைவில் கும்பாபிஷேகம் நடக்க உள்ளது. சாரம் கட்டி பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விநாயகரும், தக்ஷிணா மூர்த்தியும் பிரதிஷ்டைக்குக் காத்திருக்கிறார்கள். துர்கா தேவிக்குத் தனி ஸந்நிதி அமைக்கப்படவுள்ளது.

"போதுமான அளவு பொருள் திரளாததால் கும்பாபிஷேகத்துக்கு நாள் குறிக்க முடியவில்லை. 'ம' (மணக்கால்) என்ற எழுத்தை இனிஷியலில் கொண்டுள்ள ஒவ்வொருவரும் கொஞ்சம் முனைந்தால் சீக்கிரமே கும்பாபிஷேகத்தை நடத்தி விடலாம்" என்கிறார் நாகராஜ சிவாச்சாரியார். இவர் மேற்பார்வையில்தான் கும்பாபிஷேகப் பணிகள் நடந்து வருகின்றன. இவரது தாத்தாவும், பின்னர் இவர் பெரியப்பாவும் இதே கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்துள்ளார்களாம்.

கைலாசநாதர் கோயிலின் உத்ஸவ சிறப்புகளைச் சொன்


• பக்தி வடிவாய் நம்பி



• கைலாசநாதர் கோயில் உத்ஸவர்கள்



கமலமனராஜன்



னார் நாகராஜ சிவாசாரியார் :

"ஐப்பசி மாதம் தீர்த்தவாரி நடக்கும். ஐப்பசி பௌர்ணமியன்று அன்னாபிஷேகம். மானுஷ லிங்கம் என்பதால் நந்திகேசுவரர் மகா மண்டபத்துக்கு வெளியே அதிகார நந்தியாக வீற்றிருக்கிறார். பலகணி வழியாக சிவலிங்க தரிசனம் செய்கிறார். இங்குள்ள நவக்கிரஹ சந்நிதி காஞ்சி முனிவர் சொல்படி அவர் முன்னிலையிலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது. சூரியன் நடுவிலிருக்க மற்ற எட்டுப் பேரும் அவரை நோக்கி அமர்ந்திருப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது.

கைலாசநாதர் கோயிலும் வளாகமும் இருந்த நிலையைக் கண்டு வருந்திய நமக்கு, விரைவில் கும்பாபிஷேகம் நடக்கவிருக்கும் செய்தி சற்றே ஆறுதல் அளித்தது.

மணக்கால் நங்கை இவ்வூரின் எல்லைத் தேவதை. கோயில் நல்ல பராமரிப்பில் பொலிவுடன் இருக்கிறது. பிணி தீர்க்கும் தெய்வமாகப் பெயர் பெற்றுவிட்ட நங்கையை நாடி மணக்கால்காரர்கள் உலகெங்கிலுமிருந்து வருகிறார்கள்; நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள். குழந்தை பிறந்ததும் அம்மன் சந்நிதியில் நெல்லைப் பரப்பி அதன் மீது குழந்தையைக் கிடத்தி பிரார்த்தனை செய்வதும் உண்டு.

ராகமாலிகையில் அம்பாளின் நாமங்களைச் சொல்லி குங்குமார்ச்சனை செய்கிறார் குருக்கள். மூல சந்நிதியில் ப்ராம்ஹி, மஹேசுவரி, வைஷ்ணவி, கௌமாரி, வாராஹி, இந்திராணி, சாமுண்டி என்ற சப்த கன்னிகைகள் வரிசையாக இருக்கிறார்கள். இவர்களுள் மையத்தில் இருக்கும் கௌமாரிதான் 'நங்கை' என வழிபடப்படுகிறாள். சப்த மாதர்களும் வெள்ளிக் கவசம் பூண்டு மின்னுகிறார்கள். மணக்கால் நங்கையின் உத்ஸவ மூர்த்தம், சிலிர்த்தெழும் கேசத்துடன், கைகளில் ஆயுதங்களும் முகத்தில் வீரமுமாக காவல் தெய்வத்தின் அனைத்து அடையாளங்களுடன் அமைந்திருக்கிறது.

அருகே கருப்பண்ணசாமிக்கு சந்நிதி இருக்கிறது. ஸ்தல விருட்சங்களான வேம்பும் நருவளியும் இருக்கின்றன.

நங்கை சந்நிதியையொட்டி சிறிய கருவறையில் உடல் சாய்ந்த நிலையில் ஒரு தனவணிகர் சிலை இருக்கிறது.

மஞ்சள் வியாபாரி உருவத்தில் மணக்காலுக்கு வந்த ஒரு மாந்திரிகரின் மனத்தில் தீய எண்ணம் எழுந்ததை உணர்ந்த சப்த கன்னிகைகள் அவரைச் சபித்து விட்டனர். அதனால் ஊனமுற்ற அவர் மன்னிப்பு வேண்ட, தங்கள் சந்நிதிக்கு அருகிலேயே இருக்கச் செய்தனர் என்பது நெடுநாளைய கதை. இந்த வணிகருக்கும் பூஜைகள் நடக்கின்றன. ஆனால் சிலையைத் தொடாமலேயே சந்தனம், வஸ்திரம் முதலானவற்றைச் சார்த்துகிறார்கள்!

வேகமாக நடந்தால் அரை மணி நேரத்தில் சுற்றி வந்துவிடக்கூடிய ஊர்தான் மணக்கால். ஆனால் அதற்குள்ளேயே எத்தனை கோயில்கள்! மேற் சொன்ன மூன்று கோயில்கள் தவிர, காயத்ரி நதிக் கரையில் முருகன் கோயில் வேறு இருக்கிறது. ராமஸ்வாமி அய்யர் என்பவரின் நிலத்தில் களத்து மேட்டைத் தோண்டும் போது கிடைத்தாராம் இந்த முருகர். குழந்தை பாக்கியம் இல்லாத ராமசாமி அய்யர் முருகன் சந்நிதிக்கு அருகே ஒரு வேத பாடசாலையும் கட்டுவித்தார். தமது முயற்சியில் ஏழு குழந்தைகளுக்கு அங்கு வேதம் படிக்க வசதிகள் செய்து கொடுத்தார். மகாலிங்க கனபாடிகள் என்ற பெரியவர் சுமார் ஐம்பது ஆண்டு காலம் இந்த பாடசாலையில் யஜுர் வேத பாடங்கள் நடத்தினார்.

மணக்காலின் புகழ், கோதண்டராம சுவாமி பஜனை மடம் மூலமாகவும் பரவியிருக்கிறது. ஒன்றரை ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குளத்தின் கரையில் இருந்தது இம் மடம். இதில் சனிக்கிழமை தோறும் பஜனையும் ஏகாதசியன்று சிறப்பு பஜனையும் நடக்கும். ராம நவமியின் போது பத்து நாட்கள் திருவிழா போலவே சம்பிரதாய பஜனைகள் நடத்துவார்கள். மெள்ள மெள்ள இந்த சம்பிரதாயங்கள் நின்று போய்விட்டதோடு கடந்த வருடம் வீசிய கடும் புயலில் பஜனை மண்டபமும் இடிந்து போய் விட்டது.

கைலாசநாதர் கோயில் கும்பாபிஷேகப் பணிகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து வரும் உள்ளூர்வாசிகள், பஜனை மண்டபத்தையும் சீர்ப்படுத்தி, அங்கு ராம நாம சங்கீர்த்தனம் மீண்டும் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணமும் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய திட்டங்கள் சீக்கிரம் நிறைவேற அந்த மணக்கால் நங்கையையே வேண்டிக் கொள்வோம்.

படங்கள் : **கோபிநாத்**

உங்கள் செல்வம் பெருக...

“நீங்கள் சிபாரிசு செய்யும் பங்குகளை எங்கே, எப்படி வாங்குவது?”; “ஷேர் என்றால் என்ன? டிபன்சர் என்றால் என்ன?” என்றெல்லாம் கேட்டு சிலர் கடிதங்கள் எழுதுகிறார்கள். இவர்கள் புதிய கல்கி வாசகர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் இவை பற்றி விரிவாக ஏற்கெனவே எழுதியுள்ளேன்.

சுருக்கமாகக் கூறுவது எனில், பங்குகள் (ஷேர்) என்பது ஒரு நிறுவனத்தின் மூலதனத்தில் பங்குபெறுவதாகும். ‘டிபன்சர்’ என்பது நிறுவனங்கள் வழங்கும் கடன் பத்திரங்கள். இவற்றுக்கு வட்டி உண்டு என்பது தவிர, சில டிபன்சர்கள் முழுமையாகவோ பகுதி அளவிலோ பங்குகளாக மாற்றிக் கொள்ளக் கூடிய வசதிகளுடன் வெளியிடப் பெறும். குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு நிறுவனம் கடனைத் திரும்பத் தந்து விடும். டிபன்சர்களில் ஒரு வசதி என்னவென்றால், ஓர் அவசரத்துக்குப் பணம் தேவையெனில் பங்குகள் போலவே டிபன்சர்களையும் பங்குச் சந்தையில் விற்றுக் காசாக்கலாம்.

ஒவ்வொரு பெரிய நகரிலும் பங்குத் தரகர்கள் இருப்பார்கள். அவர்களிடம் தொடர்பு கொண்டால் புதிய நிறுவனங்கள், அல்லது விரிவாக்கம் கருதி பங்கு மார்க்கெட்டுக்கு வரும் பழம்பெரும் நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் கிடைப்பதுடன், விண்ணப்பப் படிவங்களையும் பெறலாம். இப்படிவங்களை முதலில் பார்க்க தலை சுற்றும். காரணம் பொடி எழுத்துக்களில் ஏகப்பட்ட விவரங்கள் அச்சாகியிருக்கும். ஆனால் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்புவது ஒருமுறை பழகினால் எளிதாகி விடும். நாம் நஷ்டப்படாதிருக்க நல்ல நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துப் பங்குகளில் முதலீடு செய்வதுதான் சிக்கலான விஷயம். இதற்குத்தான் கல்கி, சில நிறுவனங்களை வாசகர்களுக்குச் சிபாரிசு செய்து உதவி வருகிறது.

இப்படியெல்லாம் சிரமப்படாமல் பங்கு மார்க்கெட்டிலிருந்து நாம் பயன் பெறவும் ஒரு வழி இருக்கிறது. அந்தச் சுலபமான வழி, மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனங்களில் முதலீடு செய்வதுதான். இவை என்ன செய்கின்றன? பொது மக்களுக்குப் பத்து ரூபாய் பெறுமானமுள்ள யூனிட்டுகளை விநியோகிக்கின்றன. அவரவர் வசதிக்கு ஏற்ப, 200, 500, 1000 என்று யூனிட்டுகளை வாங்கலாம். இப்படி சேகரிக்கப்படும் பணத்தை மியூச்சுவல் ஃபண்டுகள் 90 சதவீதம் வரை புதிய தொழிலகங்களில் பங்குகள் வாங்கி முதலீடு செய்கின்றன. இப் பங்குகளின் மதிப்பு நாளாவட்டத்தில் உயரும்போது நாம் வாங்கிய யூனிட்டுகளின் மதிப்பும் உயர்கிறது. மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் மியூச்சுவல் ஃபண்டுகள் கூடுதல் விலை தந்து (சில சமயம் மும்மடங்கு) யூனிட்களைத் திரும்பப் பெறத் தயாராக உள்ளன. இதில், ஆண்டுதோறும் டிவிடெண்ட் (லாபப் பங்கீடு) தரும் யூனிட்டுகள்; லாபப் பங்கீடு இன்றி மூலதனத்தின் மதிப்பை மட்டுமே பெருக்கிக் கொண்டு போய் கணிசமாகப் பணம் பெறக்கூடிய யூனிட்டுகள் என்று இரு வகை உண்டு. அவரவர் விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம்.

மியூச்சுவல் ஃபண்டுகளில் முன்பு யூனிட் டிரஸ்ட் மட்டுமே இருந்தது. இன்றும் இது தான் முன்னணியில் உள்ளது. ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்திய பிறகு, TAURUS Mutual, LIC Mutual, CRB Mutual, GIC Mutual, Kothari Pioneer Mutual என்று பல மியூச்சுவல் ஃபண்டுகள் தோன்றியுள்ளன.

பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்வதில் புதிய விதிமுறைப்படி குறைந்தபட்சம் 500 பங்குகளுக்கு விண்ணப்பித்து ரூ. 5000 செலுத்த வேண்டும். ஒரு நிறுவனம் ரூ. 10 கூடுதல் விலைக்கு பங்குகளை விநியோகித்தால் குறைந்தபட்சம் 300 பங்குகளுக்கு விண்ணப்பித்து ரூ. 6000 செலுத்த நேரும். மேலும் விகிதாசார முறைப்படி மிக அதிகமாகப் பங்குகளுக்கு விண்ணப்பிப்போருக்கே கூடுதல் பங்குகள் ஒதுக்கப்படுகின்றன. சிறு முதலீட்டாளருக்குப் பங்குகள் கிடைக்காமலே போகக்கூடும். இவையெல்லாம் சிறு முதலீட்டாளருக்கு இழைக்கப்படும் அநீதி என்பது ஒருபுறமிருக்க, இந்தச் சங்கடங்களிலிருந்து விடுபட்டு, சிறு முதலீட்டாளரும் பயன்பெற உதவுவது மியூச்சுவல் ஃபண்டுகள்தாம். நீங்களே நேரடியாக முதலீடு செய்வதற்குப் பதில் உங்கள் சார்பில் மியூச்சுவல் ஃபண்டுகள் பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்து உங்கள் செல்வம் பெருகச் செய்கின்றன.

— வி. கோபாலன்



அனுதாப வோட்டுக் கேட்காத அரசியல் வாரிசு!

நமது நாட்டைப் போலவே இலங்கையிலும் மூன்றாவது வாரிசு பிரதமராகி விட்டது! ஆம், பதினேழு ஆண்டுகளாக ஆட்சியில் அமர்ந்திருந்த ஐக்கிய தேசிய கட்சியை வீட்டுக்கு அனுப்பி விட்டு, ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது மக்கள் கூட்டணி. இலங்கையின் பிரதமராகப் பதவி ஏற்றிருக்கிறார், சந்திரிகா பண்டார நாயக குமாரதுங்கா.

அப்பா, அதன் பின் அம்மா, இப்போது மகள் என்று ஒரே குடும்பத்திலிருந்து ஸ்ரீலங்காவின் பிரதமராகியுள்ள மூன்றாவது நபர் என்ற சிறப்புக்குரியவர் சந்திரிகா.

சந்திரிகாவின் பதினான்காம் வயதில், அவருடைய தந்தை சாலமன் பண்டார நாயக ஒரு புத்த பிட்சுவால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1988 ல் சந்திரிகாவின் கணவர் விஜய குமாரதுங்காவும் 'ஜனதா விமுக்தி பெரமுன' என்ற சிங்கள தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களால் படுகொலை செய்யப்பட்டார். தீவிரவாதத்தின் நேரடி பாதிப்புக்குள்ளானவர் என்பதால், தீவிர வாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கவும், தமிழீழப் பிரச்னைக்குப் பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்வு காணவும், சந்திரிகா மனப்பூர்வ மாய் நடவடிக்கை எடுப்பார் என்று அனை வரும் எதிர்பார்க்கிறார்கள்.

பண்டார நாயக தம்பதிக்கு இரண்டு மகள், ஒரு மகன். மூத்தமகள் சுநேந்திராவுக்கு அரசியலில் ஆர்வமில்லை. மகன் அனுரா அரசியலில் நுழைந்து, எம்.பி. ஆக இருந்தவர். ஆனால், சந்திரிகாவுக்கோ, ஆரம்ப நாட்களில் அரசியலில் அத்தனை ஆர்வமில்லை. தொடக்கக் கல்வியை இலங்கையில் முடித்து விட்டு, மேற்படிப்புக்காக பிரான்ஸ் சென்றார். சோஷியாலஜி படித்து முடித்து, தாய்நாடு திரும்பிய பின்னர், அப்போது இலங்கையின் முன்னணி நடிகராய் இருந்த விஜய குமாரதுங்காவுக்கும் சந்திரிகாவுக்கும் காதல் மலர்ந்தது. இந்தக் காதலுக்கு சந்திரிகா வீட்டில் பலத்த எதிர்ப்பு. எதிர்ப்புகளை மீறித் திருமணம் நடந்தது.

விஜய குமாரதுங்கா, முதலில் மார்க்ஸிஸ்ட், சுதந்திரக் கட்சி என்று இருந்த பின்னர் இலங்கை மகாஜனக்கட்சி என்ற பெயரில் தனிக்கட்சி துவக்கினார். யாழ் தீபகர்ப்பத்தில் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி தமிழீழப் பிரச்னைக்குத் தீர்வு காண முயன்றதால், சிங்களத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார். இதனால் லண்டனுக்குப் போய்விட்டார் சந்திரிகா. அங்கிருந்த இரண்டாண்டுகளில், 'பொருளாதாரத்தில் உயர் பட்டப்படிப்பு முடித்தார்.

சந்திரிகாவுக்கு சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, ஜெர்மன், ரஷிய மொழிகள் தெரியும். டெல்லி, ஜவாஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் கௌரவ விரிவுரையாளராய் இருந்த அனுபவமும் இவருக்கு உண்டு. சந்திரிகாவுக்கு ஒரு மகள். பெயர் யசோதரா (14) ஒரு மகன் - விமுக்தி (12).

1992 ல் தாயகம் திரும்பி, தம் தாயாரின் கட்சியில் சேர்ந்து தீவிரமாய் அரசியலில் ஈடுபட்டார். தமக்குப் போட்டியாகத் தம் சகோதரி வந்து விட்டதாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் மகன் கருதத் துவங்கினார். இதனால் ஏற்பட்ட தகராறில் மகனா? மகளா? என்ற கேள்வி எழுந்த போது, 'மகளுக்குத் தம் ஆதரவை அளித்தார் தாய். மகன் தம் தாயின் கட்சியிலிருந்து விலகி, ஆளும் கட்சியாய் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார்.

சந்திரிகா, சென்ற ஆண்டு, நடந்த மகாணக் கவுன்சில் தேர்தலில் போட்டியிட்டு, மேற்கு மாகாணத்தின் முதல்வர் ஆனார். தமது தீவிர பிரசாரம் மூலம், கட்சிக்கு இந்தத் தேர்தலில் புதிய உத்வேகம் அளித்தார். இதோடு, இவர், தமது தந்தையோ, கணவரோ படுகொலை செய்யப்பட்டது குறித்துப் பிரசாரம் செய்து, அனுதாப வோட்டுகள் ஏதும் பெற முயற்சி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், இவர் பிரதமரான பிறகு தாமே சுயமாகச் சிந்தித்துச் செயல்படுவாரா அல்லது தாயின் கைப்பாவையாக ஆட்டி வைக்கப்படுவாரா என்று பலரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தே இவரது அரசியல் எதிர்காலம் அமையும் என்றும் கருதப்படுகிறது.

தொகுப்பு : ஜூலி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



சுவையான இல்லறத்திற்கு இவையும் வேண்டும்!

ஆம். இனிமையான இல்லறத்திற்கு அன்பு, அரவணைப்பு, பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல்-இப்படி உளம்சார்ந்த விஷயங்கள் மட்டும்தானா? உணவுசார்ந்த, அம்சங்களும் உள்ளனவே!

SMB ரவா, மைதா, கோதுமை மாவுகளில் பூரி, கேக், பப்ஸ், உப்புமா, பிரெட், ரவா இட்லி, ரவா லட்டு என்று விதவிதமாகச் சமைத்திடுங்கள். இனிய குடும்பவாழ்வுக்கு சுவையான அடித்தளம் அமைத்திடுங்கள்.

இப்பொழுது
பரிசோதிக்கப்பட்டு
நிருபணமான கூடுதல்
தரத்துடன் கிடைக்கிறது.

SMB மைதா, ரவை, கோதுமை மாவுகள்
1 கிலோ, ½ கிலோ பாலிதீன் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

SMB

சக்தி முருகன் ரோலர் ப்ளவர் மில்ஸ் (பி) லிட்

தபால் பெட்டி எண். 15, அவினாசி - 638 654,
கோயமுத்தூர் மாவட்டம். போன்: 2991, 2992



தரமென்றால் இதுதான் தரம். சுவையென்றால் இதுதான் சுவை

SASI / 509 / 94